404

திங்கள்

ஐப்பசி : : அணா 8

404
4-56

தீபாவளிப் பரிசு

★

பேசும் படம்

தீபாவளி மலர்

நவம்பர் 1956

★

ஏராளமான இயற்கை வர்ணப் படங்களுடனும் பல நூதன அம்சங்களுடனும் தயாராகி வருகிறது.

விலை ரூ. 1-4-0. ரிஜிஸ்டர் தபாலில் ரூ. 1-12-0

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்
17, ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

போன் : 63 தந்தி : SIMCO



தினம் குடிசைத் தொழிலாகத் தயாராகும் ஐந்து லக்ஷம் தீப்பெட்டிகளில் டஜன்களில் ரூ. 0-1-0 முதல் ரூ. 10–0–0 வரை கூபன்கள் வைத்திருக்கிறோம்.

எங்கள் 40 குச்சி கோபுரம் மார்க்; சிம்கோ ஊட் மார்க்; சிம்கோ சைக்கிள் மார்க்; மைனர் சைஸ் சீனா லேடி மார்க்; சிம்கோ 60 குச்சி வேட்டை சிங்கம் மார்க் தீக்குச்சிகள்-

- ★ நீண்ட நேரம் நின்று எரியக்கூடியவை.
- ★ பேய்க் காற்றுக்கும் அணையாமல் பொருத்தக் கூடியவை.
- ★ அடை மழைக்கும் குச்சி கழிவு இல்லாமல் பொருத்தக் கூடியவை.

சிம்கோ, சிவகாசி.

திங்கள் ★★★★★

மாதப் பத்திரிகை

சந்தா விவரம்

உள் நாடு ஒரு வருஷம்	ரூ.	6
,, அரை வருஷம்	ரூ.	3
வெளிநாடு ஒரு வருஷம்	ரூ.	8
தனிப்பிரதி விலை	அணா	8

விளம்பர விகிதம்

சாதாரண முழுப்பக்கம்	ரூ.	100
,, அரைப்பக்கம்	ரூ.	50
,, கால்பக்கம்	ரூ.	30
கடைசி அட்டை (மூவர்ணம்)	ரூ.	300
உள் அட்டை	ரூ.	150
முகப்புப் பக்கம்	ரூ.	150

கட்டுரையாளர்களுக்கு

'திங்கள்' பத்திரிகையில் பிரசுரம் செய்ய கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. நவீன முறையில் எழுதப்படும் கட்டுரைகளுக்கு முக்யத்துவம் அளிக்கப்படும். பழைய விஷயங்களானாலும் புதிய முறையில் எழுதப்பட வேண்டும். எல்லாவித ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கும் நமது பத்திரிகையில் இடம் உண்டு. சொந்த அனுபவங்களைப்பற்றி எழுதலாம். அதிசய சம்பவங்களைப்பற்றியும் கூறலாம். பிரசுரிக்கப்பட்ட எல்லாக் கட்டுரைகளுக்கும் சன்மானம் உண்டு. பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பப்பெற விரும்புவோர் போதிய தபால் தலைகள் அனுப்பி வைக்கவேண்டும்.

போட்டோ நிபுணர்களுக்கு

நீங்கள் எடுக்கும் போட்டோக்களை எங்கள் பார்வைக்கு அனுப்புங்கள். தனிப்பட்ட போட்டோக்கள் பத்திரிகையில் இடம்பெறாது. படக்கட்டுரைகளுக்கு ஏற்றதான தொடர் போட்டோக்கள் மட்டுமே எங்களுக்குத் தேவை. போட்டோக்களை அனுப்பும்போது அவற்றின் விளக்க உரைகளையும் அனுப்பி வைக்கவேண்டும்.

கடிதங்கள்

வியாபார சம்பந்தப்பட்ட கடிதங்கள், 'ராமநாத் பப்ளிகேஷன்ஸ் சென்னை-2' என்று விலாசமிட்டு எழுதப்பட வேண்டும்.

பிரசுரத்திற்காக அனுப்பப்படும் கட்டுரைகள், போட்டோக்கள் முதலியவற்றை ஆசிரியர், 'திங்கள்', சென்னை-2 என்று விலாசமிடவும். காரியாலய சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு காரியாலய உத்தியோகஸ்தர்களின் சொந்தப் பெயர்களில் கடிதப் போக்குவரத்து கூடாது.

'ஹாஸ்ய சம்பவம்', 'மறக்கமுடியாத சம்பவம்' குறித்து அனுப்பப்படும் விஷயதானங்கள் பற்றிய கடிதங்களுக்கு பதில் எழுத இயலாது.

காரியாலயம் :

17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

திங்கள்

அக்டோபர் 1956

ஆண்டு 1 ★ துன்முகி—ஐப்பசி ★ மாதம் - 10

இம்மாதம்

அஹிம்ஸாவாதியும் இலக்கிய மேதையும்	...	7
யுனெஸ்கோ	...	10
சென்னையின் கலங்கரை விளக்கு	...	16
அமெரிக்க ஜனாதிபதி பதவி	...	17
அனந்தசயனத்துடன் ஒருநாள்	...	26
அன்று 56 தேசம் இன்று ஐக்கிய இந்தியா	...	33
தமிழில் சிறுகதை	...	39
ஹைதராபாத்	...	43
ரிக்ஷா வண்டி	...	58
குதுப்மினார்	...	61
இரட்டைப்புலவர்கள்	...	65
அஸ்வமேதயாகம்	...	67
பாட்டு பிறந்த நேரம்	...	69
யானைகள்	...	73
வெங்காயம்	...	76
திருக்கழுக்குன்றம்	...	77
நிறங்கள் பேசினால்...?	...	82
சலவைசோப் உற்பத்தி	...	87
விக்ரமாதித்தன் கதையின் கருத்துகள்	...	89
திங்கள் ஒளியின் நன்மைகள்	...	92
விசித்திர மீன்கள்	...	98
அச்சின் கதை	...	100
மகாகவி மில்டன்	...	103
இந்திய நினைவுகள்	...	105

படக்கட்டுரை : ஹைதராபாத்

THINGAL, Tamil Monthly Magazine. Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 17, General Patters Road, Madras-2. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath.

திங்கள்

வணக்கம்

வருகிற ஜனவரிமாதம் இந்தியாவில் புதுராஜ்யங்கள் அமைய விருக்கின்றன. ஹைதராபாத் மூன்றாகப் பிரிக்கப்பட்டு, மூன்று ராஜ்யங்களுடன் தற்போது இணைக்கப்பட விருப்பதை யொட்டி, ஹைதராபாத் பற்றிய படக் கட்டுரையும், ‘அன்று 56 தேசங்கள் இன்று ஐக்கிய இந்தியா’ என்ற கட்டுரையும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

பல பிரபலஸ்தர்களுடன் ஒருநாள் கட்டுரை வரிசையில் லோகசபை சபாநாயகர் ஸ்ரீ அனந்தசயனத்தை “நந்தலால்” பேட்டி கண்டிருக்கிறார். சென்னைச் சுற்றுப்புறம் கட்டுரையில் திருக்கழுக்குன்றம் இத்திங்களில் இடம்பெற்றிருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதியின் தேர்தல் நவம்பர் முதல் வாரத்தில் நடைபெறவிருக்கிறது. முயற்சி செய்வோர் ஒவ்வொருவருக்கும் அப்பதவியைப் பெற வாய்ப்பு உண்டு என்பதை அக்கட்டுரை விளக்குகிறது. ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள இந்தியர்கள் இந்த விஷயத்தில் அமெரிக்கர்களை அவசியம் பின்பற்றவேண்டும்.

பிரபல ரஷ்ய எழுத்தாளர் இலியா எஹ்ரன்பர்க் இந்தியாவைப் பற்றி பல அரிய தகவல்களை ‘இந்திய நினைவுகள்’ என்ற கட்டுரையில் எழுதியிருக்கிறார். இவ்விதழில் அது புத்தகப் பகுதியாக இடம் பெற்றுள்ளது.

‘திங்களி’ன் வளர்ச்சி குறித்து அன்பர்கள் எழுதிவரும் பாராட்டுக் கடிதங்கள், எங்கள் முயற்சிக்கு ஊக்கம் அளித்து வருவது கண்டு எங்கள் நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். பத்து மாதக் குழந்தையான ‘திங்கள்’, வாசகர்களின் பூர்ண அன்பைப் பெற்று வளர்ந்து வருகிறது. ‘திங்களி’ன் ஒவ்வொரு மாதவளர்ச்சியிலும் அதனிடையே காணப்படும் மாறுதல்கள் மேலும் மேலும் நேயர்களை இதன் மேல் அபிமானம் கொள்ளச் செய்யும் என்றே நம்புகிறோம்.

திங்களுக்குத் திங்கள்

வரப்போகும் பொதுத் தேர்தல் சம்பந்தமாக நாட்டிலுள்ள பல்வேறு கட்சிகளும் மும்முரமான முஸ்தீபுகளில் இறங்க ஆரம்பித்து விட்டன. சென்னை ராஜ்ய அஸெம்பிளியின் 205 ஸ்தானங்களுக்கும், ரிசர்வ் ஸ்தானங்கள் உள்பட 41 பார்லிமெண்ட் ஸ்தானங்களுக்கும் காங்கிரஸ் போட்டியிடும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சிக்காக தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்களுள் நூற்றுக்கு 15 சத விகிதம் ஸ்திரீகளுக்காகவும், சிறுபான்மையினருக்காகவும் ஒதுக்க வேண்டுமென்றும் ஒரு நிபந்தனை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மற்றொன்று, இப்போது சட்டசபையில் ஸ்தானம் வகிப்பவர்களுள் மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்களை மறுபடியும் அபேட்சகர்களாகப் பொறுக்கக்கூடாது. பதவிக்கு புதிதாக பலர் வருவதற்கு இதன் மூலம் தடை ஏற்படுகிறது.

இவ்வளவு நிபந்தனைகளை முன் ஜாக்கிரதையாக செய்தவர்கள் அபேட்சகர்களுக்கு குறைந்த அளவு என்ன யோக்கியதாம்சம் இருக்க வேண்டும் என்பதை நிர்ணயிக்க மறந்து விட்டார்கள்.

* * *

பாரதநாட்டுப் பிரதமர் பண்டித நேரு ஸாவூதி அரேபியாவிற்குச் சென்றுவிட்டு திரும்பியிருக்கிறார். அரேபியர்கள், பர்தா ஸ்திரீகள் உள்பட பல்லாயிரக்கணக்கில் கூடி அவருக்கு அமோக வரவேற்பு அளித்திருக்கிறார்கள். நேருஜியை "ரஸூல் அல்ஸாம்" என்று கோஷித்து அராபியர்கள் வரவேற்றார்களாம். 'கடவுளின் புனிதமான தூதர்' என்று இதற்குப்பொருள். நேருஜி உலக சமாதானத்துக்காகப் பாடுபடுகிறவர். ஆகவே அராபியர்கள் அவரை புனித மனிதராகக் கருதியதில் ஆச்சரியமில்லை.

* * *

உணவுப் பொருள்களின் விலைவாசி இன்னும் குறைந்தபாடில்லை. மந்திரிகள், விலை குறைந்து விடும் என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தற்போதைய நிலைமை இன்னும் மோசமாகாமலிருக்க அரிசியை ஏற்றுமதி செய்யக் கூடாது என்று சர்க்கார் முழுத் தடை விதித்திருக்கிறார்கள்.

மர்ம மனிதனான நேதாஜி உயிருடன் இருக்கிறாரா, இல்லையா?

ஆனால் அதே சமயத்தில் அரிசியைக் கொண்டு செய்யப்படும் உணவுப் பண்டங்களை ஏற்றுமதி செய்ய அதிகாரிகள் அனுமதித்திருக்கிறார்கள். சர்க்காரின் இத்தகைய முரணான நடவடிக்கைகளும் வர்த்தகர்களின் பதுக்கல்களும் விலைவாசிகளை ஏற உதவி செய்கின்றன.

* * *

தமிழ் நாட்டின் வட எல்லை வேங்கடமாக இருக்க வேண்டும் என்பதுதான் தமிழர்களின் ஆசை. வேங்கட முதல் குமரி வரை என்று எல்லையை நிர்ணயித்திருப்பது இன்று நேற்று அல்ல. வேங்கடம்தான் தமிழ் நாட்டில் சேரவில்லை என்றாலும் குமரியாவது சேர்ந்ததே என்றுதான் சந்தோஷப்பட வேண்டும்.

எல்லைத் தகராறுகளைத் தீர்க்கக் கோரி தமிழரசுக் கழகம் சென்ற இரு வாரங்களுக்கு முன் கிளர்ச்சி செய்து தலைவர் ம. பொ. சி. உள்பட பலர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த விஷயமாக எல்லைக் கமிஷன்கள் நியமிக்கும் பேச்சே கிடையாது. மண்டல சபைகள் இந்த விஷயங்களை கவனிக்கும் என்று காங்கிரஸ் பொதுக் காரியதரிசி ஸ்ரீமன் நாராயணன் தெரிவித்திருக்கிறார்.

* * *

நியாய வாரச் சட்டம் சென்ற திங்களில் சென்னை சட்டசபையில் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இதன்படி நஞ்சை நில விளைச்சலில் 10-ல் 4 பங்கும், புஞ்சை நில விளைச்சலில் 3 பங்கும் இனி மேல் நிலச் சொந்தக்காரர்களுக்கு வாரமாக கிடைக்கும். இதுவரை சாகுபடியாளருக்குக் கிடைத்து வந்தது நிலச் சொந்தக்காரர்களுக்கு இனி கிடைக்கும் என்றே இதற்கு அர்த்தம்.

ராஜாஜி கொண்டு வந்த தஞ்சை பண்ணையாள் சட்டத்தில், விளைச்சலில் நிலக்காரருக்கு 10-ல் 6 பங்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்தச் சட்டத்தினால் சாகுபடியாளரின் வருமானம் உயரும். இது வரவேற்கத்தக்கதே. ஆனால் நிலத்தையே தன் ஜீவனோபாயத்திற்கு நம்பியிருக்கும் சிறு நிலச்சுவான்தார்களை இந்தச் சட்டம் பெரிதும் பாதிக்கலாம்.

* * *

நேதாஜி உயிருடன் இருக்கிறாரா? இல்லையா? இன்னும் இது பெரும் புதிராகவே இருக்கிறது. நேதாஜி இறந்து விட்டார் என்பது தெரிந்திருந்தும் சந்தேகத்திற்கு இடமின்றி இதை நிர்ணயிக்க இந்திய சர்க்கார் ஒரு விசாரணைக் கமிஷன் நியமித்தனர். இந்தக் கமிஷனில் நேதாஜியுடன் இந்திய தேசிய ராணுவத்தில் சேவை செய்த ஷாநவாஸும், நேதாஜியின் மூத்த சகோதரரும் இடம் பெற்றிருந்தனர். விசாரணைக்குப் பின் கமிட்டியிலுள்ள இரு அங்கத்தினர்கள் நேதாஜி உயிர் துறந்தது வாஸ்தவமே என்று குறிப்பிட்டிருக்கின்றனர். ஆனால் மூன்றாவது அங்கத்தினரான போஸின் சகோதரர், நேதாஜி இறந்ததாகத் தான் நம்பவில்லை என்று குறிப்பிட்டு இதற்கான சில காரணங்களையும் கூறியிருக்கிறார். இதற்கிடையில் நேதாஜியுடன் அடிக்கடி பேச்சு நடத்தி வருவதாக ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் குறிப்பிடுகிறார். நேதாஜி போஸ் விஷயம் எப்படியானாலும் இந்திய மக்கள் மனதில் அவர் சிரஞ்சீவியாக இடம் பெற்று விட்டார். ★

அஹிம்ஸாவாதியும் இலக்கியமேதையும்

(மகாத்மா காந்தியின் 87-வது பிறந்த நாள் விழாவை யொட்டி, யாஸ்நயா போல்யானுவில் டால்ஸ்டாய் மாளிகையிலுள்ள பொருட்காட்சி சாலையின் டைரக்டர் அலக்ஸான்டர் பொபோவ்கின் அளித்த பேட்டி)

"சத்திய சோதனை" என்ற தனது நூலிலே மகாத்மா காந்தி, டால்ஸ்டாயைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார். தனது காலத்தில் வாழ்ந்த பெரியார்களில் தனது சிந்தையையும் உள்ளத்தையும் பெரிதும் வசப் படுத்தியவர்களில் டால்ஸ்டாயும் ஒருவர் என்றும், குறிப்பாக "உன்னகத்தே உறைகிறான், இறைவன்" என்ற அவரது நூல் தன்னைப் பெரிதும் ஆட்கொண்டதாகவும் அவர் எழுதியுள்ளார்.

பல இடங்களில் காந்திஜீ அவர்கள், டால்ஸ்டாயைப் பற்றி மீண்டும் மீண்டும் குறிப்பிட்டு எழுதியுள்ளார். டால்ஸ்டாய் ஒரு "மாபெறும் தார்மீக சக்தி யாகத் திகழ்கிறார்" என்றும், "ரஷ்ய மாமேதை" என்றும் அவரை காந்திஜி போற்றியுள்ளார்.

19-ம் நூற்றாண்டின் இறுதியில், முற்போக்கு உள்ளம் கொண்ட இந்திய அறிவாளிகளிடையில், டால்ஸ்டாயிக்கு பெரும் மதிப்பும் பிராபல்யமும் அளிக்கப்பட்டன என்றால், அது மிகையாகாது. டால்ஸ்டாயின் நூல்கள் அநீதியையும் பலாத்காரத்தையும் மிகுந்த வன்மையாகக் கண்டித்தன. அநீதியும் பலாத்காரமும் எந்த விஷயத்திலும், எந்த முறையிலும் தலை தூக்குவதை அவர் தனது எழுத்தின் மூலம் சக்தி வாய்ந்த முறையில் கண்டித்தார். இதனால், இந்திய விடுதலை இயக்கத் தலைவர்கள் சிலருக்கு அவர் மிகவும் நெருங்கியவராக விளங்கினார். அதர்மத்தையும் அநீதியையும் சாத்வீக முறையில் எதிர்ப்பதுபற்றிய அவரது தத்துவ விசாரமும், மற்றும் அவரது சமயக்கருத்துக்களும், காந்திஜீயின் தலைமையிலிருந்த இந்திய விடுதலை இயக்கத்தினரைப் பெரிதும் கவர்ந்தது.

இந்திய மக்களின் எதிர்காலம்பற்றி டால்ஸ்டாய் பெரும் அக்கறையும் ஈடுபாடும் கொண்டிருந்தார். பலஇந்தியப் பிரமுகர்களுடன் கடிதப் போக்குவரத்துகள் நடத்தினார். அவர் தனது வாழ்நாளின் இறுதிப்பகுதியில் தனது தத்துவார்த்தக் கருத்துக்களை விவரித்து விளக்குவதிலும், அவற்றைப் பரப்புவதிலும் பெரும் கவனம் செலுத்தினார். அச்சமயத்தில்தான் அவர் காந்திஜீயுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்வது ஆரம்பமாயிற்று. 1909-ம் ஆண்டில், காந்திஜீதான் முதன் முதலில் டால்ஸ்டாய்க்கு கடிதம் எழுதினார். ஆனால் இந்த மனிதாபிமானிகள் இருவரும் நடத்திக் கொண்ட கடிதப் போக்கு

வரத்து, வெகு காலத்திற்கு நீடிக்கவில்லை. ஏனெனில் அதற்குப்பிறகு ஓராண்டும் சில மாதங்களும் முடிவதற்குள் டால்ஸ்டாயின் வாழ்க்கையே முடிந்து விட்டது. அதற்குள்ளாக அவர்களுக் கிடையில் நடைபெற்ற கடிதப் போக்கு வரத்து அதிகமில்லை என்றாலும் அவர்கள் பரிமாறிக் கொண்ட கடிதங்கள் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்குகின்றன. இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையில் உருவான கலாச்சார உறவுகளின் சில அம்சங்களைப் பற்றியும், இரு நாடுகளின் அறிவாளிப் பகுதிகள் சிலவற்றின் மத்தியில் எந்தெந்த பொருள்களைப் பற்றி ஆர்வம் மிகுந்திருந்தது என்பது போன்ற விஷயங்களைப் பற்றியும் அறிந்து கொள்வதற்கு அவை உதவுகின்றன.

மகாத்மா காந்தி எழுதிய முதல்கடிதமே, டால்ஸ்டாயின் உள்ளத்தைக்கவர்ந்துவிட்டது. டால்ஸ்டாய் எழுதியிருந்த, "இந்திய நண்பருக்குக் கடிதம்" என்ற கட்டுரையின் மொழி பெயர்ப்பை, இந்திய மக்களுக்காக வெளியிடுவதற்கு அனுமதிகோரி, மிகவும் சுருக்கமாக காந்திஜீ, டால்ஸ்டாயிக்கு கடிதம் எழுதினார். இதுதான் அவரது முதல் கடிதம். இந்தக் கடிதம் கிடைத்தவுடனே டால்ஸ்டாய் தனது குறிப்புப் புத்தகத்தில் பின்வருமாறு எழுதினார். "டிரான்ஸ்வாலிலுள்ள ஒரு இந்தியரிடமிருந்து அருமையானகடிதம் ஒன்று கிடைக்கப் பெற்றேன்". (அச்சமயத்தில், தென் ஆப்பிரிக்காவில் காலனி ஆட்சிக்கு எதிராக இந்திய மக்கள் நடத்திய போராட்டத்திற்கு காந்திஜீ வழிகாட்டிக் கொண்டிருந்தார் என்பதை அனைவருமே அறிவர்.)

காந்திஜீயின் முதல் கடிதத்தைக் கண்டவுடன் டால்ஸ்டாய் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார் என்பது தெளிவு.

அதற்குப் பிறகு பல மாதங்கள் கழித்து, *1910*-ம் ஆண்டு ஏப்ரலில், காந்திஜீ மீண்டும் டால்ஸ்டாயிக்கு ஒரு கடிதம் எழுதினார். இக்கடிதத்துடன், "இந்திய சுயாட்சி அல்லது இந்திய சுயராஜ்யம்" என்ற தலைப்பில் தான் வெளியிட்டிருந்த புத்தகம் ஒன்றின் பிரதியையும் டால்ஸ்டாய்க்கு அனுப்பி வைத்திருந்தார். இப்புத்தகம் டால்ஸ்டாயின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. தொலை தூரத்திலிருந்து தனக்குக் கடிதம் எழுதிய இந்திய நண்பரிடம் டால்ஸ்டாயின் அபிமானம், இதனால் மேலும் உயர்ந்தது எனலாம்.

காந்திஜீயின் கடிதத்திற்குப் பதில் எழுதுவதற்குமுன், அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் படித்து முடித்துவிட வேண்டும் என்று டால்ஸ்டாய் தீர்மானித்துக்கொண்டு, அவ்வாறே காந்திஜியின் வாழ்க்கை விபரங்களை விவரித்த புத்தகம் ஒன்றைப் படித்து முடித்தார்.

மகாத்மா காந்திக்கு டால்ஸ்டாய் இரண்டு கடிதங்கள் எழுதினார். இவற்றில், தானும் காந்திஜீயும் ஒருமித்த கருத்துடையவர்கள் என்ற பேரபிமானத்தையும் உறுதியான நம்பிக்கையையும் டால்ஸ்டாய் வெளிப்படுத்தியுள்ளார். இக்கடிதங்களின் வாயிலாக, அவர்கள் இருவருக்கும் இடையில் எந்த அளவுக்கு வேறுபாடுகள் உண்டு என்பதை நிர்ணயிப்பதற்கு டால்ஸ்டாய் முயன்றார். மேலும் பல்வேறு தத்துவார்த்தப் பிரச்னைகளைப்பற்றிய

தனது கருத்துக்களையும் அவர் விளக்கினார். குறிப்பாக இந்தியாவிற்கும் இந்தியர்களுக்கும் சம்பந்தப்பட்ட பிரச்னைகளைப் பற்றி தனது தத்துவார்த்த முடிவுகளை விவரித்தார். அதே சமயத்தில், தென் ஆப்ரிக்காவில் காந்திஜீ ஆற்றிய சேவையை அவர் பெரிதும் உயர்வாக மதிப்பிட்டு மெச்சினார். தென் ஆப்ரிக்கப் போராட்டத்தைப்பற்றிக்குறிப்பிட்டு, ''...இன்று மிகவும் முக்கியமானது...'' என்று அவர் எழுதினார்.

டால்ஸ்டாய் தனக்கு எழுதிய கடிதங்களுக்கு, குறிப்பாக அவரது மரணத்திற்கு சிறிது முன்பு எழுதிய நீண்டதொரு கடிதத்திற்கு, காந்திஜீ பெரும் முக்கியத்துவம் அளித்தார். இதன் மொழிபெயர்ப்பை அவர், ''இந்திய அபிப்பிராயம்'' என்ற தனது பத்திரிகையில் இரு முறை பிரசுரித்தார். டால்ஸ்டாய் இறந்தவுடன் 1910-ம் ஆண்டு நவம்பரில் ஒரு முறையும், அதற்குப் பல ஆண்டுகளுக்குப் பிறகு வெளியான தென் ஆப்ரிக்க இந்திய மக்களின் விடுதலைப்போராட்ட ''நினைவு மலரி''லும் இக்கடிதத்தை அவர் பிரசுரித்தார்.

இவ்விரு மேதைகளுக்கு இடையில் ஏற்பட்ட நேரடித் தொடர்பு, சில மாதங்களுக்கே நீடித்தது. இவர்கள் ஒருவரோடு ஒருவர் பெரிதும் வேறுபட்டவர்களாக விளங்கினர் என்றுதான் சொல்லவேண்டும். வரலாற்றிலே இவர்கள் இருவருடைய பெயரும் வெவ்வேறு துறைகளிலே மங்காத புகழ்பெற்று விளங்குகின்றன. டால்ஸ்டாய், எழுத்தாளர் என்ற முறையிலும், காந்திஜீ, அரசியல் தலைவர் என்ற முறையிலும் பிரபலமடைந்திருக்கின்றனர். இருப்பினும், இவ்விருவரும் தலைசிறந்த மனிதாபிமானிகளாக மக்களின்பால் பேரன்பு கொண்டவர்களாகத் திகழ்வதைக் காண்கிறோம். இவ்வகையில் அவர்கள், ஒருமித்த உளப்பாங்குடைய இரட்டையர்கள் என்று கூறத்தக்கவர்களே. இவர்களுக்கிடையில் தோன்றிய நேசத்தொடர்பு டால்ஸ்டாயின் மரணத்தால் திடீரென்று துண்டிக்கப்பட்டது. டால்ஸ்டாய் இறந்த பல ஆண்டுகளுக்குப் பிறகு காந்திஜீயையும் நாம் இழந்துவிட்டோம். ★

''நாம் பெரியவராக வேண்டும் என்று எவ்வளவு முயல்கிறோமோ, அதேபோல் நல்லவராக வேண்டும் என்று முயன்றோமானால், நல்லவராகி உண்மையில் பெரியவரும் ஆவோம்'' என்று இலக்கிய மேதை டால்ஸ்டாய் கூறும் இதே கருத்தை, அஹிம்ஸாவாதி மகாத்மா, ''தைரியசாலிகளும் ஞானிகளும் இரக்கங்கொள்ளவும் மன்னிக்கவும செய்வர்; கோழைகளும் மூடர்களுமே இரக்கங் காட்டுவதில்லை,'' என்று அழகுற கூறியிருக்கிறார்.

"யுனெஸ்கோ"

டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார்

''யுனெஸ்கோ''வின் ஒன்பதாவது பொது மகாநாடு புது டில்லியில் 1956 நவம்பர் 5-ந் தேதி ஆரம்பமாகி, சுமார் ஒரு மாத காலம் நடைபெறும். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

தெற்கு, தென்-கிழக்கு ஆசியாவில் சரித்திரத்திலேயே முதல் தடவையாக, சர்வதேச மகாநாடொன்று இப்பிரதேசத்தில் இவ்வருஷம் நவம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கிறது. அதாவது ''யுனெஸ்கோ'' ஸ்தாபனத்தின் ஒன்பதாவது பொதுக்கூட்டத்தை புது டில்லியில் நடத்த ஏற்பாடாகியுள்ளது. இந்த ஸ்தாபனம், ஐ. நா. ஸ்தாபன ஆதரவின் கீழ் ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்ட விசேஷ ஸ்தாபனங்களில் ஒன்றாகும். இதன் தலைமைக் காரியால்யம் பாரிஸில் இருந்து வந்த போதிலும் இதன் மகாநாடுகள் உலகத்தின் இதர நாடுகளில் அவ்வப்போது நடைபெற்று வந்திருக்கின்றன. ''யுனெஸ்கோ'' ஸ்தாபனம், பீரட், பிளாரன்ஸ், மெக்சிகோ, மான்டிவிடியா ஆகிய விடங்களில் ஏற்கெனவே கூடியிருக்கிறது. இந்தியாவில் அது கூடுவது இதுவே முதல் தடவையாகும். 1946-ம் ஆண்டிலிருந்து 1952 வரை ''யுனெஸ்கோ'' ஸ்தாபனத்தின் மகாநாடுகள் வருஷா வருஷம் நடைபெற்று வந்தன. அதன் பின்னர் இரண்டு வருஷத்திற்கொரு முறை அதன் மகாநாட்டைக் கூட்டுவதென முடிவு செய்யப்பட்டது. அதையொட்டி எட்டாவது மகாநாடு 1954-ல் மான்டிவிடியோவில் நடைபெற்றது. ஒன்பதாவது மகாநாட்டை புது டில்லியில் 1956-ல் கூட்ட ஏற்பாடாகியுள்ளது.

இந்த ஸ்தாபனத்தில் மொத்தம் 80 நாடுகள் அங்கம் வகித்து வருகின்றன. இதில் அங்கம் வகிக்கும் நாடு ஒவ்வொன்றும் ஐந்து பிரதிநிதிகளையும், ஐந்து மாற்றுப் பிரதிநிதிகளையும், மற்றும் ஆலோசகர்களையும் கலந்து கொள்ளுவதற்காக அனுப்பி வைக்கலாம். கல்வி, விஞ்ஞானம், சமூக விஞ்ஞானங்கள், கலாச்சார நடவடிக்கைகள் ஆகிய துறைகளில் பல பிரபலஸ்தர்களை வரவேற்று, உபசரிக்கும் வாய்ப்பும் இந்தியாவுக்கு இப்பொழுது முதல் தடவையாகக் கிடைத்திருக்கிறது.

வேலை முறை

''யுனெஸ்கோ' ஸ்தாபனத்துக்கு பாரிஸில் உள்ள தலைமைக் காரியாலயத்திலும், மற்றும் பல்வேறு நிலையங்களிலும், பல பிரிவுகள் வேலை செய்து வருகின்றன. சில குறிப்பிட்ட வேலைத் திட்டங்களைமேற்கொள்ளுவதற்கான கிளை ஸ்தாபனங்களும் இருந்து வருகின்றன. டைரக்டர்-ஜெனரல் ஒருவர் ''யுனெஸ்கோ'' ஸ்தாபனத்துக்குத் தலைமை வகித்து வருகிறார். அவருக்கு உதவியாக மூன்று உதவி டைரக்டர் ஜெனரல்களும், ஸ்தாபனம் மேற்கொள்ளும் விசேஷ அலுவல் ஒவ்வொன்றுக்கும் பல டைரக்டர்களும் வேலை பார்த்து வருகின்றனர். கல்வி, விஞ்ஞானம், சமூக விஞ்ஞானங்கள், கலாச்சார நடவடிக்கைகள், பெருவாரி செய்திப் போக்குவரத்து, சிப்பந்திகள் பிரிவு ஆகிய பல இலாக்காக்கள் இந்த அலுவல்களைக் கவனித்து வருகின்றன. இவ்வேலைகளின் மேற்பார்வைக்காக, நிர்வாக போர்டு ஒன்றை மகாநாடு தெரிந்தெடுத்து வருகிறது. இந்த போர்டில் தற்போது 22 பேர் உள்ளனர். சம்பந்தப்பட்ட நாடுகளின் சர்க்கார்கள் நியமித்தனுப்பும் அங்கத்தினர்களிலிருந்து இவர்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். மகாநாட்டில்

அலுவல் திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு இந்த நிர்வாக போர்டைச் சேர்ந்ததாகும்.

''யுனெஸ்கோ'' ஸ்தாபனத்துக்கு, உலக சுகாதார ஸ்தாபனத்துக்கு உள்ளதைப் போல பிராந்திய ஸ்தாபனங்கள் எவையும் இல்லையென்ற போதிலும், ஸ்தாபனத்தின் அங்கம் வகிக்கும் பல்வேறு நாடுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள தேசிய கமிஷன்களின் மூலம் அது செவ்வனே வேலை நடத்தி வருகிறது. ''யுனெஸ்கோ'' ஸ்தாபனம் சம்பந்தப்பட்ட பல்வேறு விஷயங்களைக் கவனித்து வருவதற்காக, தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இக்கமிஷன்களில் அங்கம் வகிக்கின்றனர். இக்கமிஷன்கள் வருஷத்துக்கு ஒருமுறையேனும் கூடி, ஸ்தாபனத்தின் வேலை நடவடிக்கைகள் பற்றித் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதுடன், வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி யோசனைகளையும் கூறி வருகின்றன.

ஒன்பதாவது கூட்டத்தின் அலுவல் திட்டம்

மகாநாட்டில் ஒன்பதாவது கூட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் அலுவல்களில், 1957-58-ம் ஆண்டுகளுக்கான வேலைத் திட்டம், மற்றும் அவ்வருஷத்துக்கான செலவு மதிப்பீடுகள் ஆகியவற்றின் பரிசீலனை பிரதான அம்சமாக இருக்கும். பொது மகாநாட்டிலும், இனி அமைக்கப்படவிருக்கும் பல்வேறு கமிஷன்களிலும், கமிட்டிகளிலும் தலைமை வகிப்பதற்காகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் பெயர்களை, நியமனங்களுக்கான கமிட்டி சிபாரிசு செய்யும். பொது மகாநாடு, தலைவர் ஒருவரையும், பத்து உப-தலைவர்களையும் தெரிந்தெடுக்கும். தெரிந்தெடுக்கப்படும் தலைவரை. மகாநாடு நடைபெறும் நாட்டின் பிரதிநிதிகள் கோஷ்டியிலிருந்து தெரிந்தெடுத்து வருவது சம்பிரதாயமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அலுவல் திட்டக் கமிட்டி, நிர்வாகக் கமிட்டி, சட்டத்துறை கமிட்டி, அங்கம் வகிக்கும் நாடுகளின் அறிக்கைகளைப் பரிசீலனை செய்வதற்கான கமிட்டி ஆகியவை மகாநாட்டின் வேலைகளில் பெரும்பகுதிக்குப் பொறுப்பு வகித்துவரும். இவை ஒவ்வொன்றுக்கும் தலைவர் ஒருவரும், தொடர்பு அதிகாரி ஒருவரும், இரண்டு உப-தலைவர்களும் இருப்பார்கள்.

கமிட்டிகளில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் யாவும் அங்கீகரிக்கப் படுவதற்காக, பொது மகாநாட்டின் ஆரம்பக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

கடந்த சில வருஷங்களில், ''யுனெஸ்கோ'' ஸ்தாபனத்தின் வேலை நடவடிக்கைகள் பெரிதும் விரிவடைந்துள்ளன. பல்வேறு விஷயங்களைக் கவனித்து வருவதற்காக நிபுணர்கமிட்டிகள் நியமிக்கப்பட்டுள்ளன. சர்வதேச ஸ்தாபனங்களிடம் ''யுனெஸ்கோ'' ஸ்தாபனம் ஒப்படைத்துள்ள வேலைத் திட்டங்களுக்காகவும், அந்த ஸ்தாபனங்கள் திறம்படவேலை செய்து வருவதற்காகவும் நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது, இது வகையில் கிட்டத்தட்ட பத்து லட்சம் டாலர் வரை நிதி உதவியாக வழங்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் சார்பற்ற நூறுக்குமேற்பட்ட பல சர்வதேச ஸ்தாபனங்களுக்கு 'யுனெஸ்கோ'' ஸ்தாபனம் அங்கீகாரம் அளித்திருக்கிறது.

சென்ற பத்து வருஷகாலத்தில், பல்வேறு நாடுகளில், விசேஷமாக, முற்றிலும் அபிவிருத்தியடையாத, மற்றும் அவ்வளவாக அபிவிருத்தியடையாத நாடுகளின் பல்வேறு நடவடிக்கைகளில் ஊக்கமேற்படுத்தி வருவதற்காக யுனெஸ்கோ ஸ்தாபனம் எவ்வளவோ செய்திருக்கிறது. யுனெஸ்கோ ஸ்தாபனத்தைச் சேர்ந்த கல்வித்துறை டைரக்டர் காரியாலயத்தின் மூலம், ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், ஆதாரக் கல்விக்கான தேசிய நிலையங்களுக்கு உதவியளித்துவருவதற்காகவும், மெக்ஸிகோவிலும் எகிப்திலும் இரண்டு சர்வதேச ஆதாரக்கல்வி நிலையங்களை அது ஏற்படுத்தியிருக்கிறது. அணுசக்தியின் ஆக்கவேலை உப

யோகங்களுக்காக ஸ்விட்ஜர்லாந்தில் சர்வதேச நிலையமொன்றையும் அது ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச களிப்பு நிலையமொன்று இத்தாலியில் ஏற்படுத்தப்படவிருக்கிறது. சமூக விஞ்ஞானங்களுக்கான சர்வதேச நிலையமொன்று கல்கத்தாவில் சமீபத்தில் திறந்துவைக்கப்பட்டது.

இந்தியாவும் "யுனெஸ்கோ" ஸ்தாபனமும்

ஐ. நா. ஸ்தாபனத்திலும், அதன் அங்கங்களான விசேஷ ஸ்தாபனங்களிலும் இந்தியா எத்தகைய பங்கெடுத்து வந்திருக்கிறது, இந்த ஸ்தாபனங்கள் வெற்றிகரமாக வேலை செய்துவருவதற்கு அது என்ன சாதித்திருக்கிறது, என்று அடிக்கடி நாம் கேள்விப்பட்டு வருகிறோம்.

சர்வதேச சமாதானத்துக்கும், பாதுகாப்புக்கும், மானிட சமுதாயத்தில் தேகாரோக்கியத்துக்கும், சந்துஷ்டிக்கும், மக்களின் க்ஷேம நலனுக்கும், தன்னாலியன்ற சேவையை செய்து வருவதற்காக இத்தகைய பல்வேறு ஸ்தாபனங்களிலும் இந்தியா பெரும்வேலைப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டிருக்கிறது. முக்கியமாக, "யுனெஸ்கோ" ஸ்தாபனத்தில் நம்நாட்டின் பெருமக்களில் ஒருவர் தலைமைவகித்து வந்திருக்கிறார். அதன் நிர்வாக போர்டின் தலைவர்களாக இரண்டு இந்தியர்கள் பதவி வகித்து வந்திருக்கின்றனர். பாமர மக்களுக்கு எதிராகவும், ஸ்திரீகள், குழந்தை ஆகியோர் மீதும் பிரயோகித்து வருவதனாலோ உலகத்தைப் பூரண அழிவிலிருந்து பாதுகாப்பது சாத்தியமில்லை யென்பதே இந்தியாவின் திடமான நம்பிக்கை. இந்த ஸ்தாபனங்கள் யாவும் உலக ஒற்றுமைக்கும்நேசபாவத்தைநிலை நாட்டவுமே பாடுபட்டு வருகின்றன. உலகின் உய்விற்கு இம்மாதிரி ஸ்தாபனங்களின் சேவை இன்றியமையாதது என்பதை யுனெஸ்கோ நிரூபிக்கிறது.

(ரேடியோப் பிரசங்கம்)

அயல்நாட்டுப் பிரமுகர்

கிளமென்ட் அட்லி

இந்தியாவிற்கு சுதந்திரம் அளிப்பதற்குக் காரணமாயிருந்த பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர் கிளமென்ட் அட்லி, தற்போது சேன்னைக்கு விஜயம் செய்திருக்கிறார்.

நீண்ட காலம் பிரிட்டிஷ் அரசியலில் பணியாற்றிய இவர், பார்லிமெண்ட் எதிர்கட்சி தலைமைப் பதவியிலிருந்தும், பார்லிமெண்டரி தொழிற் கட்சி தலைமைப் பதவியிலிருந்தும் 1955 டிஸம்பரில் விலகிக் கொண்டார்.

இவர் 1883 ஜனவரி 3-ந் தேதி லண்டன் ஸொலிஸிடர் ஹென்றி ஆட்லியின் நாலாவது குமாரராகப் பிறந்தார்.

முதல் உலக மகா யுத்தத்தில் இவர் தென் லங்காஷயர் ரெஜிமெண்டில் சேர்ந்து, பல போர் முனைகளில் போரில் சேவை செய்திருக்கிறார். ஸ்டெப்னியின் முதல் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் இவரே.

ராம்ஸே மாக்டனல்டின் அந்தரங்கக் காரியதரிசியாகவும் 1924-ல் யுத்த உதவி மந்திரியாகவும் இருந்திருக்கிறார். 1827-ம் வருஷம் முதற் கொண்டே இந்தியாவின் விஷயங்களில் இவர் அக்கறை காட்டலானார். இந்தியாவிற்கு சுயாட்சி தர வேண்டுமென்பதை வற்புறுத்தியவர்களில் இவர் ஒருவர். இவர் பிரதமராக வருவதற்கு முன் பல முக்கிய பதவிகளை வகித்திருக்கிறார். 1945-ம் ஆண்டு ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் அட்லி கலந்து கொண்டார். 1945 ஜூலை 26-ந் தேதி அட்லி தன் மந்திரி சபையை அமைத்தார். 1945—51 வரை இவருடைய சர்க்கார் பதவியிலிருந்தது. இவர் ஆட்சி காலத்தில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மூன்றும் காமன்வெல்த்தில் சேராத சுதந்திர நாடாக இருந்தன.

சுதந்திர இந்தியா எவ்வாறு முன்னேறிக் கொண்டிருப்பதை அறிய வேண்டும் என்ற ஆவலிலேயே அட்லி இவ்விந்திய விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார். ★

தீபாவளி

(சுப்ரமண்ய பாரதி)

நமது நேயர்களுக்கெல்லாம் கங்கா ஸ்நான பலன் கிடைத்தது பற்றி மகிழ்ச்சி அறிவிக்கிறோம்.

சரீர சுத்தியுடன் மன சுத்தியும் ஆத்மசுத்தியும், அவர்களுக்கு பிராப்தியாக வேண்டும் என்று விரும்புகிறோம்.

தற்காலத்தில் ஹிந்து ஜனங்களின் ஆத்மாவைப் பற்றியிருக்கும் அழுக்குகளாகிய பயம், அதைரியம் முதலியவை எல்லாம் அகன்று அவர்கள் ஒளி மிகுந்த உள்ளத்தவர்களாகி விளங்க வேண்டும் என்பதே நம் கோரிக்கை.

நமது நாட்டைப் பற்றிய நரகாசுரன் இறந்து போய் விட்டான்.

பகவானுடைய சக்தியும் எல்லா ஐஸ்வரியங்களுக்கும் ஆதாரமாகிய லக்ஷ்மி நம்மீது கருணை கொண்டு நரகாசுரனை வதைத்து விட்டாள்.

நாம் எல்லோரும் அதுபற்றி சந்தோஷம் அடைந்து மங்கள ஸ்நானம் செய்து, நல்லாடைகள் புனைந்து, ஆனந்த வசமாகி யிருக்கிறோம்.

ஆனால் சிறு குழந்தைகளைப் போல் விளையாட்டுக்கு ஸ்நானம் செய்தும், தீபங்கள் கொளுத்தியும் சும்மாயிருந்துவிடாமல், நாம் செய்யும் செய்கையானது பொருளை நன்றாக அறிந்து காரியங்கள் செய்வதாக இருக்க வேண்டும்.

எத்தனை தரம் கொன்ற போதிலும் மறுபடியும், மறுபடியும் உயிர் தரிப்பது ராக்ஷஸர்களுடைய சுபாவம். அவர்களுடைய மர்ம ஸ்தலத்தை அழித்த பிறகுதான் அவர்கள் மடிவார்கள்.

அதுபோலவே, லக்ஷ்மி தேவி நரகாசுரனை வதைத்த உடனேயே நாம் அவனுடைய மர்ம ஸ்தலத்தை நன்றாக அறிந்து அதைத் தாக்காமல் இருப்போமானால் யாதொரு பிரயோஜனமும் கிடையாது. தீபாவளி தினத்திலேகூட அந்நிய தேசத் துணிகள் வாங்கும் துரோகிகள் இருப்பார்களானால், நரகாசுரன் எப்படி அழிவான்? லக்ஷ்மி தேவி எப்படி ஜெயமடைவாள்? மகா வீரத்தன்மை பெற்று அஷ்ட லக்ஷ்மிகளுக்கும் இருப்பிடமாகி விளங்குவதற்குரிய வழிகளைத் தேடுங்கள். உங்களுக்கெல்லாம் சர்வ பீஷ்டங்களும் சித்தியடைவதாக!

''வந்தே மாதரம்''

(இந்தியா)

நம் நாட்டின் தேசீயப் பண்டிகை

தனுசு

தீபாவளி பண்டிகைதான் நம் நாட்டின்தேசியப்பண்டிகை. அன்று ஏழைகளும் பணக்காரர்களும் மங்கள ஸ்நானம் செய்து, புத்தாடை உடுத்தி, விருந்துண்டு மகிழ்ச்சியடைவார்கள். புது மாப்பிள்ளைகள் தலை தீபாவளியை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு வேட்டகத்துக்கு 'வேட்டை' யாடவும் போவார்கள்.

மகாபலி என்ற வள்ளலிடம் மூன்றடி மண்வேண்டுமென்று வாமனன் யாசகம் கேட்டதும், பிறகு மகாபலியைப் பாதாளத்திற்கு அனுப்பியதும் இந்த சதுர்த்தசி விரதத்தின் போது தானும். மகாராஷ்டிர தேசத்தில் இக்கதை வழங்கப்படுகிறது. மகாராஷ்டிரப் பெண்மணிகள் அன்று மாவினுல் மகாபலிபோல உருவம்செய்து, மாவிளக்கு போட்டு பூஜைசெய்வார்கள். 'மீண்டும் மகாபலி உலகுக்கு வரவேண்டும்; அக்கிரமங்கள் ஒழிய வேண்டும்' என்று அவர்கள் மந்திரங்கள் ஜபிப்பார்கள். ஆனுல் மகாபலி மோட்ச மடைந்ததை நாம் கார்த்திகை மாதத்தில் தீபத்தின்போது கொண்டாடுகிறேம்.

ஜைன மதத்தினர், தங்கள் குருநாதர் ஞானஒளி பரப்பி ஜோதி மயமான தினம் இந்த தீபாவளியன்று தான் என்று கூறுகின்றனர். ஏராளமான விளக்குகளை ஏற்றிவைத்து, குருநாதனைப் பூஜிக்கின்றனர்.

ஆர்ய சமாஜிகளின் ஆதிகுருவான தயானந்த சரஸ்வதியின் புண்யதினமும் தீபாவளியன்றுதான். ஆகவே அவர்களும் இந்த தினத்தை விசேஷமாகக் கொண்டாடுகின்றனர்.

மகாகாளி இன்றைய தினத்தில் லட்சுமி அம்சமாக உலகுக்குவந்து அழகான ரூபத்துடன் ஆனந்த தாண்டவம் புரிகிருள் என்று வங்காளிகள் கதைகூறுகின்றனர். இவர்கள் தீபாவளியன்று தட்டு தட்டாக ரூபாய்களை வைத்து பூஜிக்கின்றனர்.

பித்ரு தேவதைகளுக்கு ஆறு மாதம் ஒருஇரவு என்றும் ஆறு மாதம் ஒருபகல் என்றும் நம்பிக்கை இருந்து வருகிறது. பித்ருக்களின் இரவு தீபாவளியன்றுதான் ஆரம்பமாகிறது. அன்று வங்காளிகள் தீவட்டிகளை கொளுத்துவார்கள். பித்ரு தேவதைகளுக்கு வழிகாட்டுவதற்காக அதை ஏற்றுகிருர்களாம். அன்றைய தினத்தில் சில வங்காளிகள் சிரார்த்தமும் செய்வதுண்டு.

விக்ரமாதித்ய மகாராஜனும் தீபாவளியன்றுதான் உஜ்ஜயினியில் முடிசூட்டிக் கொண்டான். ஆகவே விக்ரமசகாப்தம் அன்றுதான் ஆரம்பமாகிறது. அதையொட்டியே வடஇந்தியாவில் தீபாவளியை வருஷப் பிறப்பென்று கூறுகின்றனர். அன்றுதான் புதுக்கணக்கு ஆரம்பிப்பார்கள்.

தமிழ் நாட்டில் தீபாவளி கொண்டாடுவதே தனியழகு. விடியற்காலையில் எழுந்து, கங்கா ஸ்நானம் செய்து, புத்தாடை உடுத்தி, பட்டாசுகள் வெடித்து குதூகலமாக இருப்பார்கள் தமிழர்கள். ★

அட்டைப் படம்:

சென்னையின் கலங்கரை விளக்கு

சென்னை நகரத்திற்கே தனி அழகைக்கொடுப்பதுடன் இதர நாடுகளுடன் வர்த்தகத்தில் இந்நகரத் தொடர்புக்கு ஒரு சின்னமாக விளங்கி வருகிறது சென்னையின் கலங்கரை விளக்கு ('லைட் ஹவுஸ்').

உலகிலேயே ஏற்பட்ட முதல் 'லைட் ஹவுஸ்' கி. மு. 300-ல் அலெக்ஸாண்டிரியா வளைகுடாவிலுள்ள ஒரு தீவில் கட்டப்பட்டது. இதன் உயரம் 500 அடி. டாலமி என்ற மன்னர் இதைக் கட்டினார். இந்த ஸ்தூபி மீது கட்டைகள் போட்டு எரிய விடும் தீ வெளிச்சம் சுமார் 30 மைல் தூரத்திற்கு தெரிவதுண்டாம். உலகின் அன்றைய எட்டு அதிசயங்களில் இது ஒன்றாகக் கருதப்பட்டு வந்தது.

16வது நூற்றாண்டுக்குப் பின்னர்தான் மெழுகுவர்த்தி அல்லது எண்ணெய் விளக்குகள் ஏற்றும் வழக்கம் ஏற்பட்டது. சென்னை 'லைட் ஹவுஸ்'க்கு அருகில் உயரமான ஒரு கல் தூணைக் காணலாம். 1841-ல் ஏற்பட்ட இது, 1892 வரை அதாவது ஹைக்கோர்ட் கட்டப்படும் வரை 'லைட் ஹவுஸாக' இருந்துவந்தது. அக்காலத்தில் தேங்காய் எண்ணெயைக் கொண்டு விளக்கு ஏற்றப்பட்டு வந்தாலும், 17 மைல்களுக்கு அப்பாலும் வெளிச்சம் தெரிந்து வந்திருக்கிறது. 1952-ம் வருஷம் வரை எண்ணெய்தான் விளக்கெரிக்க உபயோகிக்கப்பட்டு வந்தது, அதன்பின்தான் மின்சாரம் உபயோகிக்கப்படலாயிற்று.



முன்பு இருந்த 'லைட் ஹவுஸ்'

சென்னை கலங்கரை விளக்கு ஸ்தம்பத்தின் உயரம் 160 அடி.

1955-56 வருடங்களில் யூனியன் லைட்ஹவுஸ் இலாக்கா 22 கோடி ரூபாய் செலவில் 25 கலங்கரை விளக்கங்களை இந்தியாவில் கட்டி முடித்திருக்கிறது. மேலும் எட்டு கலங்கரை விளக்குகள் கட்ட இந்த இலாக்கா தீர்மானித்துள்ளது. ஸ்வீடனிலிருந்து தருவிக்கப்பட்டுள்ள கைதேர்ந்த இன்ஜினீயர் ஒருவரின் மேற்பார்வையில் இக்கலங்கரை விளக்கங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

சென்னை உயர் நீதி மன்றத்தின் மீது அமைந்திருக்கிறது இக்கலங்கரை விளக்கம். இவ்விளக்கின் ஒளிக்கதிர்கள் இருளை விரட்டி ஒளியைப் பரப்புவது போல, நீதிமன்றம் அநீதியை ஒழித்து, நீதியை நிலை நாட்டுவதால் அங்கு இந்த 'லைட் ஹவுஸ்' இருப்பது பொருத்தமாகும். ★

அமெரிக்க ஜனாதிபதி பதவி

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இவ்வருடம் நவம்பர் மாதம் ஜனாதிபதி பதவிக்கு தேர்தல் நடைபெறவிருக்கிறது. சென்ற தேர்தலில் போட்டியிட்ட ஐஸன்ஹோவரும் அடலாய் ஸ்டீவன்ஸனும் இத்தடவையும் போட்டியிடுகிறார்கள். அப்பதவியைப் பற்றியது இக்கட்டுரை.



முதல் ஜனாதிபதி வாஷிங்டன்



லிங்கன்

பதிகள் பழங்காலத்தில் குடிபுகுந்த பணக்காரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். ஏனெனில் சுதந்தரம், பிறர் ஆதிக்கம் அற்ற நிலை பெறுவதற்காக நடந்த போராட்டத்தில் தலைவர்களை அளித்த சமூகப் பிரிவு இதுவே.

பிறகு இப்போக்கு மாறி, பல ஜனாதிபதிகள் குறைந்தவருமான, மத்தியதர வருமானப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். பணக்காரர் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவது மிக அபூர்வமாகும். ஹெர்பர்ட் ஹூவர் இத்தகைய பிரிவைச் சேர்ந்தவர் ஆவார். ஆனால் அவர் கருமான் மகனாக வறுமைக் குடும்பத்தில் பிறந்தவர்; ஒரு சுரங்க என்ஜினியராகப் பெருஞ் செல்வம் சம்பாதித்தவர்.

ஜனாதிபதி ஐஸன்ஹோவரின் பெற்றோரும் எளியவர்களே. ஏழு பிள்ளைகளில் ஒருவராகப் பிறந்த இவர், தம் பெற்றோர்கள் டெக்ஸாஸிலிருந்து கான்ஸாஸுக்கு வந்த பொழுது ஒரு குழந்தையாக இருந்தார். அவருடைய தகப்பனார் அங்கு பால் எடு எடுக்கும் உற்பத்தி சாலையில் வேலை செய்து வந்தார்.

ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன் ஹாரி எஸ். ட்ரூமன் ரயில்வே டைம்கீப்பர், மருந்துக்கடை குமாஸ்தா, பாங்கு உதவியாளர் ஆகிய பல துறைகளில் வேலை செய்தவர். முதலாவது உலக யுத்தம் நடைபெற்ற பொழுது அவர் வெளிநாடுகளில் சேவை செய்தார். பிறகு ஒரு ஆண்டு துணிக் கடையை நடத்தினார். குடும்பப் பண்ணையிலும் வேலை செய்தார். மிஸௌரியில் பல அலுவலகங்களில் வேலை செய்து, சட்டம் பயின்று, 1934 ல் அமெரிக்க செனட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகுதான் தேசியத் தலைமைப் பதவி அவருக்குக் கிடைத்தது.

கால்வின் கூலிட்ஜ் தம் பாட்டனாரின் பொது மளிகைக்கடைக்கு அருகே ஒரு சிறு குடிசையில் பிறந்தவர். அவரும் எளிய நிலைமை

மேடிஸன்

"நீ ஒரு நாள் ஜனாதிபதியானாலும் ஆகலாம்'' என்று, தம் பிள்ளைகள் நன்றாக நடந்து கொள்வதற்கு அமெரிக்கப் பெற்றோர்கள் தலைமுறை தலைமுறையாக ஊக்கமளித்து வருகின்றனர்.

இத்தகைய சொல் அரைகுறை அக்கறையோடு சொல்லப்படுவது தான்; ஆயினும் இக்கனவு நனவாகக் கூடுமென்பதற்கு எப்பொழுதும் வாய்ப்பு இருக்கின்றது. மிக எளிய நிலையிலிருந்து நாட்டின் மிகவும் பெரிய பதவிக்கு வரும் சந்தர்ப்பம் அமெரிக்கா வரலாற்றில் எப்போதும் வழக்கமான தொன்றாகும்.

ஜனாதிபதிப் பதவிக்கு வந்துள்ள 34 அமெரிக்கரின் வாழ்க்கை வரலாறுகளும், வெற்றியடைவதற்கு நிதியோ, சமூக அந்தஸ்தோ அவசியமில்லை என்பதையும், அமெரிக்க மக்கள் தங்கள் தலைவர்களை அவர்களின் தகுதியைப் பொறுத்தே தேர்ந்தெடுக்கின்றனர் என்பதையும் அது அவர்களுக்கு மூதாதையரிடமிருந்து கிடைத்துள்ள அந்தஸ்தைப் பொறுத்தது அல்ல என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன.

ஜான் ஆடம்ஸ்

ஜெபர்ஸன்

மற்றத்துறைகளிலுள்ள தலைவர்களைப் போலவே ஜனாதிபதிகளின் வாழ்க்கைகளும் அமெரிக்க வாழ்க்கை முறையின் பலதரப்பட்ட அமைப்புகளை எடுத்துக் காட்டுகின்றன. விவசாயிகளும், வக்கீல்களும், ஆசிரியர்களும், ராணுவத்தினரும் பத்திரிகையாளர்களும் இப்பதவிக்கு வந்துள்ளனர். பல ஜனாதிபதிகள் கல்லூரிப் பட்டதாரிகள். சிலர் ஏழையாக இருந்து, பள்ளிக்கூடக் கட்டணமளிக்கப் படிக்கும்போதே வேலையும் செய்யவேண்டியிருந்தவர்கள்.

ஏழைகளுக்கும் இடமுண்டு

பாமர மக்களிடையிலிருந்து ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் வழக்கம் அமெரிக்கக் குடியரசு ஏற்பட்டதிலிருந்து தொடங்கவில்லை. முதலாவது, பல ஜனாதி



ஹாமில்டன்

யிலுள்ள குடும்பத்தில்தான் வாழ்க்கையை ஆரம்பித்தார்.

தியடோர் ரூஸ்வெல்ட் நியூயார்க்கிலும் வில்லியம் ஹவார்டு டாப்ட், ஸின்ஸினாட்டியிலும் ஆக இரண்டு அமெரிக்க ஜனாதிபதிகள்தான் பெரும் நகரங்களில் பிறந்தவர்கள். மற்றவர்கள் சிறு நகரங்களிலும், பண்ணைகளிலும் அல்லது எல்லைக் காடுகளிலும்தான் பிறந்தனர்.

ஆன்ட்ரு ஜாக்ஸன் என்பவர் பிறந்த இடம் ஒரு எல்லை முகாமாக இருந்தது. 17ம் வயதில் பெற்றோரை இழந்தாலும் போர் வீரர், ராஜதந்திர நிபுணர் என்ற முறையில் அவர் பேரும் புகழும் அடைந்தார். ஜனாதிபதி ஜாக்கரிடெய்லர் சிறு குழந்தையாக இருந்தபொழுது அவருடைய பெற்றோர்கள் அவரை மாட்டு வண்டி மூலமாக வெர்ஜீனியாவிலிருந்து கென்டக்கியில் லூயிவில்லியில் அபிவிருத்தி அடையாத ஒரு பிரதேசத்துக்கு நூற்றுக்கணக்கான மைல் எடுத்துச் சென்றனர்.

மில்லார்டு பில்மோர், ஜேம்ஸ் புக்கானன், ஆபிரஹாம் லிங்கன், ஜேம்ஸ் ஏ. கார்பீல்டு ஆகிய நான்கு அமெரிக்க ஜனாதிபதிகளும் மரக்கட்டைகளால் தயாரிக்கப்பட்ட ஒரு அறை விடுதிகளில் தான் பிறந்தனர். செஸ்டர் ஏ. ஆர்தர் என்பவர் சிறு மர வீட்டில் பிறந்தவர்தான். இந்நாட்டின் ஆரம்ப காலத்தில் ஆயிரக்கணக்கான அமெரிக்கக் குடும்பத்தினர் தங்கிய மர வீடுகளைவிட ஒரு சிறிதே பெரியது இது.

லிங்கனின் சாதனை

இவர்களில் லிங்கன் தான் மிகப் பிரபலமானவர். ஏனெனில் பல எதிர்ப்புக்களை சமாளித்து, தம் வாழ்க்கையை ஆரம்பித்த இவர் மற்ற எந்த அமெரிக்க ஜனாதிபதியும் அடையாததுபோன்ற மகத்தான சாதனையுடன் பிரதம நிர்வாகியின் பதவியை விட்டு விலகினார். தாம் கல்வி பெறு

ஹூவர்

வதற்கு லிங்கன் கையாண்ட முயற்சிகள், கட்டை உடைப்பவர். கிடங்கு குமாஸ்தா. தபால் அதிகாரி, பொது நிர்வாகி ஆகிய அவர்செய்த உத்தியோகங்கள் தற்பொழுது உலக சரித்திரமாக மாறியுள்ளன.

உயர்வைக் கோருகின்ற பத்திரிகையாளர்கள் வாரன் ஜி. ஹார்டிங் உதாரணத்தை கவனிக்கலாம். சிறு பையனாக இருக்கும்பொழுது இவர் அச்சுத்தொழிலைக் கற்றுக் கொண்டார். இளைஞராக இருக்கும் பொழுது ஒரு சிறு தினசரியில் வேலை செய்து மற்றொரு நண்பருடன் அவ்வெளியீட்டை வாங்கினார்.

அமெரிக்க ஜனாதிபதிகளின் நீண்ட பட்டியலை கவனித்துப் பார்க்கையில் சுதந்தரமாகவும் இருப்பதற்கு எல்லா மக்களுக்கும் இருக்கும் உரிமை 1789 ல் நாட்டின் முதலாவது ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன் பதவியேற்றபொழுது



ரூஸ்வெல்ட்

ட்ரூமன்

இருந்ததைப் போலவே இப்பொழுதும் இருப்பது தெளிவாகத் தெரிகிறது. வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலிருந்தும் பல்வேறு சமுதாய அமைப்பிலிருந்தும் வரும் ஜனாதிபதிகள் ஜனநாயகத்தின் வாழும் பிரதிபிம்பமாகத் திகழ்கின்றனர். நாட்டு மக்களின் தலைவர்களாகவும் பணியாட்களாகவும் அவர்கள் இருக்கின்றனர்.

பொறுப்புகள்

அமெரிக்க ஜனாதிபதி பதவி அதிகமான பொறுப்புக்களும் கடுமையான உழைப்பும், நெடுநேர வேலையும் உள்ள ஒன்று. ஆதலால், அப்பதவி வகிப்பது உலகத்திலுள்ள மிகக் கஷ்டமான அலுவல் எனப்படுகிறது.

ஜனாதிபதி அமெரிக்க மக்களின் தலைவரும் ஊழியருமாக விளங்குவோராவார். இந்நிலையில் அவர் வேறு வேலைகள் செய்வதுமல்லாமல், நிர்வாக வேலையின் பெரும் பகுதியையும் நடத்த வேண்டும்.



அவருக்கு உதவி செய்ய உதவி ஆட்கள் இருப்பினும், அவர் மாத்திரம் செய்யக்கூடிய சில வேலைகள் உள்ளன. உதாரணமாக, முன்னாள் ஜனாதிபதி ஹாரி எஸ். ட்ரூமன் ஜனாதிபதி என்ற முறையில் கடிதங்களிலும் பத்திரங்களிலும் நாளொன்றுக்குச் சாரசரி 600 தடவைகள் தாம் கையொப்பம் வைத்ததாகச் சொன்னார்.

தேர்தல் பிரசாரத்திற்கு நிதி திரட்ட விருந்து

ஐஸன்ஹோவர்

அடலாய் ஸ்டீவன்ஸன்

இவர்களில் யார் வெற்றி பெறுவார்கள் ?

மன்னர், தளபதி எல்லாம்...

1789 ல் ஜார்ஜ் வாஷிங்டன் முதல் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதுமுதல் இந்தப் பதவியின் பொறுப்புக்கள் அதிகமாகிக் கொண்டே வந்துள்ளன. முக்கிய நிர்வாக அதிகாரியாகிய ஜனாதிபதி ஒரு மன்னர்க்குரிய சடங்கு வைபவங்களை நடத்த வேண்டும்; ஒரு பிரதம மந்திரிக்குரிய அரசாங்க நிர்வாக வேலையைப் பார்க்க வேண்டும்; தலைமைத் தளபதியாக ராணுவங்களுக்குக் கட்டளை விடுக்க வேண்டும்; தன் கட்சியின் தலைவராகவும் இருக்க வேண்டும். ஜனாதிபதி வெளிநாடுகளிலிருந்து வரும் எண்ணிறந்த பிரமுகர்களையும், அமெரிக்கப் பிரஜைகளையும் பார்க்கவேண்டும்: அரசாங்க ஸ்தாபனங்களின் தலைவர்களோடு நாள்தோறும் பேச வேண்டும்; நாட்டிலும் வெளி நாடுகளிலும் நடைபெறும் விஷயங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு, எண்ணிறந்த அறிக்கைகளையும், வேண்டுகோள்களையும், பத்திரங்களையும் படித்தல் வேண்டும். 60 க்குமேற்பட்ட இலாக்காக்களும் ஸ்தாபனங்களும் இப்பொழுது தங்கள் அறிக்கைகளை ஜனாதிபதிக்கு அனுப்புகின்றன.

அமெரிக்கச் சட்டத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கடமைகளையும் அதிகாரங்களையும் வேலைகளையும் ஜனாதிபதி செய்ய வேண்டுமென்று விதிக்கும் 800 பிரிவுகள் உள்ளன என்று அரசியல் விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளார்கள், இவற்றுள் பலவற்றை அவர் மற்றவர்களுக்கு வழங்கலாம்; ஆயினும் அவை செம்மையாக நடைபெறுவதற்கு அவரே பொறுப்பாளி ஆவார். ஜனாதிபதியின் வேலைப் பளுவைக் குறைக்கப் பல ஆலோசனைகள் சொல்லப்பட்டுள்ளன. ஆயினும் அவற்றுள் ஒன்றும் நிர்வாகப் பிரிவின் அங்கீகாரமாவது சட்டப் பிரிவின் அங்கீகாரமாவது பெறவில்லை.

ஜனாதிபதி விடுமுறை எடுத்துக் கொண்டு, வாஷிங்டனை விட்டுச் சென்றாலும், வேலைப் பளுவுக்கு அவர் தப்ப முடியாது. அவருக்கு விஷயங்களைத் தெரிவிப்பதற்கு விசேஷ டெலிபோன், தந்தி முதலியவை ஏற்பாடு செய்யப்படுகின்றன. பைபையாகத் தபாலும் பத்திரங்களும் அவருக்குப் பின்னாலேயே விமானத்தில் செல்லுகின்றன. வருஷத்துக்கு ஏறக்குறைய 20 லக்ஷம் தந்திகளும் கடிதங்களும் ஜனாதிபதி மாளிகைக்கு வந்து விழுகின்றன. அவற்றுள் சிலவே முக்கிய நிர்வாகியிடம் போகின்றன என்றாலும் ஆயிரக்கணக்கானவைகளை அவரே பார்த்துப் பதில் விடுக்கவேண்டும்.

தேசிய வரவு செலவுத் திட்டம் தயார் செய்வதில் அவர் செய்ய வேண்டிய முடிவுகள் மிக மிக முக்கியமானவை.

முக்கிய அரசாங்க அதிகாரிகளை நியமித்தல், கட்சித் தலைவர்களோடு பேசுதல், தம் கொள்கைகளை மக்களுக்கு விளக்கி விரிவுரைகள் செய்தல் போன்ற கடமைகளைச் செய்வதுமல்லாமல், ஜனாதிபதி இன்னின்ன சட்டங்கள் தேவை என்று சட்டசபைக்கு புதுச் சட்டங்களை இயற்றுமாறு சிபார்சு செய்வதாகிய முக்கிய கடமையையும் செய்ய வேண்டும். எண்ணிறந்த மசோதாக்கள் சட்டங்கள் ஆவதற்கும் அவர் கையொப்பம் வைத்தல் வேண்டும்.

ஜனாதிபதி பதவியின் வேலை மிகுதியைப் பற்றி வரலாற்று ஆசிரியர் ஒருவர் பின்வருமாறு சொன்னார்: ''ஜனாதிபதி மாளிகையில் அன்றாட நிகழ்ச்சிகளைப் படிப்போர், இவ்வேலையை மனித சக்திக்கு மேற்பட்ட சக்தியுள்ள ஒருவரே செய்ய முடியும் என்று உணராமலிருக்க முடியாது''.

ஆயினும் இவையெல்லாம் அமெரிக்கரை இந்தப் பதவியை நாடாதவாறு தடுப்பதில்லை.

அமெரிக்க ஜனாதிபதிகள்
படங்கள் உதவியவர்:
'' யூஸிஸ் ''

விவசாயப் பழமொழிகள்

1. அகல உழுவதைவிட ஆழ உழு.
2. ஆடி ஒருகுழி அவரை போட்டால் கார்த்திகை ஒரு சட்டிக் கறி.
3. ஆடிப்பட்டம் தேடி விதை.
4. ஆடிப்புழுதி ஆவணிசேறு.
5. ஆடுமிதியாக் கொல்லையும் ஆணில்லாப் பெண்ணும் வீண்.
6. ஆழ உழுதாலும் அடுக்க உழு.
7. ஆனி அடைசாரல், ஆவணி முச்சாரல்.
8. உடையவன் பாராப்பயிர் ஆகுமா ?
9. உரம் ஏற்றி உழவு செய்.
10. உழவுக் கேற்ற கொழு.
11. உழுகிற நாளில் ஊரைவிட்டுப் போனல், அறுக்கிற நாளில் ஆளே தேடவேண்டாம்.
12. உழுது அலர்ந்து பழுதாகாது.
13. எருது இளைத்தால் எல்லாம் இளைக்கும்.
14. ஓதுவாரெல்லாம் உழுவான தலைக்கடையில்.
15. களை எடுக்காதான் கபோதி.
16. குப்பை உயர்ந்தால் குடிஉயரும்.
17. கொள்ளு வெள்ளாமை கொள்ளை வெள்ளாமை.
18. கார்த்திகை பிறந்தால் கைநாற்றை எறிந்துவிடு.
19. சித்திரை மழை பெய்தால் பொன்னேர் கட்டலாம்.
20. சித்திரை மாதத்துப் புழுதி பத்தரை மாற்றுத் தங்கம்.
21. சோளப்பயிரை மேய்ந்த எருதுக்கு சுவர்க்க லோகம் வேண்டுமா ?
22. தண்ணீரில்லாத வெள்ளாமையும் தாணுழாத நிலமும் தரிசு.
23. தை ஈனுப்புல்லுமில்லை, மாசி ஈனு மரமும் இல்லை.
24. நாத்து முப்பது ; சாத்து முப்பது.
25. நீர் பெருத்தால் நெல் சிறுக்கும்.
26. பயிர் பார்க்காமல் கெட்டது ; கடன் கேட்காமல் கெட்டது.
27. பருவத்திலே பயிர் செய்.
28. மாசிஎள் மடியிற்பணம்.
29. மார்கழி மழை மண்ணுக்குதவாது.
30. எமன் ஒருவனைக் கொல்லும் ஏற்றம் ஐவரைக் கொல்லும்.
31. விதை முதல் அகப்பட்டாலும் வேளாண்மையைக் கைவிடாதே.

அனந்தசயனத்துடன் ஒருநாள்...

"நந்தலால்"

பெயர் மட்டும்தான் அனந்த சயனமே யொழிய மனுஷன் மிக சுறுசுறுப்புள்ளவர். லோக சபையின் சபாநாயகர் பதவிக்கு மிகவும் ஏற்றவர் அவரேதான். லோக சபையை நடத்தும் சபாநாயகருக்கு ஒரு ஆசிரியருக்கு இருக்க வேண்டிய பொறுமை, ஹாஸ்யத்தன்மை, சாதுர்யம் இவ்வளவும் வேண்டும். இவ்வளவு திறன்களேயும் ஒருங்கே படைத்தவர் ஸ்ரீ அனந்தசயனம்.

அவரைச் சந்தித்து பேட்டியளிக்கவும் படங்கள் எடுக்கவும் அனுமதி கேட்ட போது மலர்ந்த முகத்துடன், ''வாப்பா, வாயேன்'' என்று அன்பு கலந்த முறையில் அவர் பதில் வந்தது, என்னேப் பரவசப் படுத்திவிட்டது. ஏனெனில் அரசியல் பிரமுகர்கள் யாரும் அம்மாதிரி சாதாரணமாக இருப்பது வழக்கமில்லே.

இன்று அவர் ஒரு முக்கியமான பதவியை வகிக்கிருர் என்ருல் அதற்கு அவர் கொள்கைக்காக எதையும் தியாகம் செய்யக்கூடியவர் என்பதே காரணம். அவர் இஷ்டப்பட்டிருந்தால் வழக்கறிஞராக சேவை செய்தபோது ஏராளமான பணத்தை சம்பாதித்திருக்கலாம். ஆனல் அவர் கொள்கையை விட்டுக்கொடுக்க இஷ்டப்படவில்லே. திருப்பதி மகந்துவின் அக்கிரமங்கள் எல்லே கடந்து போனதை யறிந்த அவர் மகந்துக்காக எந்த வழக்குகளிலும் ஆஜராக விரும்பவில்லே. வக்கீல் அறையில் தன் குருவான துரைசாமி அய்யங்கார் மகந்துவுக்காக வாதாட முன்வந்த போது இவர் தன் குருவை எதிர்த்து நின்று ஆஜராஞர்.

மன்னன் பேச ஆரம்பித்தாரென்ருல் பேசிக்கொண்டேயிருப்பார். ஆனல் ''போர்'' அடிக்காது. மிக சுவாரஸ்யமாக இருக்கும் பேச்சு. கேட்டுக்கொண்டே இருக்கலாம். தன் தாய்ப் பாஷை தமிழ் என்ருலும் தெலுங்கு நன்ருய் பேசுவதாகவும் ஆங்கிலம், ஹிந்தி நன்ருகத் தெரியும் என்றும் கன்னடம், மலேயாளத்தில் பரிச்சயம் உண்டென்றும் அவர் கூறிஞர்.



காலேயில் பத்திரிகை படிக்கிருர்



வந்திருப்பவர்களுக்கு பேட்டி

மணிக்கணக்காக அலுப்பு தட்டாமல் பேசுவதில் அனந்தசயனம் மகா சமர்த்தர்.

இவர் உலகமுழுவதையுமே தன் குடும்பமாக கருதும் பரந்த நோக்கமுடையவர். இவர் சமஸ்கிருதத்தில் மிகத்தேர்ந்தவர். இவர் தகப்பனர் சமஸ்கிருதத்தில் மகா பண்டிதர்.

அனந்தசயனம் தன் 13-வது வயதிலேயே தகப்பனரை இழந்தார். பி. ஏ. பட்டம் பெற்றபின் அவர் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயராக சிறிது காலம் சேவை செய்தார்.



சிரமபரிகாரம் செய்துகொள்ளுகிருர்.

பார்லிமெண்டுக்குப் புறப்பட்டு விட்டார்

திருச்சி சிறையில் இருந்தபோது வைதிக காரியங்களுக் கெல்லாம் தலைமை வகித்து நடத்தி வைத்தவர் ஸ்ரீ அனந்த சயனம்தான்.

அவர் மிக எளிதில் எதையும் புரிந்து கொண்டு பதிலளிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். இதைப்பற்றி நேரில் அறிந்து கொள்ள லோக் சபையில் அவரைப் பார்க்க வேண்டும். சபையில் எப்போதும் சுறுசுறுப்பு காணும்படிச் செய்வதில் இவர் மிகக்கெட்டிக்காரர். இவர் இருக்கும் இடத்தில் கலகலப்பு இருந்து கொண்டே இருக்கும்.

இவரைப் பேட்டிகண்ட

காரியாலய ஊழியர்களுடன் அனந்தசயனம்

அன்று இவரைக்காண பலர் வந்திருந்தனர். அவ்வளவு பேர்களையும் வைத்துக் கொண்டு எனக்காக அவர் வாழ்க்கை விவரங்களை கூற ஆரம்பித்து விட்டார். அவ்வளவு பேர்களும் அவருடைய வரலாற்று சுவாரஸ்யத்தில் தாங்கள் வந்த காரியத்தைக் கூட மறந்துவிட்டார்கள்.

சபாநாயகர்கள் தேர்தல்களில் போட்டியிட நேரும்போது எதிர் கட்சியினர் அவர்களை எதிர்த்து போட்டியிடக் கூடாது என்ற சம்பிரதாயத் தகைக் கடைபிடிக்க வேண்டும் என்று இவர் வற்புறுத்தினர். இம்மாதிரி சம்பிரதாயம் பிரிட்டனில் இருக்கிறது. சபாநாயகர்களை ஒரு கட்சியாளராகச் செய்யக்கூடாது என்பதே இதன் நோக்கம் என்று அவர் விளக்கினார். தென்னிந்தியர்களுக்கு முக்கிய பதவிக்கு அடுத்த பதவிதான் கொடுக்கப் படுகிறது என்ற குறை கூறப் பட்டுவந்ததுண்டு, ஒரு தென்னிந்தியர் லோக்சபையின் சபாநாயகர். மற்றொரு தென்னிந்தியர் ராஜ்ய சபையின் சபாநாயகர். இதன் மூலம் இக்குறை நீங்கிவிட்டது.

போட்டோக்கள்:

டி. ஐ. சந்தாமியான்

வெற்றிக்கு வழி

வாழ்க்கையில் வெற்றிகாண ஸ்ரீ அனந்தசயனம் ஒரு வழி கூறுகிறார். அதை எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவருடைய யோசனை இது தான்.

"உங்கள் ஜூனியர்களை உங்களை மிஞ்சவிட்டு விடாதீர்கள். அதே சமயத்தில் உங்கள் முன் புள்ளவர்களை எட்டிப்பிடிக்க முயலுங்கள். உங்களுக்கு கீழ் உள்ளவர்கள் உங்களைப் புறக் கணித்து முன்னேறி விட்டால், பின்னர் நீங்கள் தலை தூக்கவே முடியாது. இது வக்கீல் தொழிலில் உள்ளவர்களுக்கு மட்டுமின்றி எல்லாத் துறையிலுமுள்ளவர்களுக்கும் பொருந்தும்.

***

"ஸ்ரீ அனந்த சயனம் அய்யங்கார் நல்ல அறிவாளி, ரொம்ப படித்தவர். அவர், பேச ஆரம்பித்து விட்டால் நிறுத்தவே முடியாது. "ராமானுஜபாஷ்யத்தில் சொல்லியிருக்கிறது" என்று ஆரம்பித்து ஹிட்லரின் "மெயின் காம்ப்" வரையில் வந்து விடுவார். ஒருநாள் சத்ருக்னனுக்கு ஏன் 'சத்ருக்னன்' என்று பெயர் வந்தது? அவன் ஒரு சத்ருவையும் ஜெயிக்க வில்லையே என்ற கேள்வி பிறந்தது. அப்போது அனந்த சயனம், பொருத்த மில்லாமல் பெயர்கள் வைப்பது குறித்து விஸ்தாரமாகப் பேச ஆரம்பித்தார். அவர் நிறுத்துவதாகவே தோன்றவில்லை. அப்போது ராஜாஜி, "பொருத்த மில்லாமல் பெயர் வைப்பதற்கு ஒரு உதாரணம், பாம்பைக் கண்டு காதவழி பயந்து ஓடுகிறவருக்கு அனந்த சயனம் என்று பெயர் வைப்பது" என்றார். அதற்கு முதல் நாள் ராத்திரிதான் சிறையில் பாம்பு வந்திருந்தது.

—"கல்கி"யின் 'மூன்றுமாதக் கடுங்காவல்'.

குடும்பத்தாருடன் அனந்தசயனம்

"தேசீய ஒற்றுமையின் முக்கிய அடிப்படைகளைக் கவனிக்காமல் பிளவை உண்டுபண்ணும் சக்திகளுக்கு இடம் கொடுத்தால், நாட்டிற்கு தீங்கு ஏற்படுவது திண்ணம். இளைஞர்கள் பிரிவு மனப்பான்மைக்கு இடம் கொடுக்கலாகாது"

—அனந்தசயனம்.

வாழ்வில் வறுமை

'கதிரவன்'

பத்திரிகையைப் பிரித்துப் படிக்கத் துவங்கும் பொழுதெல்லாம் நம்முடைய கண்களின் முன்பு ஒரு செய்தி வந்து நிற்கும்.

எலிசபெத் இளவரசி நேருவுடன் கை குலுக்கியதையும், அதே நேரத்தில், அமெரிக்கக் காங்கிரசின் அங்கத்தினர்கள் நேருவின் மீது கண்டனக் கணைகள் தொடுத்ததையும், குருஷேவினுடைய ஸ்டாலின் தூற்றல் பேச்சையும் உள்நாட்டு தட்சிணப் பிரதேசத் தகராறையும், வெளியிடத் தவறினாலும், அந்த ஒரு செய்தியை மட்டும் வெளியிடத் தவறுவதில்லை நம்முடைய பத்திரிகைகள்.

அது என்ன செய்தி? அதுதான் தற்கொலைச்செய்தி! ஒரு நாளைக்கு ஒரு தற்கொலைச் செய்தியாவது வெளியிடா விட்டால், பத்திரிகை நிறைவடையாது. அவைகள் மீது தவறு கிடையாது. நாட்டில் தினந்தோறும் தற்கொலைகள் நடந்து கொண்டே இருக்கின்றன. அதுதான் காரணம். அமெரிக்காவில் 35 நிமிடங்களுக்கு ஒரு தற்கொலை நடப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

தற்கொலை செய்து கொள்வதற்கான அடிப்படைக் காரணம், என்ன? வறுமைதான். வறுமையின் காரணமாகப் பெரும்பாலான தற்கொலைகளும். காதலின் காரணமாக சிலவும், கடனுக்குப் பயந்து கொண்டு. வேறு சில காரணங்களுக்காகவும் தற்கொலைகள் நடைபெறுகின்றன.

இந்தியாவில் வறுமையினால் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்பதை ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம், ஆனால் செல்வச் செழிப்பில் சிறந்து விளங்கும், அமெரிக்காவில். வறுமையின் காரணமாகத்தான் தற்கொலை செய்து கொள்கிறார்களா. என்று கேட்கலாம்.

வறுமை என்றால் என்ன? இல்லாமை என்பதைத்தான் வறுமை என்று குறிப்பிடுகின்றோம். எது ஒருவனிடம் இல்லையோ, அதில அவன் வறுமையாளன்தான். ஏழையிடம் பணம் இல்லாமல் துன்பப் படுவானாயின் அவன் வறுமையாளன்தான். அதே போன்று ஒருவனிடம் அறிவு இல்லையென்றால் அவனும் வறுமையாளன்தான்.

அமெரிக்காவில் அதிகம் தற்கொலைகள் நிகழ்வதற்குக் காரணம், நம் நாட்டைவிட அங்கே இன்பத்திற்கான வழிகள் பல இருக்கின்றன. கணவனும் மனைவியும் ஒன்றாக வாழ்வது கூட அவர்களுக்கு இன்பம்தானே தவிர கடமையல்ல. குதிரை ஓட்டத்தில் பணம் கட்டி, இலட்சக் கணக்கில் பரிசு பெறவேண்டுமென்ற எண்ணத்தில் செல்லும் ஒருவன் தோல்வியடைந்தால் அதுவே அவனுடைய தற்கொலைக்குக் காரணமாகிவிடும்.

சீட்டு விளையாட்டில் ஏராளமான பணத்தைத் தோற்று விட்டால் உடனே ஒரு தற்கொலை நிகழும். இதயத்திலே எண்ணியிருக்கும் உயர்ந்த இலட்சியத்திற்கு ஏதேனும் தடை ஏற்பட்டால், அதன் காரணமாகவும் தற்கொலை நடைபெறுகிறது.

ஆனால் நம் நாட்டில் அப்படி அல்ல. ஒரு மங்கை தன்னுடைய கற்பை இழந்து வாழ முடியாத நிலை ஏற்பட்டால் மானத்திற்குப் பயந்து, தற்கொலை செய்து கொள்ளுவாள். ஆனால் நம் நாட்டில் வறுமையின் காரணத்தினால் தான் தற்கொலைகள் நிகழ்கின்றன என்பதை மறுக்க முடியாது.

வறுமை என்று நாம் குறிப்பிடுவதெல்லாம், ஒரு மனிதன், உண்ண உணவு கிடைக்காமல் தவிப்பதைத்தான். ஆங்கில இலக்

இயத்திற்கே புதுமையை உண்டு பண்ணிய மேதை, சாமுவேல் ஜான்சன் ஒருமுறை கையெழுத்திடும்பொழுது "உணவு இல்லாதவன்" என்று கையெழுத்திட்டார்.

வறுமை பலருடைய வாழ்வைச் சிதைத்தும், சிலருடைய வாழ்வைச் சீர்படுத்தியும் இருக்கிறது. உலக மேதைகள் பலர் வறுமையின் கையில் அகப்பட்டு, அநேக துன்பங்களை அநுபவித்திருக்கிறார்கள்.

பொதுவுடமைத்தந்தை, காரல் மார்க்ஸ் வறுமையின் நெருங்கிய நண்பனாக இருந்திருக்கிறார், வறுமைக் கடலிலே வீழ்ந்த பின்பு, வெளியேற வழியின்றித் துடித்தார்.

அரசாங்கத்திற்கு அஞ்சாத மார்க்ஸ், சாதாரண மருத்துவனுக்குப் பயந்துகொண்டு, லண்டனிலிருந்து, மான்செஸ்டருக்கு ஓடிப்போய் விட்டார். மருந்து வாங்கியதற்காக அவனுக்குப் பணம் கொடுக்கவேண்டும். கையிலே பணமில்லை. அவனோ வீட்டிலுள்ள எல்லாப் பொருள்களையும் ஏலம் போட்டு விடுவதாகப் பயமுறுத்தினான். எனவே தான் ஓடிப்போனார்.

இன்னொரு முறை. வீட்டுச் செலவிற்குப் பணம் இல்லாததால் தன்னுடைய மேற் சட்டையை அடகுவைத்தார். சட்டை இல்லாத காரணத்தினால் வெளியே போகாமல் வீட்டிற்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தார்.

மார்க்ஸிம் கார்க்கியின் உணர்ச்சி மிகுந்த சிறுகதைகளை இன்று உலகம் முழுவதும் படித்து மகிழ்கிறது. வியந்து போற்றுகிறது. ஆனால் அவர் பட்ட துன்பங்களை எழுதுவதற்கு ஏடு இடம் தராது. பத்து வயதிலேயே அவர் அனாதைகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டார்.

ரஷ்யா முழுவதையும் நடந்தே சுற்றிவந்தார் அவர். செய்யாத வேலை எதுவும் கிடையாது. வாழ்வில் வறுமையின் தொல்லை பொறுக்க முடியாமல், துப்பாக்கியினால் சுட்டுத் தற்கொலை செய்து கொள்ளமுயன்றார். ஆனால் குண்டு குறி தவறிவிடவே, அவர் பிழைத்து விட்டார்.

அவருடைய வாழ்க்கையின் அநுபவங்களைத்தான் 'சிறு கதைகள்' என்ற பெயரில் உலகிற்கு அளித்தார்.

'நாவல் மன்னன்' என்று போற்றப்படும் அலெக்ஸாண்டர் டூமாஸ், வாழ்வில் அதிக இன்பத்தை அநுபவித்தவர். கவிஞர்களின் மொழியிலே சொன்னால், 'அவர் ஒரு தேனீ. எண்ணற்ற மலர்களை நெருங்கித் தேனைக் குடித்தவர்!'

அவரும் இளமையில் மிகுந்த துன்பங்களைத் தாங்கியவர். அவருடைய முதல் நாடகம் ஒன்று அரங்கேறியது. அதைப் பார்க்கச் செல்ல விரும்பினார். அவரிடம் "டை" இல்லாததினால், அட்டையில், டை' போன்று வெட்டி அணிந்து கொண்டு சென்றார்.

இன்னும் எத்தனையோ அறிஞர்கள் அதிகமாக துன்பத்தை அநுபவித்திருக்கிறார்கள். அதை எழுதப் புகுந்தால் பெரும் நூலாகி விடும்.

அந்த அறிஞர்களெல்லாம் வறுமையைப்பற்றிப் பெரியதாக எண்ணவில்லை. எனவேதான் அவர்கள் வாழ்வில் வெற்றி பெற்றார்கள். வறுமையைப் போக்க வேண்டுமானால், வறுமையைப் பற்றி நினைக்கவே கூடாது. அப்பொழுதுதான் வறுமையைப் போக்க முடியும்.

வறுமையைப் பற்றியே எந்த நேரமும் நினைத்துக் கொண்டிருந்தால், மற்ற விஷயங்களில் நம்முடைய கவனத்தைச் செலுத்தி, முன்னேற முடியாது போய்விடக் கூடும்.

வறுமை என்பது கொழுந்து விட்டெரியும் நெருப்பைப் போன்றதாகும். உளத்திண்மை வாய்ந்த அறிஞர்கள் என்ற தங்கக் கட்டிகள் நெருப்பில் அகப்படும் போது, முன்னைவிட அதிகமாக ஒளி வீசுகிறார்கள், சாதாரண மக்கள் என்ற காய்ந்த விறகுகள் அதில் அகப்படும்போது, அதிலேயே எரிந்து கருகி விடுகிறார்கள். இது உண்மைதானே? ★

அன்று...56 தேசம் இன்று...ஐக்கிய இந்தியா

எஸ். நடராஜன், பி. ஏ.

நவம்பர் முதல் தேதி புதுராஜ்யங்கள் ஏற்படவிருக்கின்றன. இன்று ஒரு குடையின் கீழ் உள்ள இந்தியா ஒரு காலத்தில் 56 தேசங்கள் அடங்கியதாக இருந்தது. பாரதநாட்டின் உள்அமைப்பு எவ்வப்போது எப்படி மாறின என்ற விவரங்களை இக்கட்டுரையில் காணலாம்.

வருகிற (1956) நவம்பர் முதல் தேதி முதல் இந்தியா பின்வரும் 14 ராஜ்யங்கள் அடங்கியதாக இருக்கும். அவை சென்னை, ஆந்திரா, அஸ்ஸாம், பீகார், பம்பாய், ஜம்மு காஷ்மீர், கேரளம், மத்யபிரதேசம், மைசூர், ஒரிஸ்ஸா, பஞ்சாப், ராஜஸ்தான், உத்தரபிரதேசம், மேற்கு வங்காளம்.

இவை தவிர, மத்திய சர்க்கார் நிர்வாகத்தில், அந்தமான் நிக்கோபார் தீவுகள், டில்லி, ஹிமாசல பிரதேசம், லக்ஷத்தீவுகள், அமிந்தில் தீவுகள், மணிப்பூர் திரிபுரா இவை இருக்கும்.

இன்று 14 ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள பாரத நாடு, ஒரு காலத்தில் 56 தேசங்கள் கொண்டதாக இருந்திருக்கிறது. புராண காலத்தில் இம்மாதிரி இருந்ததாக வரலாறுகளில் காணப்படுகிறது. இந்த 56 தேச மன்னர்கள் பரத நாட்டின் சக்ரவர்த்திக்கு கப்பங்கட்டி வந்திருக்கிறார்கள் என்பது நமது இதிஹாஸங்களான ராமாயணத்திலும் மகாபாரதத்திலும் சொல்லப்படுகிறது.

வேதகாலத்தில்

வேதங்களில் மேரு என்ற மலை உலகின் மத்தியில் இருப்பதாகவும் அதை சுற்றி ஏழு சமுத்திரங்களும் ஏழு தீவுகளும் இருப்பதாகவும் வேத காலத்தில் நம்பப்பட்டு வந்தது. அந்த ஏழு தீவுகளில் ஒன்று தான் ஜம்பூத்வீபம். ஏழுதீவுகள் ஒவ்வொன்றையும் ஒன்பது (வர்ஷங்களாக) பிரிவுகளாகப் பிரிந்திருந்தார்கள். ஜம்பூத்வீபத்தில் ஒரு பிரிவே பாரத வர்ஷம். மற்ற பிரிவுகளின் பெயர்கள் குரு, ஹிரண்மயம், ரம்யகம், இலாவிருதம், ஹரிகேது மாலம், பத்திராக்கியம், கின்னரம் என்பதாகும். பாரத நாட்டு பூகோள விவரங்களை, மகாகவி காளிதாசன் தன் கவிதைகளில் வரையறுத்துச் சொல்லியிருக்கிறான். அந்த காலத்திலிருந்து 56 தேசங்கள் எல்லாவற்றின் பெயர்களும் கிடைக்கவில்லை. ஒரு சில பெயர்கள் பற்றி எதுவுமே விவரம் தெரியவில்லை. அக்காலத்து தேசத்தின் பெயர்களைக்கேட்கவே காதிற்கு இனிமையாக இருக்கிறது.

இவைகளில் முதல் மூன்று அங்கம், வங்கம், கலிங்கம். அன்று பிரபலமாக இருந்த அங்கம் இன்று சஹகல்பூர் என்ற குக்கிராமமாக இருக்கிறது.

வங்கம் இரண்டாகப் பிரிந்து ஒரு பகுதி பாகிஸ்தானுக்குப் போய் விட்டது. கலிங்கம் தான் உத்கலம் என்றும் ஒரிஸா என்றும் இப்போது வழங்கப்படுகிறது. போர் முனையில் வீரம் காட்டிய அசோகனை அஹிம்ஸாவாதியாக மாற்றியது இக்கலிங்கம் தான். ஆந்திரம், கேரளம், பாஞ்சாலம், ஸௌராஷ்டிரம் இந்நான்கும் இக்காலத்திலும் அதே பெயரைப் பெற்றிருக்கின்றன. இன்று தலைநகராக

உள்ள டில்லி அக்காலத்தில் இந்திரப்பிரஸ்தமாக விளங்கியது.

மற்ற தேசங்களின் பெயர்களாவன: காமரூபம், காம்போஜம், கோசலம், கேகயம், கௌசாம்பி, ஹேமகூடம், ஹஸ்தினுபுரம், விதேஹம், விதர்ப்பம், மகதம், டிகோதயம், விராடம், பிரதிஷ்டானம் முதலியவை.

கிருஷ்ணா நதிக்கும் பாலாற்றுக்கும் இடையில் இருக்கும் பிரதேசம் திரவிடம் என வழங்கப்பட்டு வந்தது. இதன் தலைநகர் காஞ்சி.

ஒரு குடையின் கீழ்

பின்னர் அசோகர், ஹர்ஷர் கனிஷ்கர், மொகலாய அரசர்கள் இவர்கள் ஆட்சியிலெல்லாம் இந்தியாவின் பெரும் பகுதி யடங்கி யிருந்ததே யொழிய, என்றும் இந்தியா முழுவதும் ஒரு குடையின் கீழ் இருந்ததில்லை. அந்த அதிசயம் இப்போது தான் சாதிக்கப்பட்டிருக்கிறது.

மகாத்மா காந்தியை நாம் ''இந்தியாவின் பிதா'' என்று வணங்குகிறோம். அது போலவே சர்தார் படேலை 'இந்திய ராஜீய ஐக்யத்தின் பிதா' என்று போற்றுவது மிகப் பொருத்தமாகும். சுதந்திரம் அடைந்த தேதியில் இந்தியா ஒன்பது மாகாணங்கள் கொண்டதாகவும், இந்திய ஜனநாயகத்தின் பூர்ண ஆதிக்கத்திற்குப் புறம்பான சுமார் 500 சமஸ்தானங்கள் கொண்டதாகவும் இருந்தது. இந்நிலைமையை நீடிக்க விட்டிருந்தால் இந்தியா ஒரு தேசம்

இந்திய ராஜீய ஐக்கியத்தின் பிதா சர்தார் படேல்

ராஜ்ய இணைப்புகளில் படேலுக்கு உதவிய வி. பி. மேனன்

என்ற பெயருக்கே லாயக்கற்றதாகி, சிதைந்து போயிருக்கும். இந்தச் சிதைவைத்தடுத்து, சமஸ்தானங்களில் ஜனநாயகம் ஏற்படுத்தி, அதை அகில இந்திய ஜனநாயகத்தின் உறுப்புகளாகச் செய்த பெருமை சர்தார் படேலையே சேரும்.

இந்த 500-க்கு மேற்பட்ட சமஸ்தானங்கள் ஏற்பட்ட விதத்தை சிறிது கவனிக்கலாம். வர்த்தகத்திற்காக இந்தியா வந்து, ஐந்தாம் படை துரோகிகளின் உதவி கொண்டு ஆட்சியை பிரிட்டிஷார் கைப்பற்றிய கதை எல்லோரும் அறிந்ததே. சிறு சிறு ராஜ்யங்களை ஒன்றுடன் ஒன்று மோதவிட்டு, மத்யஸ்தம் செய்வது போல அல்ல, உதவிக்கு வருவது போல தலையிட பிரிட்டிஷாருக்கு மிக சௌகரியமாக இருந்தது.

நவம்பர் 1உ அமையும் புது ராஜ்யங்கள்

படைத்துணை ஏற்பாடு

சுதேச சமஸ்தானங்கள் மீது ஆங்கிலேயர் ஆதிக்கம் ஏற்படச் செய்ய கவர்னர் ஜெனரலாக இருந்த லார்ட் வெல்லெஸ்லி படைத்துணை ஏற்பாடு ஒன்றை ஏற்படுத்தினார். இத் திட்டத்தின் படி ஒவ்வொரு சுதேச ராஜ்யமும் ஆங்கிலேய சைன்யத்தை தன் சமஸ்தானத்தில் வைத்து ரக்ஷிக்க ஒப்புக்கொள்ள வேண்டும். எல்லா சமஸ்தானங்களும் ஆங்கிலேயர்களை ஏகாதிபத்ய வல்லரசாக ஒப்புக்கொள்ள வேண்டும். கம்பெனிக்குத் தெரியாமல் எந்த சுதேச ராஜ்யங்களும் தங்களுக்குள்ளும் அல்லது வேறு எந்த அரசாங்கத்துடனும் யாதொரு தனிப்பட்ட சம்பந்தமும் வைத்துக் கொள்ளக்கூடாது. ஆங்கிலேயரைத் தவிர, இதர ஐரோப்பியரை சுதேச ராஜ்யங்கள் தங்கள் சமஸ்தானங்களில் உத்தியோகத்தில் அமர்த்தக்கூடாது. ஒவ்வொரு சமஸ்தானத்திலும் ஒரு ஆங்கிலேய 'ரெஜிமெண்ட்' இருக்க வேண்டும்.

இந்த படைத்துணை ஏற்பாட்டை ஏற்படுத்துவதன் காரணம் ஆங்கி



இம்மாதிரி எவ்வளவோ சிறு ராஜ்யங்களை படேல் ஒன்றாக இணைத்தார்

சமஸ்தானாதிபதிகளுக்கிடையே ஒரு பரபரப்பை ஏற்படுத்தி, பின்னர் ஏற்பட்ட முதல் சுதந்திர யுத்தத்திற்கு (1857) ஒரு முக்கிய காரணமாயிற்று.

புராண காலத்தில் 56 தேசங்களாக இருந்தது. பின்னர் 500-க்கு மேற்பட்ட சமஸ்தானங்களாகப் பிரிந்து பின்னர் 15 ராஜ்யங்கள் கொண்டதான ஐக்ய இந்தியா ஏற்பட்டது சரித்திரம் கண்டிராத ஒரு பெரும் அதிசயம்தான்.

லேயரின் அதிகாரத்தை உயர்த்த வேண்டும் என்பதும், சுதேச மன்னர்கள் ஆங்கிலேயர்களுக்கு அடங்கியிருக்கவேண்டும் என்பதுமாகும். இத்திட்டத்தினால் சுதேச ராஜ்யங்களின் சுதந்திரம் பறிபோய் விட்டது.

பின்னர் வந்த கவர்னர் ஜெனரல் ஹேஸ்டிங்ஸ் 'முன்னேற்ற திட்டம்' என்று சுதேச மன்னர்கள் விவகாரத்தில் தீவிரமாகத் தலையிடும் கொள்கையை மேற்கொண்டார்.

லார்ட் டல்ஹௌஸி சுதேச சமஸ்தானங்கள் விஷயமாக பிள்ளையில்லா அரசனின் இராஜ்யம் சர்க்காருக்கு சேரும் முறையை அனுஷ்டித்தார். இதன்படி ஒரு இந்திய அரசன் சந்ததியின்றி இறந்தால் அந்த ராஜ்யம் ஆங்கில ராஜ்யத்துடன் சேர்க்கப்படும். எந்த சுதேச அரசனும் ஆங்கிலேய அரசாங்கத்தின் அனுமதியின்றி சுவிகாரம் எடுத்துக் கொள்ளக் கூடாது. இந்தத் திட்டம் இந்திய



வெல்லெஸ்லி

1937-38-ல் தான் பல சமஸ்தானங்களில் சுதந்திரக் கிளர்ச்சி ஏற்பட்டது. சுதந்திரக் கோரிக்கை நாட்டில் ஏற்பட்டபோது முஸ்லிம்களையும் சமஸ்தானதிபதிகளையும் காட்டியே பிரிட்டிஷார் இக்கோரிக்கையை தட்டிக்கழித்து வந்தார்கள்.

நாடு சுதந்திரம் பெற்ற பின் சமஸ்தான இலாக்காவை சர்தார் படேல் ஏற்றுக் கொண்டு பல சிறு சமஸ்தானங்களைச் சேர்த்து தொகுதி தொகுதியாக அமைக்கமுற்பட்டார். சில சமஸ்தானதிபதிகள் இந்த ஏற்பாட்டுக்கு ஒத்துழைத்தார்கள். ஆனால் வேறு பல பெரிய சமஸ்தானதிபதிகளோ தங்களுக்குள்ளேயே யூனியன்கள் அமைத்துக் கொண்டார்கள். ஆகவே இந்திய யூனியன் ஏற்பட்டு ஒரு வருஷத்துக்குள் நூற்றுக்கணக்கான சமஸ்தானங்கள் ஒரு சில தொகுதிகளாக மாறி, ராஜப்பிரமுகர்களிடம் ஆட்சியின் கீழ் தனித்தனி மாகாணம் போல மாறி விட்டன. மைசூர், பரோடா, கொச்சி, திருவாங்கூர், போபால் போன்ற பெரிய சமஸ்தானங்கள் தனித்து நின்றாலும், இந்திய யூனியனிடம் விசுவாசப்பிரமாணம் எடுத்துக் கொண்டன.



டல்ஹௌஸி

ஹேஸ்டிங்ஸ்

பல சமஸ்தானங்களும் பல ஜாதியாரும் பல பிரிவுகளும் கொண்ட இந்தியா தேசத்தை ஒன்று சேர்ப்பது அசாத்தியம் என்று சொல்லி வந்த பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் முகத்தில் கரிபூசியது போல இந்தியா இன்று ஐக்கிய நாடாகி விட்டது.

சர்தார் படேல் எடுத்துள்ள முயற்சி காரணமாக 27 ராஜ்யங்களாக உருவாகின பின்னர் ராஜ்ய புனரமைப்பு கமிஷன் நியமனம் செய்யப்பட்டது. பின்னர் அந்த ரிப்போர்ட்டின் சிபாரிசுகள் மீது செய்யப்பட்ட மாறுதல்கள் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரங்கள், முடிவில் 14 ராஜ்யங்கள் கொண்ட ஐக்கிய இந்தியா ஏற்படுத்தும் முடிவு எல்லாம் வாசகர்கள் அறிந்ததே.

நவம்பர் முதல் தேதி முதற்கொண்டு ராஜப்பிரமுகர் பதவி ரத்து செய்யப்பட்டு விடும்.

தனித் தமிழ் நாடு நவம்பர் முதல் தேதி முதல் ஏற்படவிருக்கிறது. இதுவரை கேரளமும் கர்நாடகமும் ஆந்திரமும் கலந்திருந்த தமிழ்நாடு அளவிற் சுருங்கி நிற்கிறது. வடவேங்கடமும் தென்குமரியும் தமிழ் நாட்டின் எல்லை என்பது தமிழ் இலக்கியங்களிலிருந்து நன்கு வெளியாகிறது. குமரியும் தமிழ்நாட்டை விட்டு போவதற்கு இருந்தது. நல்ல காலம் குமரிமுனை தமிழ்நாட்டில் சேர்க்கப்பட்டது. வடவேங்கடம் தமிழ்நாட்டின் வடக்கெல்லையாக வேண்டும் என்பது குறித்து சாத்வீக கிளர்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அந்தக் காலத்தில் பெரும் புகழ் பெற்று விளங்கியது. இமயத்திலும் தமிழன் கொடி பறந்தது. அந்தக் காலத்தையும் தூக்கி அடிக்கும் முறையில் தமிழர்கள் பெயரும் புகழும் ஓங்கப் போகிறது என்பதை நிச்சயமாகச் சொல்லலாம். இது தெரியாமலா கவிமணி அவர்கள்,

தமிழன் என்னும் ஓர் இனமுண்டு
தனியேஅவர்க்கொரு குணமுண்டு

என்று பாடினர் தமிழ் ஆட்சி மொழியாகப் போகிறது. தமிழர்கள் முதலில் இந்தியர் என்கிற உண்மையை உணர்ந்தவர்கள்.

இருமொழி ராஜ்யங்கள் ஐக்யப்பட்டிருப்பது பம்பாய் ராஜ்யமாகும். நாளடைவில் மேலும் சில ராஜ்யங்கள் இம்மாதிரி இணைவது சாத்யமாகலாம்,

இன்று இந்தியா முழுவதும் ஒரு ருடையின் கீழ் இருக்கிறது. இதற்குத் திருஷ்டி பரிகாரமாக கோவா இன்னும் அந்நிய ஆதிக்கத்தில் உள்ளது. சௌஜன்யமான முறையில் போர்த்துகல் சர்க்காரும் கோவாவையும் தன் வசமுள்ள இதர பிரதேசங்களையும் இந்திய சர்க்காரிடம் ஒப்படைத்து விடும் என்று எதிர்பார்ப்போம்.

ஆனுனப்பட்ட பிரிட்டனும் பிரான்ஸும் அதிகாரத்தைக் கொடுந்துவிட்டு வெளியேறிய பின் இந்த சுண்டக்காய் போர்ச்சுகல் சண்டித்தனம் எவ்வளவுகாலம் நீடிக்கப் போகிறது!

புது ராஜ்யங்களின் விஸ்தீரணமும் ஜனத்தொகையும்

ராஜ்யங்கள்	விஸ்தீரணம் சதுர மைல்	ஜனத்தொகை லட்சக்கணக்கில்
1. சென்னை	50,170	300
2. ஆந்திரா	1,10,250	322
3. அஸ்ஸாம்	84,924	90
4. பீகார்	67.830	389.3
5. பம்பாய்	1,88,240	478
6. காஷ்மீர்	92,780	44
7. கேரளா	14,980	136
8. மத்யபிரதேசம்	1,71,200	261
9. மைசூர்	72,730	190
10. ஒரிஸா	60,140	146
11. பஞ்சாப்	46,606	160
12. ராஜஸ்தான்	1,32,300	160
13. உத்திரப்பிரதேசம்	1,13,410	632
14. மேற்கு வங்காளம்	33,279	261·6

தமிழில் சிறுகதை

நா. பார்த்தசாரதி

பாரதியின் காலத்துக்குப் பின் தமிழ் இலக்கியத் துறையில் இயல்பாக விரும்பத்தக்க மறு மலர்ச்சி ஒன்று ஏற்பட்டது. தமிழின் நல்ல காலம் என்று தான் இதைச் சொல்லவேண்டும். இந்தக் காலத்தில் தமிழ் வசனத் துறைக்கு ஒரு புதிய வேகம் உண்டாயிற்று. பத்திரிகைகளும் தேசியச் சூழ்நிலையும் இந்த வேகம் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தன. இந்த வேகத்தில் ஜனித்த அற்புதங்களில் ஒன்று தான் சிறுகதை. தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் புதுமையான துறை சிறுகதை. இருந்தும் தமிழ் இலக்கியத்தில் சிறுகதைக்கு இன்று ஏற்பட்டிருக்கும் அந்தஸ்தும் வளர்ச்சியும் வேறு எந்த இந்திய மொழிகளிலும் இன்றுவரை ஏற்படவில்லை என்று கூறலாம். விரைவாகவும் அதே சமயத்தில் தரங்குன்றாமலும் வளர்ந்திருக்கிறது தமிழ்ச் சிறுகதை இலக்கியம்.

கதை சொல்லும் ஆர்வம் மனிதனுக்கு, இன்று நேற்று உண்டான புதுமை இல்லை. வேதாளக் கதைகளையும், பஞ்சதந்திரக் கதைகளையும் கூடக் கதை கூறுகிற ஆர்வம்தான் தோற்றுவித்திருக்க வேண்டும். 'ஒரே ஒரு ஊரில்'... என்று தொடங்கும் ராஜா ராணிக் கதையிலிருந்து நீதிக் கதைகள் வரை யாவும் சிறு கதையின் ஓர் அம்சத்தை உள்ளடக்கிக் கொண்டிருப்பவைதாம். ஆனால், இன்றைய சிறுகதையின் அமைப்பு இருக்கிறதே, அது இதற்கு முன் அமைந்திராததும், இனி அமைய முடியாததும் ஆகும். கட்டுப்பாடும், வரையறையும் மீறாத ஓர் நளினமான உருவை இன்றைய சிறுகதை பெற்று விட்டது. தமிழில் வெளிவரும் எல்லா இதழ்களும், தமிழில் எழுதிய, எழுதுகின்ற நல்ல எழுத்தாளர்களும் இந்தப் பெருமையைச் சிறு கதை துறைக்கு அளித்திருக்கிறார்கள். அவைகளையும் அவர்களையும் பாராட்டத்தான் வேண்டும்.

தொடக்க நிலை

உத்தி, குணசித்திரம், உரையாடல், சூழ்நிலையை வகுப்பது முதலிய இன்றியமையாத உறுப்புக்களால் சிறப்படையாவிட்டாலும் கருத்துக்களைச் சொல்லும் சாதனங்களாகவே தொடக்கத்தில் சிறுகதைகள் பயன்பட்டன. செல்வகேசவராய முதலியாரின் 'அபிநவக் கதைகள்' இந்த அடிப்படையிலே தோன்றியவைதாம். நீதி போதனைக்காகவும், கருத்துப் பிரயோகத்துக்காகவும் பயன்பட்டு வந்த சிறுகதைத் துறையில் சற்றே துணிந்து புதுமையை நுழைத்தவர் திரு. வ. வே. சு. ஐயர் அவர்களே ஆவார். அவர் எழுதிய "மங்கையர்க்கரசியின் காதல்" என்ற சிறுகதைத் தொகுதி இன்றைய தமிழ்ச் சிறுகதைக்குத் தாய்ச் சரக்குப் போன்றது. அதிலுள்ள 'குளத்தங்கரை அரசமரம்' என்ற கதை தமிழுக்கு ஒரு வரப்பிரசாதம். சிறு கதை இலக்கிய மதிப்பை அடைந்தது வ. வே. சு. ஐயர் காலத்தில்தான். இந்தக் காலத்தில் மகாகவி பாரதியாரும் உயிரோடிருந்தார். பாரதியாரும் மாதவய்யா, இராமானுஜலு நாயுடு என்பவர்களும் இதே சமயத்தில் சில சிறுகதைகளை எழுதி வந்தனர். ஆனால் வ. வே. சு. ஐயர் கதைகளைப் போலப் பெரும்பான்மையான வெற்றியை அவை அடைய முடியாமற் போய் விட்டது. 'சிறுகதை' என்பதற்கு ஒப்புயர்வற்ற இலட்சியம் ஒன்றை யாருமே உண்டாக்க முடியாத காலம் இது. 'சிறு கதையின் தத்து

வத்தை' முயன்று புரிந்து கொள்ளவோ, இயல்பாகப் புரிந்து கொள்ள விரும்பாத காலமாக இருந்தது.

காங்கிரஸ் மகாசபை தோன்றி வளர்ந்து, தேசிய இயக்கம் உச்சநிலை அடைந்திருந்த சமயம் உப்பு சத்தியாக்கிரகம் உண்டாயிற்று. 'கல்கி' ஆனந்த விகடன் பத்திரிகையில் சேர்ந்து எதுவாயிருந்தாலும் அதைப் படிப்பவர்கள் சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகும் படி எழுதிக் கொண்டிருந்தார். சிறுகதை எழுதினால் அதில் நகைச் சுவை அல்லது தேசிய உணர்ச்சி, என்ற இரண்டுமே மையமாக அமைந்தன கல்கியின் கதைகளில். கல்கியின் தூண்டுதலால் அதுவரை ஆங்கிலத்தில் எழுதிக் கொண்டிருந்த எஸ். வி. வி. தமிழிலும் 'விகடன்' மூலமாக எழுத ஆரம்பித்தார். குத்தலாகவும், நையாண்டியாகவும், எஸ். வி. வி. எழுதினார். ஆனால் எஸ். வி. வி.யோ, அவரைப் போலவே ஹாஸ்யமாக எழுதி வரும் 'கொனஷ்டை'யோ, தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தை வளர்த்து விட்டதாக ஒப்புக் கொள்ள முடியாது. கல்கியும் இவர்களும் ஒன்று சேர்ந்து அதுவரை எவரும் செய்திராத ஒரே ஒரு பெரிய நல்ல காரியத்தைச் சாதித்தார்கள். தமிழ்ச் சிறு கதைகளையும், தமிழில் எழுதுகிறவர்களின் சிருஷ்டிகளையும், படிப்பதற்கு 'ஹாஸ்யம்' என்கிற விளம்பரத்தால் எண்ணற்ற வாசகர்களை உண்டாக்கினார்கள். இதுவே இவர்களுடைய சாதனை எனலாம்.

மணிக்கொடி யுகம்

தமிழில் படிக்கத் துணிந்த வாசகர்கள் நிறையத் தோன்றியிருந்த இந்தக் காலத்தில் கு. ஸ்ரீனிவாசன் அவர்கள் உயர்ந்த இலட்சியத்தோடு 'மணிக்கொடி' பத்திரிகையைத் தொடங்கினார். தமிழ்ச் சிறுகதையின் மகத்தான வளர்ச்சிக்கு மணிக்கொடி ஒரு நல்ல ஏணிப்படியாக அமைந்து, மேலே மேலே ஏற்றமடையச் செய்தது. தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சிக்கென்றே பேனாவை எடுத்தவர்கள் போல் புதுமைப்பித்தனும், கு. ப. ராஜகோபாலனும் எழுதத் தொடங்கியது இந்தச் சமயத்தில்தான். தமிழ்ச் சிறுகதையின் தரத்தை உலகச் சிறு கதைக்ளோடு ஒன்றாக்க என்றே பிறந்த இரட்டையர்களாக இவர்களைச் சொல்லலாம். இதே சமயத்தில் வ. ரா. வும் எழுதினார். ஆனால் சிறுகதைத் துறையில் அவர் அதிக ஈடுபாடு கொள்ளவில்லை. புதுமைப்பித்தன், கு. ப. ரா. இவர்களோடு சரிசமமாக நின்று அன்றே எழுதத் தொடங்கியவர்கள், திருவாளர்கள் ந. பிச்சமூர்த்தியும், ந. சிதம்பர சுப்பிரமணியமும் ஆவார்கள். சகல துறைகளிலும் அனுபவம் நிறைந்த எழுத்தாளராகத் திரு. பி. எஸ். ராமையாவும் எழுத ஆரம்பித்தார். தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் இருபெருந் தந்தைகளாகத் திருவாளர்கள் புதுமைப்பித்தனையும் கு. ப. ரா. வையும் குறிப்பிட்டால், பிச்சமூர்த்தியையும், சிதம்பர சுப்பிரமணியத்தையும் அவர்கள் சகோதரர்களாகவும், தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் சிறிய தந்தைகளாகவும் குறிப்பிடவேண்டும். இவர்கள் யாவருடைய தன்மையும் ஒன்றாய் அதனுடன் மக்களுக்குப் புரியும் எளிமையையும் கொண்டு எழுதியவர் திரு. பி. எஸ். ராமையா. மணிக்கொடி, கலைமகள், ஊழியன் ஆகிய தலை சிறந்த பத்திரிகைகள் இவர்களின் சிருஷ்டிகளை வெளியிட்டுத் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தை மதிப்பும் தரமும் உயர்ந்த ஒன்றாக உருவாக்கின. மணிக்கொடியும், கலைமகளும், தோன்றியிராவிட்டால் தமிழ்ச் சிறுகதையின் தலை எழுத்தே வேறு விதமாக மாறிப் போயிருக்கும். இந்த வகையில் மணிக்கொடியின் பணி தொடங்கி வைத்த அளவில் நின்றுவிடுகிறது. 'கலைமகள்' பத்திரிகை அன்றும் இன்றும் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்குச் செய்துவரும் உண்மையான பணி அளவுக்கு அடங்காதது. எவ்வளவு புகழ்ந்தாலும் தகும் இந்தப் பணியை.

எப்படி எழுதினார்கள் ?

"புதுமைப்பித்தன், கு. ப. ரா., சிதம்பர சுப்பிரமணியன், பிச்ச மூர்த்தி இவர்கள் எதை எழுதினார்கள்? எப்படி எழுதினார்கள்? ஏன் எழுதினார்கள் ?" இவர்கள் நால்வரும சிறுகதையின் வழியில் ஒரு திருப்பத்தை உண்டாக்கினர்கள். வாழ்க்கை உண்மைகளை உணர்ச்சி பூர்வமாகப் படம் பிடித்துக் காட்டும் சிறு கதைகளை நளினமான நடையில் பூமலர்ந்தாற் போன்ற பொலிவுள்ள வார்த்தைகளால் எழுதினார்கள். வாழ்க்கையை விளக்குவதற்கு வாழ்க்கையை உயரச் செய்வதற்கு, இதயத்தைப் பண்படுத்துவதற்கு, இவர்களுடைய சிறு கதைகள் சஞ்சீவிகளாகப் பயன் பட்டன. பி. எஸ். ராமையா, இந்த வழியில் நின்று சிலவும் பொதுப்படையான வழியில் பலவும் எழுதினார். பேர்ல்பெக், மாபஸான், பால்ஸாக், டால்ஸ்டாய், ஜேம்ஸ்ஜாய்ஸ் போன்ற உலகக் கதாசிரியர்களோடு சரியாசனம் பெறத்தக்க தகுதி இவர்களிடம் இருந்தது. ராமையாவோ ஓ. ஹென்றியைப் போல எழுதிக் குவிக்கிறார் சிறுகதைகளை. கலில் கிப்ரானும் இப்ஸனும், டால்ஸ்டாயும் விளக்கத் திணறுகிற பெரிய தத்துவங்களை எல்லாம் அலட்சியமாகத் தங்கள் சிறுகதைகள் மூலமாக விளக்க முடிகிறது. பிச்சமூர்த்திக்கும், சிதம்பர சுப்பிரமணியத்திற்கும். இவர்களுக்கும் மூத்த ஆசிரியர்களான புதுமைப் பித்தன், கு. ப. ரா. ஆகிய இருவரில் புதுமைப் பித்தனின் கதைப் போக்கும் நடையும் கடல் மடை திறந்தாற் போலக் கம்பீரமானது. தெய்வீகம் நிறைந்து தோன்றுவது. கு. ப. ரா. வின் கதையும், நடையும் குற்றாலத்து அருவியைப் போலக் காவிரியின் நீர்ப்பரப்பைப் போல, அழகும், நளினமும், அமைதியும் கொண்டவை. இந்த ஐவரில் அமரர்களான புதுமைப் பித்தனும் கு. ப. ரா. வும் போக மூவரே இப்போது ஜீவிய வந்தர்களாக உள்ளனர். மூவரில் இப்போது சிதம்பர சுப்பிரமணியமும், பிச்ச மூர்த்தியும், எழுதுவதை மிகவும் குறைத்துக்கொண்டு விட்டனர். வருடத்திற்கு மூன்று அல்லது நான்கு கதைகளுக்கு மேல் அவர்களிடமிருந்து எதிர் பார்க்க முடிவதில்லை. ராமையா நிறைய எழுதுகிறார். ஜனரஞ்சகமாகவும் எளிய அமைப்பிலுமே பலரைக் கவர்கின்ற சிறுகதைகளை அவரால் இப்போது எழுத முடிகிறது. கல்கி, சங்கரராம், ஆகியோர் சிறுகதைகளை மக்கள் நிறைய விரும்புகின்றனர். விரும்பும்படியாக அவர்கள் எழுதினார்கள் என்பது பொருந்தும். 'இலக்கிய அந்தஸ்து'—என்ற முறையில் அவைகளில் எதுவுமில்லை.

இப்போது எழுதுகிறவர்கள்

தமிழ் நாட்டின் தலைசிறந்த விமர்சகரான திரு. க. நா. சு. அவர்கள் அபிப்பிராயப் படுவதுபோல 1946ம் வருஷத்திற்குமேல் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில் ஒரு தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் இந்தத் தேக்கத்துக்கு முன்னும் பின்னும் சில நல்ல எழுத்தாளர்கள் தோன்றாமற் போகவில்லை. திரு. லா. சா. ராமாமிருதம், தி. ஜானகிராமன், கி. வா. ஜ., அகிலன், மாயாவி, கி. சந்திரசேகரன் ஆகியோர் இவர்களில் முக்கியமானவர்.

லா. சா. ராவைப் போல எழுதுகிறவர் தமிழ்நாட்டில் அவர் ஒருவர்தான். இரண்டாவது 'ஜேம்ஸ் ஜாய்ஸ்' அவர்! தி. ஜானகிராமன் கதைகள் ஆழ்ந்த ரஸபாவமும் நுணுகிய நோக்கும் கொண்டவை. நிகரற்ற தகுதி உடையவை. நல்ல நடையும் அழகிய அமைப்பும் கொண்ட சிறந்த கருத்தும் அடங்கியவை அகிலனின் கதைகள். கி. வா. ஜ. வும், சந்திரசேகரனும் ஆத்மார்த்தமான மனோபாவங்களைக் கொண்ட சிறுகதைகளைப் புனைந்துள்ளனர். மாயாவி ஜனரஞ்சகமான சிறுகதைகளை எழுதி வருகின்றார். எப்படிப் பார்த்தாலும் அந்த நால்வரையும்

நாம் மறக்கவே முடியாது. அவர்கள் நாலவரும் தமிழிலே சிறுகதைத் துறை வளர்வதற்கென்றே பிறந்தவர்கள் புதுமைப்பித்தன், கு. ப. ரா., சிதம்பரசுப்பிரமணியன், பிச்சமூர்த்தி. முன்னிருவரும் அமரராகி விட்டனர். அதிர்ஷ்ட வசமாகப் பிச்சமூர்த்தியும், சிதம்பர சுப்பிரமணியமும் இன்னும் நம்மிடையே உள்ளனர். அது நம்முடைய தலை சிறந்த பாக்கியம்! சிறுகதைத் துறையில் இவ்விருவருக்கும் எவ்வளவோ கடமைப் பட்டுள்ளது தமிழ் இலக்கியம்.

வளர்ச்சியின் பட்டியல்

ஆசிரியர்	தொகுதி	தனிச் சிறுகதை
புதுமைப் பித்தன்	காஞ்சனை, புதுமைப்பித்தன் சிறுகதைகள்.	கயிற்றரவு, சிற்பியின் நரகம், கபாடபுரம், சாப விமோசனம்.
ந. பிச்சமூர்த்தி	மோகினி, பதினெட்டாம் பெருக்கு.	மாயமான், பிரமை.
ந. சிதம்பரசுப்பிரமணியன்	சூரிய காந்தி.	கொல்லைப்புறக் கோழி.
கு. ப. ராஜகோபாலன்	புனர்ஜன்மம், கனகாம்பரம்.	விடியுமா?, புனர்ஜன்மம்.
பி. எஸ். ராமையா	மலரும் மணமும், புதுமைக் கோவில், ஞானோதயம்	பூச்சூட்டல், நட்சத்திரக் குழந்தைகள்,
லா. சா. ராமாமிருதம்	ஜனனி.	வியூகம். யோகம், ஜனனி இதழ்கள்.
தி. ஜானகிராமன்	கொட்டு மேளம்.	சண்பகப்பூ, பொட்டை, பசி ஆறிற்று, அடுத்த...
கி. வா. ஜகந்நாதன்	அறுந்த தந்தி, கலைஞன் தியாகம்.	நீலப்பந்து, கலைஞன் தியாகம்.
அகிலன்	நிலவினிலே, ஆண்பெண், சாந்தி, வழிபிறந்தது.	பூச்சாண்டி, காசுமரம் குறத்தி, அவளுக்கு,
தி. ஜ. ர.	நொண்டிக்கிளி, சந்தனக் காவடி.	வெள்ளிக் கரண்டி, நாகரத்தினம்,
மாயாவி	அகதி, சாமுண்டியின் சாபம்.	அங்கம்மாவின் கதை, அகதி.
கி. சந்திரசேகரன்	பச்சைக்கிளி	கோபுரவாசல், அன்பின் எல்லை.
விந்தன்	முல்லைக் கொடியாள், ஒரே உரிமை	முல்லைக் கொடியாள்.
ரகுநாதன்	ரகுநாதன் கதைகள்,	வென்றிலன் என்ற போதும்.
க. நா. சு.	ஆடரங்கு	தெருப்புழுதி, கோவில் மணி.
ஆர்வி	குங்குமச் சிமிழ்.	நொண்டிக் கணவன், கண்கள்.
சோமு	உதய குமாரி, மஞ்சள் ரோஜா.	கல்லறை மோகினி.

ஹைதராபாத்

1956 நவம்பர் முதல் தேதியன்று இந்த (சமஸ்தானம்) ராஜ்யம் தெலிங்கானா, கர்நாடகா, மரத்வாடா என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, முறையே ஆந்திரா, மைசூர், பம்பாய் ராஜ்யங்களுடன் இணைக்கப்பட விருக்கிறது.

இந்த சமஸ்தானம் ஏற்பட்டது, நாடு சுதந்திரமடைந்தபின் அதன் சமஸ்தானாதிபதி கொடுத்த தலைவலி, போலீஸ் நடவடிக்கையை இந்தியசர்க்கார் எடுக்கும்படியான நிர்பந்தம் இதெல்லாம் சரித்திரத்தில் இடம் பெற்றுள்ள தகவல்களாகும். இவ் விவரங்கள் எல்லாம் இக்கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளன.

நாடு சுதந்திரமடைந்தவுடன் தனக்கு சுயேச்சை ஏற்பட்டு விட்டதென்று கும்மாளமடித்து பெருந் தலைவலியை உண்டுபண்ணிய சமஸ்தானம் ஹைதராபாத்.

மொகலாயர்களுக்குட் பட்டிருந்த சுபேதாரான நிஜாம், தனி ராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொண்ட முறை பெருமையடையக் கூடியதல்ல. இந்த முதல் நிஜாமின் பெயர் சின்

கிளச்கான் என்பதாகும். இவன் மூர்தாபாத் கவர்னராக இருக்கும் போதே மொகலாய ஆட்சியைக்குழிபறிக்கசதி செய்தவன். இதில் ஓரளவு வெற்றியும் பெற்ருன். டில்லி சக்கரவர்த்தி இதைக் கண்டு பிரமித்து இவனை முதல் மந்திரியாக்கிஞர்.



இவன் தன் பலத்தைப் பெருக்கிக் கொண்டபின் பெயரளவில் கூட மொகலாய ராஜப் பிரதிநிதிஎன்று இருக்க விரும்பவில்லை. தனியரசன் என்று தன்னை கூறிக் கொண்டதுடனல்லாமல், பாரசீக தேச வேந்தனை நாதர் ஷாவையும் டில்லி மீது படையெடுத்து வரும்படி அழைத்தான். நாதர்ஷா படையெடுப்பு மொகலாய ஆட்சியை அடியோடு கலகலக்கச் செய்து விட்டது. நாதர்ஷாவை வரவழைத்த நிஜாமும் ஏராளமான பொன்னும் மணியும் கொடுத்து திருப்தி செய்விக்க வேண்டி வந்தது.

அப்போது நிஜாம் ராஜ்யத்தின் தலைநகராக ஔரங்கபாத்தே இருந்தது. பின்னர் ஹைதராபாத் என்ற இடத்திற்கு தலைநகர் மாறிவிட்டது.

ஆஸப்ஜா வம்சம்

ஹைதராபாத்தை ஆண்ட முதன் மன்னன் ஆஸப்ஜா *1713*-ல் தன் ஆட்சியை ஸ்தாபித்தான். மகாராஷ்டிரர்களை எதிர்க்க பணம் ஏராளமாகத் தேவைப் படுகிறது என்று சொல்லிக் கொண்டே இவன் டில்லிக்கு கப்பம் கட்டாமல் சால்ஜாப்பு சொல்லி வந்தான். பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டதும் ஆங்கிலேயர்களுக்கு நிஜாம் தாஸானு தாஸனுகி விட்டான்.

ஆஸப்ஜா இறந்த பிறகு அவன் வாரிசுகள் திறமையாக ஆட்சி செலுத்தவில்லை. பிற ராணுவ உதவியில்லாமல் ஆட்சியை நீடிக்க முடியவில்லை.

ஆஸப்ஜாவின் இரு குமாரர்கள் பதவிக்காக சண்டை போட்டுக் கொண்டார்கள். மூன்று வருஷங்கள் கழித்து ஸலபத்ஜா என்பவன் பிரெஞ்சுத் தலைவர் டியூப்ளேயின் உதவியுடன் அதிகாரத்தைக் கைப்பற்றி நிஜாமானுன்.

1759-ல் ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் வடசர்க்கார் பகுதியில்சண்டை ஏற்பட்டது. ஹைதராபாத் படை பிரிட்டிஷ் படையிடம் தோல்வியுற்றது. *1766*-ல் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி

நிஜாம் பிரிட்டிஷார் பாது காப்பை ஏற்றுக் கொண்டார்.

அடுத்த வருஷத்தில் நிஜாம் ஹைதர் அலியுடன் சேர்ந்து கொண்டு பிரிட்டிஷாரை எதிர்க்க முற்பட்டார். இதிலும் தோல்வி ஏற்பட்டது. 1788-ல் மசூலிப்பட்டினத்தில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி ஒரு பிரிட்டிஷ் 'ரெஸிடெண்ட்'டை வைத்துக் கொள்ளவும், பிரிட்டிஷ் படையொன்றை வைத்துக் கொள்ளவும் நிஜாம் இணங்க வேண்டியதாயிற்று. பிரிட்டிஷாரிடம் நிஜாம் சிறுகச் சிறுக தன் பிரதேசங்களை விட்டுக் கொடுக்க வேண்டியும் வந்தது.

பிரிட்டிஷ்காரர் ஆட்டிவைத்த பொம்மை

1803-ல் நிஜாம் அலி காலமானார். அவர் மகன் செகந்தர் ஷா பிரிட்டிஷாரிடம் இன்னும் அதிகமாக அடிமைப்பட்டிருக்க வேண்டி நேரிட்டது. பெயருக்கு நிஜாம் என்று ஒருவர் இருந்து வந்தாரே யொழிய, ஆட்சி முழுவதும் பிரிட்டிஷார் கைவசமே இருந்தது.

* * *

அடங்காப்பிடாரியாக இருந்த ஹைதராபாத் சமஸ்தானத்தை வழிக்கு கொண்டுவர, படேல் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஹைதராபாத்திலுள்ள நிர்வாகிகளின் சூழ்ச்சியை வெட்ட வெளிச்சமாக்கிய பின்பே அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். தற்காலிக ஒப்பந்தம் கலையாதிருக்குமுன்பே ஒரு புது ஒப்பந்தம் செய்து கொள்ள ஹைதராபாத் சமஸ்தானத்திற்கு இந்திய சர்க்கார் அவகாசம் கொடுத்தது. ஆனால் ஹைதராபாத் நிர்வாகிகள் ஒப்பந்தப் பேச்சுகளை ஒத்திப் போட்டுக்கொண்டே காலம் கடத்தி வந்தார்கள். கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து 1948ல் லார்ட் மவுண்ட் பேட்டன் விலகினார். இந்த சமயத்தில் ஹைதராபாத்தை சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தி விட வேண்டும் என்று ரஸாக்கர்கள் முயன்றனர். காஸிம் ரஸ்வியை தலைவராகக் கொண்ட ரஸாக்கர்கள்தான் நிஜாமை தங்கள் இஷ்டம்போல ஆட்டி வந்தார்கள். ஏற்கனவே அவர்கள் இந்திய யூனியனை தங்கள் எதிரி நாடுபோல பாவித்து, சமஸ்தானத்துக்குள் இந்திய செலாவாணியை தடை செய்திருந்தார்கள். இந்திய சர்க்காரை ஆயுதபலம் கொண்டு எதிர்க்கவும் துணிந்தனர். ஸிட்னிகாட்டன் என்ற பிரிட்டிஷ்காரர் மூலம் விமானமூலம் திருட்டுத்தனமாக சமஸ்தானத்திற்குள் ஆயுத தளவாடங்களை சேகரித்துக்கொண்டார் ரஸ்வி.

இந்திய சர்க்கார் ஹைதராபாத் போக்கை கண்டித்து, பொருளாதார முற்றுகை யிட்டது. எதற்கும் ஹைதராபாத் சார்க்கார் மசியவில்லை. கடைசியாக 1948 செப்டம்பர் மாதம் 12-ந் தேதி இந்திய ராணுவம் ஹைதராபாத்தில் நுழைந்தது. ஐந்து நாட்கள் எதிர்த்து நின்ற பின்பு ஹைதராபாத் பணிந்தது.

ராஜ்யத் தகவல்கள்

ஹைதராபாத் அமைந்துள்ள நிலப்பகுதி பற்றி ஸர் வில்லியம் பார்ட்டன் என்பவர் தன் ஆராய்ச்சி நூலான 'பிரின்ஸஸ் ஆப் இந்தியா'வில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். அரசியல் நிர்வாகத்திற்கு ஏற்ற

முறையிலும், போர் தளங்களை வைத்து நிர்வகிக்கும் வகையிலும் ஹைதராபாத் சமஸ்தானம் வசதிபெற்றிருக்கிறது. வட, தென் இந்தியாவெனப் பிரிக்கவேண்டுமானல் ஹைதராபாத்தை எல்லையாகக் கொள்ளலாம். சமுத்திர மட்டத்திலிருந்து 1200' உயரத்திலுள்ள இச் சமஸ்தானத்தில் தென்னிந்திய நதிகளில் முக்கியமான கோதாவரியும் கிருஷ்ணுவும் பாய்கின்றன.

இந்திய சமஸ்தானங்களில் மிகப்பெரிய பலவற்றுள் இரண்டாவதாகக் கருதப்படுகிறது ஹைதராபாத்.

இதன் எல்லை நீளம் 2600 மைல். இதன் எல்லையைத் தொடுகோடாக-பம்பாய் மாகாணம், மத்திய மாகாணம், பீஹார், சென்னை ஆகிய மாகாணங்களின் எல்லை கோட்டை தொட்டுக்கொள்ளும்படி-ஹைதராபாத் அமைந்திருக்கிறது.

ஹைதராபாத்தின் விஸ்தீரணம் சென்னை மாகாணத்தின் விஸ்தீரணத்தில் $\frac{2}{3}$ பங்குதான். ஆனல் பம்பாயைவிடக் கொஞ்சம் பெரிதாகவும், மத்தியமாகாணம், பீஹார் மாகாணங்களைக் காட்டிலும் சற்று சிறிதாகவும் இருக்கிறது. சென்னை மாகாணத்தின் ஜனத்தொகையில் $\frac{1}{3}$ பாகம் ஹைதராபாத்தின் ஜனத்யாக இருந்துவருகிறது. மற்ற பகுதிகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ள ஹைதராபாத்திற்கு இயற்கைத் தடைகள் எதுவுமில்லை.

ஹைதராபாத் ரயில்வே இணைப்புகளாலும், தபால் தந்தி போக்குவரத்து மார்க்கங்களினுலும் இந்தியாவின் இதர பகுதிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. இதர சமஸ்தானங்களைப் போன்றே ஜனத்தொகையிலும் ஹைதராபாத் இருந்துவருகிறது. மொத்தம் ஒன்றரைக் கோடிக்கு மேற்பட்ட ஜனங்களில் 86 ½% ஹிந்துக்கள், 12½% முஸ்லீம், 1% கிறிஸ்தவர்கள். மொத்த ஜனங்களை மூன்று பிரதான பாஷைகள் பேசும் பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றனர். 70 லக்ஷம் ஜனங்களுக்கும்மேல் தெலுங்கு பேசுபவர்கள் ஹைதராபாத்தில் வசிக்கின்றனர். மராத்தி பேசுபவர்களின் எண்ணிக்கை 40 லக்ஷத்துக்குமேல் என்றும், கன்னடம் பேசுபவர்கள் எண்ணிக்கை 20 லக்ஷம் எனவும் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. ஹைதராபாத் பூர்வவாசிகள் இதர மாகாணங்களிலும் சமஸ்தானங்களிலும் வசிக்கும் ஜனங்களின் மதங்களைச் சார்ந்தவர்களே.

ஹைதராபாத் சமஸ்தானத்தின் பொருளாதாரம் இந்தியாவின் வளத்தைப் பொருத்தே இன்றும் அமைந்திருக்கிறது.

ஹைதராபாத் பஞ்சத்திற்குள்ளானபோது இந்தியா பஞ்சக் கொடுமைகளை நீக்குவதில் இச் சமஸ்தானத்திற்கு வெகுவாக உதவியிருக்கிறது. ஹைதராபாத் உணவுப் பொருள்கள் விஷயத்தில் சுயதேவைப் பூர்த்தி சமஸ்தானமாக இருந்தும் 1946-47ல் அதனுல் இப்பஞ்சத்தை சமாளிக்க இயலாமற் போகவே, இந்திய அரசாங்கத்தின் உதவியை நாடி பலனடைந்தது.

ஹைதராபாத்தில் பருத்தி ஏராளமாக உற்பத்தியாகிறது. ஆனல் உற்பத்தியாகும் பருத்தி

யின் அளவுக்கு துணி உற்பத்தி மிகக் குறைவுதான். இந்தியாவுக்கு இறக்குமதியாகும் வெளி நாட்டு துணிகள் ஹைதராபாத்தின் தேவையில் 75 சதவீதத்திற்குப் பயன்படுகிறது.

சர்க்கரை, உப்பு, தானியவர்க்கங்கள், கோதுமை, அரிசி போன்றவை தவிர, இரும்பு. எஃகு, மருந்து வகைகள் இவை தவிர, பெட்ரோல், டீஸல் எண்ணெய், டீ, புகையிலை ஆகிய பொருள்களும், யந்திரவகைக்களுக்கான உபகரணங்களும் இந்தியாவிலிருந்து ஹைதராபாத்திற்கு அனுப்பப்படுகின்றன.

ஹைதராபாத்திலிருந்து இதர சமஸ்தானங்கள், மாகாணங்கள், ஸோயாபீன்ஸ், பருத்தி, நிலக்கடலை, ஆளிவிதை, ஆமணக்கெண்ணை, நிலக்கரி, சிமெண்டு தவிர ஓரளவு காகிதமும் உபயோகத்திற்குப் பெற்று வருகின்றன. இவை யனைத்தையும் இந்தியாவின் உதவி கொண்டே பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது ஹைதராபாத். இவற்றை இந்தியா ஹைதராபாத்திடம் மிருந்து பெறவேண்டிய தேவை இல்லாமலிருந்தும், இந்த சமஸ்தானத்தை ஆதரித்து வளம்பெறச் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்திலேயே இந்தியா இத்தொடர்பை நீடித்து வருகிறது.

சரித்திர வரலாறு

தெலுங்கானாவில் பெரும் புகுதியை ஆண்டவர்கள் காகதீயர்களே. இவர்களில் ஒருவனான ருத்ரதேவா ஆந்திரா எல்லை வரை படையெடுத்து ராஜ்யத்தை விஸ்தரித்தான். ருத்ரமாதேவி என்பவளின் ஆட்சியின் போதுதான் பிரபல அயல் நாட்டு பிரயாணியான மார்க்கோபோலோ ஆந்திராவில் சுற்றுப் பிரயாணம் செய்தார். தேவகிரியைச் சேர்ந்த யாதவர்கள் இவளுடைய ராஜ்யத்தை பிடிக்க முயன்றபோது அவளே போர் முனைக்குச் சென்று எதிரிப் படைகளை முறியடித்தாள். அடுத்தபடியாக அரசாண்டவன் பிரதாபருத்ரன்; இவன் காஞ்சியிலிருந்து பாண்டியவர்களை திருச்சிக்கு அப்பால்வரை விரட்டினான். 1323ல் இவன் முகம்மது துக்ளக்கினிடம் சிறைப்பட்டான். இந்த அவமானம் தாங்காமல் பிரதாபருத்ரன் தற்கொலை செய்துக் கொண்டான்.

பிரளயநாயக் என்பவர் வாரங்கல்லை முஸ்லிம்களிடமிருந்து மீட்டு அரசு செலுத்தினான். காகதீயர்களின் பெருமையின் சின்னமாக வாரங்கல் கோட்டை இப்போதும் இருந்து வருகிறது. வாரங்கலில் சிறந்த பருத்தி துணிகள் தயாரிக்கப்பட்டதென்று மார்க்கோ போலோ எழுதி வைத்திருக்கிறார்.

மிகப் பிரபல க்ஷேத்திரமான பத்திராசலம் இந்தராஜ்யத்தில் தெலுங்கானா பிரிவில் உள்ளது. கோல்கொண்டா கோட்டையும் சரித்திரப் பிரசித்தி பெற்ற கோட்டையாகும்.

மகபூப்நகர் ஜில்லாவில் வைரங்கள் கிடைக்கின்றன. பிருகத் சம்ஹிதா (கி. பி. 500) வில் வைரம் கிடைக்கும் எட்டு இடங்களில் இந்த இடமும் ஒன்று என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உலகிலேயே கோல்கொண்டா வைர வியாபாரத்தில் தலைதூக்கி நின்றது. பிரெஞ்சு வைர வியாபாரி டிரவொனியர் 1625-ல் இந்த இடத்

திற்கு விஜயம் செய்தார். கொல்லூர் வைர சுரங்கங்களில் சுமார் 60000 பேர் வேலை செய்வதைப்பார்த்தார். கோஹினூர் வைரம் கொல்லூருக்கு தெற்கில் 1656-57-ல் தான் கண்டுபிடிக்கப் பட்டது. பிட் அல்லது ரீஜண்ட் வைரம் எனப்படும் பிரபலமான வைரம் இங்கு அகப்பட்டது தான். அது இப்போது பிரெஞ்சு நாட்டில் உள்ளது.

மகபூப் நகரின் பழைய பெயர் சௌலவாடி என்பது; அதாவது சோழர்களுடைய இடம் என்ற பெயராம்.

மிகப் பிரசித்தி பெற்ற துல்ஜாப்பூர் பவானிகோயில் பம்பாயுடன் சேரவிருக்கும் மரத்வாடா பகுதியிலிருக்கிறது. சிவாஜியின் இஷ்டதெய்வமான பவானி இந்த கோயிலிலுள்ள அம்மன்தான்.

மரத்வாடா பகுதியில்தான் மிகவும் பிரசித்திபெற்ற அஜந்தா, எல்லோரா குகைகள் இருக்கின்றன. இங்குள்ள தேவகிரி கோட்டையை பாண்டவர்கள் கட்டியதாகச் சொல்லுகிறார்கள். சூர்ப்பனகா பங்கம் செய்யப்பட்ட இடம் இங்குள்ள சர்ப்பநாத் குன்று என்று கூறப்படுகிறது.

ஔரங்காபாத் இருமுறை தலைநகரராக இருக்கும் பெருமையைப் பெற்றது, (1) துக்ளக் ஆட்சி நடந்த போது. (2) ஔரங்கசிப் ஆட்சியின் போது.

ஔரங்காபாதிற்கு 65 மைல் தூரத்தில்தான் அஜந்தா உள்ளது. எல்லோரா குகையில் ஹிந்துமதம், புத்தமதம், ஜைனமதம் ஆகிய மூன்று மதங்கள் சம்பந்தப்பட்ட சிற்பங்கள் காணப்படுகின்றன.

* * *

இயற்கை அழகும் செயற்கை அழகும் ஒருங்கே சேர்ந்து மிளிரும் ஹைதராபாத் நகர் 'இந்தியாவின் கான்ஸ்டான்டி நோபிள்' என்று அழைக்கப்பொருந்தும்.

ஹைதராபாத்தைப் பிரித்து மூன்று பெரிய ராஜ்யங்களுடன் இணைக்க கமிஷன் தீர்மானித்துள்ளது. அதன் தீர்மானப்படி பிரியவிருக்கும் தாலூக்காக்கள் சேரவிருக்கும் அந்தந்த மாகாணங்களுடன் கீழே கூறிப்பிடப்பட்டுள்ளன.

மரத்வாட (பம்பாய்) வுடன் இணையவிருப்பவை

ஔரங்காபாத், பர்பானீ, பஹீர், நந்தீத், ஓஸ்மானுபாத் ஆகிய ஹைதராபாத் தாலூக்காக்கள்.

தெலிங்கானுவுடன் சேர விருப்பவை

ஆடிலாபாத், நிஜாபாத், மேதக், கரீம்நகர், ஹைதராபாத், மெஹ்பூநகர், நல்கொண்டா, ஹம்மாமெட், வாரங்கல்.

கர்நாடகத்துடன் இணைபவை

பீடார், குல்பர்க்கா, ரெய்ச்சூர் ஆகியதாலூக்காக்கள்.

பதினேழு தாலூக்காக்களடங்கிய ஹைதராபாத்சமஸ்தானம் ராஜ்யபுனரமைப்புத் திட்டத்தின் கீழ் மூன்று பெரிய ராஜ்யப் பிரிவுகளுடன் ஐக்கியமாக விருப்பது அதன் எதிர்கால சுபிட்சத்திற்கு வழிகோலுவதாக இருக்குமென்றெதிர்பார்க்கப் படுகிறது. ★



ஹைதராபாத்

இன்னும் பதினைந்து நாட்களில் இந்த ராஜ்யம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பம்பாய், மைசூர், ஆந்திரா ராஜ்யங்களுடன் இணைக்கப்பட விருக்கின்றது. சரித்திரப் பிரசித்திபெற்ற இடங்களும் கலைப் பொக்கிஷங்களும் ஏராளமாக உள்ள ராஜ்யம் ஹைதராபாத்.

போட்டோக்கள் :
இந்திய சர்க்கார் விளம்பர இலாக்கா.

சரித்திர பிரசித்தி பெற்ற தக்ஷிணக்கோட்டைகள்

(மேல்) கோல்கொண்டா கோட்டை

(கீழ்) தௌலாபாத் கோட்டை



பீடார் கோட்டையும் சரித்திரப் பிரசித்தி பெற்றவைகளில் ஒன்று

ஹனுமக்கொண்டா ஆலயம்
சிற்பவேலைகளுக்கு பேர் போனது





எல்லோரா கைலாஸநாதர் கோயில்



எல்லோராவிலுள்ள ராமேஸ்வரா குகை 23-வது குகையிலுள்ள இந்திர சபை. இக்குகைகளிலுள்ள சிற்பங்களும் ஓவியங்களும் கண்ணையும் கருத்தையும் கவுரக் கூடியவை.





எல்லோராவில் சீதையின் குகை வர்ண சித்திரங்கள் பல கொண்டது

புத்தர் குகை இதில் ஏராளமான புத்தர்கள் காணப்படுகின்றனர்.

அஜந்தாவிலுள்ள குகை யொன்றின் முகப்புத் தோற்றம்

எல்லோராவிலுள்ள விசுவசர்மா குகை வாசல் தோற்றம்





அஜந்தா குகையிலுள்ள அழகி. உச்சி முகட்டிலுள்ள ஒரு பூ வேலைப் பாடு. இவைகளைப் போல் இன்னும் ஏராளமாக சிற்பங்கள் உள்ளன.

★

ஔந்தாவிலுள்ள ஜகந்நாதர் கோவில்.





இந்திய சிற்பங்களின் அமரத் தன்மையை அற்புத சிருஷ்டி களான அஜந்தா சிற்பங்கள் நமக்கு நிரூபித்துவருகின்றன. கண்கவர் ஓவியங்களுடனும் சிற்பங்களுடனும் விளங்கும்
5 அஜந்தா குகை ஒன்றின் வாயில்புறத் தோற்றம்.

ரிக்ஷா வண்டி

மாத்தளை—அருணேசர்

"ரிக்ஷா" என்றழைக்கப்படும் ஆளிழுக்கும் வண்டியைப் பற்றி அறியாதார் நம் நாடுகளில் இருக்கமாட்டார்கள். ஆனால் அந்த ரிக்ஷா உண்டான விதத்தைப் பற்றி எல்லோரும் அறிந்திருக்க முடியாது. மனிதனை மாடாக மாற்றி வைத்த அந்த ரிக்ஷாவைப் பற்றிய வரலாறுதான் இக்கட்டுரை.

1854-ம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து கீழ்த்திசை நாடுகளுக்கு கம்மோடன் பெரி என்பவரின் கப்பலொன்று வந்திருந்தது. அதில் ஜோனாதன் கோபில் என்னும் ஒருவர் சேவையில் இருந்தார். இவர்தான் ரிக்ஷா வண்டி ஏற்படுவதற்கு மூலகாரணமானவர் எனக் கூறப்படுகிறது. இவர் கீழ்நாடுகளில் சுற்றிக் கொண்டிருந்தபோது தம் கப்பல் தொழிலை விட்டுவிட்டு ஓர் மிஷனரியாக (மதப் பிரசாரகராக)ச் சேவை செய்ய விருப்பங்கொண்டு அத்தொழிலிலிருந்து விலகிக் கொண்டார். பின் மிஷனரியாக ஜப்பானுக்குப் போய் அங்கு சில காலம் வசித்து வந்தார். அங்கிருந்த போதுதான் மனிதன் இழுத்துச் செல்லத் தக்க

தான ஒரு வித வண்டியைப் பற்றிய கருத்து இவர் மனதில் தோன்றியது. அக்கருத்தை அவர் உடனே வெளியிட்டார். அதனை அநுசரித்து உண்டாக்கப் பட்டதே இந்த ரிக்ஷா என்னும் வண்டி.

முதலாவது ரிக்ஷா 1866-ல் தோன்றியது. இதற்கு ஜப்பானியர் தம் மொழியில் "ஜின் ரிக்ஷா" (மனித சக்தி இழுக்கும் வண்டி) என்று பெயரிட்டழைத்தனர். அதாவது, இயந்திர சக்தியின்றி மனிதனுடைய பலத்தினுலேயே ஓடும் வண்டி என்பது அதன் பொருள். இதனை ஆங்கிலேயரும் ஜப்பானியர் அழைத்த பெயராலேயே அழைத்து வந்தனர். நாளடைவில் "ஜின்" என்ற முற்பகுதி விடப்பட்டு "ரிக் ஷா" என்பது மட்டுமே பழக்கத்தில் நின்றது. இந்த புதுவித வண்டி பிறகு சைனு. சிங்கப்பூர், பர்மா. இந்தியா, இலங்கை முதலிய பல நாடுகளிலும் ஏற்பட்டது.

இந்தியாவில் இது சென்ற நூற்ருண்டின் இறுதியில் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து வந்த பிரஞ்சு கிழக்கிந்திய கம்பெனியைச் சேர்ந்த சில அதிகாரிகளால் சென்னைக்கு முதன் முதலாக உபயோகத்துக்குக் கொண்டுவரப் பட்டதாகத் தெரிகிறது. அதன் பின்புதான் இது இந்தியாவில் மற்ற பாகங்களுக்கும் பரவலாயிற்று.

இது முதன் முதல் கல்கத்தாவுக்குக் கொண்டுவரப்பட்ட போது, ரிக்ஷாவின் சொந்தக்காரரும் அவற்றை இழுப்பவரும் அசல் சீனர்களாகவே இருந்தனர். இவ் வண்டிகளை இழுப்போரை அக்காலத்தில் இந்தியர்கள் "வாலில்லாக் குதிரைகள்" என்று கூச்சலிட்டுக் கேலி செய்து இகழ்ந்து வந்தனர்.

பின்னர், சிறிது சிறிதாக இந்த வண்டியின் உபயோக நன்மையைப் பற்றி நாளடைவில் மக்கள் அறியத் தொடங்கினர். குறுகிய சந்துள்ள வீதிகளிலும் குன்று களின் மேலுள்ள நகரங்களில். உயரப் போகவும் இறங்கி வரவும் இது மிகவும் ஏற்றதாயிருந்ததுடன் மலிவாகவும் இருந்ததைக் கண்டனர். ஆகவே 1915-ம் ஆண்டிலிருந்து இந்தியர்களும் இத்தொழிலில் ஈடுபடத் தொடங்கினர்.

கடந்த 2-வது மகாயுத்த காலத்தில் பெட்ரோல் கட்டுப்பாடு ஏற்பட்டிருந்த போது வாடகைக் கார்களும், குதிரை-மாட்டு வண்டிகளும் விலையேறி யிருந்ததால் ரிகஷாக்களின் தொகையும் அவற்றை இழுப்போரின் தொகையும் ஏராளமாகப் பெருகத் தொடங்கின. 1944-ம் ஆண்டிலெல்லாம் கல்கத்தாவிலும் சென்னையிலும் வாடகை ரிக்ஷாக்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட வேண்டிய அளவுக்குப் பெருக்கமடைந்து விட்டது! அவ்வாண்டில் கல்கத்தாவில் மாத்திரம் 30,000 லைசன்ஸ் பெற்ற ரிக்ஷா இழுப்பவர்கள் இருந்தனரென்ருல் கட்டுப்படுத்தாமல் என்ன செய்வது? இப்படி கட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் அச்சமயம் நம்பர் தகடுகளின் விலை, ரிக்ஷாக்களின் விலையைவிட அதிகமாக விற்கப்பட்டதாம்! மிகவும் ஏற்றமான நிலையிலும் ஒரு ரிக்ஷாவின் விலை ரூ. 300-க்கு மேல் போகாத போது.

இப்போது மனிதன் இழுக்கும் ரிக்ஷா வண்டிகளை ஒழித்து விடுவதற்காக முயற்சி நடக்கிறது. மனிதனை மனிதன் வண்டியில் வைத்து, மாடு போல இழுத்துச் செல்வதென்ருல் அது மனிதனை மிருகத்துக்குச் சமமாக அடிமைபடுத்திக் கொடுமைக்குள்ளாக்கும் படுபாதகமான செய்கையேயன்றி வேறென்னவாகும்? அத்துடன் அது மனிதன் மனித இனத்தையே - தன்னையே - கேவலப்படுத்திக் கொள்வது போன்றது மாகும். ஆகவே இக்கொடூரமான செய்கையை ஒழித்துக் கட்டுவது அவசியமேயாகும்.

சென்ற யுத்தகாலத்தில் 1940-ம் ஆண்டளவில் இந்த ரிக்ஷாவை

சைக்கிளுடன் பக்க வண்டியாக இணைத்து ஆள் இழுத்துக் கொண்டு ஓடாமல் சைக்கிளில் உட்கார்ந்து காலால் மிதித்து ஓட்டிக் கொண்டு போகக்கூடிய விதமாய்ப் புதுவித அமைப்பில் செய்யப்பட்டது. இதற்குச் செலவும் உழைப்பும் குறைவே. இது இப்போது பல முன்னேற்றங்களுடன் பல இடங்களிலும் உபயோகத்திலிருக்கிறது. ஷாங்கையில் இவை மனிதனிழுக்கும் ரிக்ஷாவாக இல்லாமல் செய்யப்பட்டன. ஐரோப்பாவில் கூட சைக்கிள் ரிக்ஷாக்கள் உபயோகத்துக்கு வந்துவிட்டதுடன், அவை கால் மிதிப்பு அமைப்பு நின்று மோட்டார் இயந்திர சக்தியால் ஓடக்கூடிய ரிக்ஷாக்கள் விருத்தியடைந்தும் உள்ளன. இது சர்வ சாதாரணமாகக் கிடைக்கக்கூடியதாயிருப்பதால் ஆள் இழுக்கும் இழிவான தொழிலை ஒழித்து விடுவது எளிதே. இயந்திர வாகனங்கள் மலிந்துள்ள இக்காலத்தில் மனிதரை மட்டுமல்ல, மாடு குதிரை முதலிய மிருகங்களைக் கூட இத்தகைய வதைகளிலிருந்து விடுதலை பெறச் செய்து விடலாம்.

சென்னை ராஜ்யத்தில் இந்த ரிக்ஷாக்களின் எண்ணிக்கை இப்போது மிகவும் குறைக்கப்பட்டுள்ளது. லைசென்ஸ் காலவதியான பின்பு புது லைசென்ஸ்கள் வழங்கப்படுவதில்லை. இந்த ரீதியில் அடுத்த வருஷத்திற்குள் சென்னை நகரில் ரிக்ஷாக்களே இல்லாத நிலைமை ஏற்பட்டு விடலாம். ஜட்கா குதிரை வண்டிகளும் இப்போது முன்பைவிட எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டது. சைகிள் ரிக்ஷாக்கள் எண்ணிக்கை இப்போது அதிகரித்துள்ளன. ★

திரு அருட்பா (1000 பாடல்கள் கொண்டது)வை அருளிச் செய்த வடலூர் ஸ்ரீராமலிங்க சுவாமிகளின் ஜன்மதினம் அக்டோபர் 5வ வருகிறது.



இவரை கைம்பெண்போல சித்தரித்து வருவது அறியாமையாகும். இவர் கம்பீரமான மீசையும் கிருதாவும், தலைப்பாகையும் பாதரட்சையும் அணிந்தவர். இத்தகவல்களை அவர் சிஷ்யர் தொழுவூர் வேலாயுத முதலியாரிடம் குறிப்பிட்டிருக்கிறார்.

அவருக்கு எதிரிடையாக இருந்த சிலர் அவருக்கு தீங்கு செய்ய தேடித்திரிந்ததால் அவர் சில சமயங்களில் முட்டாக்கிட்டு மறைந்து சென்ற ஒரு தோற்றத்தை அவருடைய மெய்த்தோற்றமாகக் கொள்ளல் அறியாமையாகும்.

1867-ல் திருவருட்பா அரங்கேற்றப்பட்டது. அந்த வருஷத்திலேயே சமரச சுத்த சன்மார்க்க சங்கம் நிறுவப்பட்டது.

குதுப்மினர்

‘அரசிளங்கோ’

அன்பும் அறனும் இணைந்து காதலில் மலரும் இளம் நெஞ்சங்களுக்குப் பூரண நிலவுகூட புன்னகை செய்யுமாம். கற்பனை ஊஞ்சலிலே தன்னை மறந்து கவிபாடும் கவிஞர்களுக்கு நெளிந்தோடும் ஓடையும் தித்திக்கப் பாடுமாம். கலை உள்ளம் மூகிழ்ந்த இதயங்களுக்குச் சிற்பி செதுக்காத கல்கூட கலை உரைக்குமாம், கதை கதையாகச் சொல்லுமாம்.

அத்தகைய கதை சொல்லி நம்மையெல்லாம் கருத்தில் மூழ்கடிக்கும் கல்லோவியங்கள் நாடெங்கும நிறைந்துள்ளன: காண வருவோரைக் கண்டு கதையும காரணமும் சொல்லி நம்மைத் திகைக்க வைக்கின்றன .

கதையினைக் கூறி மகிழும் நெடுந்தூண் ஒன்று டில்லிமா நகரின் கண் உள்ளது. நெஞ்சுரம் கொண்ட போர் வீரனைப் போல நின்றவாறே, காண வருவோரைப் புன்முறுவலுடன் வருகையேற்கும் இத்தூணே டில்லியைத் திருவாக்கும் குதுப்மினராகும்.



இக்குதுப்மினர். டில்லி பழைய புகை வண்டி நிலையத்திலிருந்து எட்டுமைல் தொலைவில் உள்ளது. குதுப்பில் நுழைவதற்கு முன், பல்வேறு சாலைகள் வெளியில் வந்து மோதுகின்றன. கோட்டை மதில்களைப் போல நீண்டு வளைக்கப்பட்டிருக்கும் சுவர்கள் பலவற்றை இங்கே காண்கிறோம். உள்ளே கட்டிடங்கள் ஆங்காங்கே இடிந்தும் மொட்டையாக நின்றுகொண்டும் இருப்பதைக் காணலாம். சிற்சில இடங்களில் நிறைய பாறைக் கற்கள் தரையில் இறைந்து கிடக்கின்றன. உள்ளும் புறமும் நிழல் தரும் மரங்கள் சிறப்பாக வேப்ப மரங்கள் இனிய காற்றை வீசி மகிழ்விக்கின்றன.

முன் காலத்தில் அகழியாக இருந்த இடங்கள் இன்று தூர்த்தும், இடிந்தும் போயிருப்பதைப் பார்க்கலாம்.

குதுப்மினாரின் அருகில் ஒரு இரும்புத் தூண் நிற்கிறது. இது நான்காவது நூற்றாண்டின் சின்னம் என்று சொல்லப்படுகிறது. இந்தியாவைப் படையெடுத்து வந்த நாதிர்ஷா என்ற மன்னன், இத்தூணை அசைத்து, எடுத்துவிட வேண்டும் என்று விரும்பினான். ஆனால் முடியவில்லை. இதன் எடை 6 டன்கள் என்கின்றனர்.

பழங்கதைகளைச் சொல்லும் இடிபாடுகள்

இதன் அண்மையில்தான் அலைமினார் என்ற இடிந்து போன தூண் உள்ளது. வெற்றி வீரனைப் போல் நிற்கும் குதுப்மினாரைவிட மிகப் பெரியதான ஒன்றைக் கட்ட வேண்டும் என்று விரும்பினான் கில்ஜீ வம்சத்தின் இரண்டாவது மூடிமன்னன் அலாவுத்தீன். இத்தூண் சுமார் 50 அடி உயர்ந்தும், பின்னர் மேலும் உயராமலேயே நின்று விட்டது!



குதுப்மினார் – ஒரு காட்சி

மொட்டையாக உள்ள இது, இப்போது வானம் பார்த்தவாறு நிற்கிறது. வானம் பார்த்து நிற்கும் இதை, வருவோர் போவோர் பார்க்காமல் போவதில்லை. இது கருங்கற்களாலும் சுண்ணாம்பு காரையாலும் கலந்து எழுப்பப்பட்டிருக்கிறது. முதலில் ஒரு வளைவான பிரகாரம் கட்டப்பட்டு அதன் நடுவில் தூண்போல் எழுப்பப்பட்டுள்ளது. வட்டமாக தளம் சுற்றிலும் கட்டப்பட்டிருக்கின்றது. ஒரு புறத்தில் பல நுழைவாயில்களைக் கொண்ட சுவர்கள் இடிந்தும் சரிந்தும் பொலிவிழந்து கிடக்கின்றன.

இடிந்த இந்த அலைமினாரை விட்டுக் குதுப்மினாரை நோக்கிச் செல்வோம்.

குதுப்மினார் பன்னிரண்டாவது நூற்றாண்டில் குத்புதீன் என்ற முதல் அடிமை அரசனால் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. என்றாலும், இவர் காலத்தில் இது முற்றுப் பெறவில்லை.

அலைமினார், முற்றுப் பெறவில்லை

இவருக்குப்பின் பட்டம் ஏற்ற அல்தாமஷ் என்பவர் காலத்தில் தான் இத்தூண் முற்றுப் பெற்றது.

குதுப்மினார் அடித்தளத்தில் நின்றுகொண்டு தூண் உச்சியை நோக்கும்போது, நீலவானில் ஓடும் வெண்ணிற மேகங்கள் குதுப்பின் உச்சியை மோதி, தூண் சாய்ந்து விழுந்து விடுமோ என்ற அச்சம் பிறக்கச் செய்கிறது.

இந்நெடுந் தூணின் உயரம் 238 அடி. நீண்ட பெரிய சிலை போல அடிப்பாகம் அகன்று, மேலே போகப் போக சிறுத்துக் கொண்டே உயருகிறது. இத்தூணை ஐந்து மாடி (கட்டடங்கள்) களாகப் பிரிக்கலாம்.

முதல் மாடி தரையிலிருந்து 95 அடி உயரமும், இரண்டாவது 51-ம், மூன்றாவது 41-ம, நான்காவது 26-ம், ஐந்தாவது மாடி 25 அடி உயரமும கொண்டிருக்கின்றன.

தூணின் அடித்தளத்திலிருந்து பத்து அடி உயரத்தில் பூவேலைகள் செதுக்கப் பட்டிருக்கின்றன. அருகில் சென்று பார்க்கும்போது தான் சிற்றுளிகளால் பொறிக்கப் பட்டிருக்கும் (குரானைப் பற்றிய) அரபி எழுத்துக்களும், அசல் பூவேலையைப்போல திகழ்வது உண்மையில் ஆச்சரியத்தை அளிக்கின்றது. தூண் உயர உயர குறிப்பிட்ட இடங்களில் பூவேலைகளைக் காணலாம்.

தரையிலிருந்து இரண்டாவது மாடி முடியும் வரை தூண் ஒரே மாதிரியாகவே உயர்ந்து செல்கிறது. மூன்றாவது கட்டத்திலோ முக்கோணப் பட்டைகளைப் போல் கற்கள் இணைந்து உயருகிறது.

நான்காவது மாடி, வெண் கற்களால் இழைக்கப்பட்டவை. இதுவரையில் சிவப்பாகவே தோற்ற மளித்த கல்லின் நிறம், இங்கு ஏறும்போது, வெண்மை உருவம் எடுக்கிறது. இதற்குக் காரணம் வெள்ளை நிறக் கற்களால் இந்த இடத்தில் தூணை எழுப்பியிருப்பது தான்.

குதுப்மினார் - மற்றொரு காட்சி

தரையிலிருந்து மூன்ருவது மாடிவரை நிறங்கொண்ட சிவந்த கற்களால் உயர்கின்றதல்லவா? இந்த மங்கலான சிவந்தநிறம் மாறி மூன்ருவது மாடியிலிருந்து தூய வெண்மை நிறக் கற்களைக் கொண்டு தூண் உயருவதைக் காணலாம். பின் உச்சிப் பகுதி சிவந்த நிறத்துடன் முடிவுறுகிறது.

இவையெல்லாம், வெளிப்புறத்தில் தரையில் நின்றவாறு மேல் நோக்கிப் பார்க்கும்போது தோன்றக்கூடிய காட்சி நிலைகளாம்.

இது வரையில் குதுப்மினரின் வெளித் தோற்றத்தைக் கண்டோம். இனி தூணின் உள்ளே நுழைவோம்.

குதுப்மினரின் முகப்பில் வாயிற்காப்போன் நின்றுகொண்டிருக்கிருன்! வருவோர், போவோரைப் பார்க்கிருன்!

இப் பெரிய தூணின் உள்ளே ஏறுவதற்குப் படிக்கட்டுகள் சுற்றி சுற்றி கட்டப்பட்டிருக்கின்றன. தொடக்கத்தில் பத்துபேர் சேர்ந்து தாராளமாக ஏறலாம்.

உள்ளே ஏறும்போது இருள் கவ்வுகிறது, இடையிடையே அத்தூணில் காற்ருேட்டத்திற்காகச் சன்னல்கள் பொருத்தப்பட்டுள்ள. இதன் வழியே ஒளியும் காற்றும் வருகின்றன. இது போன்ற காற்று அமைப்புகள் உச்சி வரையிலும் உள்ளன.

தூணின் ஒவ்வொரு மாடியிலும் (கட்டம்) பால்கனி போன்று தூணைச் சுற்றி வருவதற்கு வழி, கட்டப்பட்டிருக்கிறது. இங்கிருந்து டெல்லியின் வான வெளித் தோற்றத்தையும், சுற்றுப் புறங்களையும் கீழே அழிந்து கிடக்கும் கட்டடங்களையும் நன்கு காணலாம்.

முதல் மாடியிலிருந்து மீண்டும் மேலே ஏற ஏறப் படிகள் குறுகுகின்றன. நடை பாதையும் குறுகுகிறது. தூணின் கோபுரம் மெலிந்து உயர உயர, வழியும் குறுகிக்கொண்டே உயர்கிறது. மூன்ருவது மாடியில் தூண் மிகவும் குறுகி விடுகிறது.

ஆரம்பத்தில் பலபேர் வரக்கூடியதாக இருந்தபாதை, இப்போது இரண்டு ஆட்களே போகும்படியாக ஆகி விடுகிறது. இன்னும் சில அடிகள் ஏறியபின் ஒரே இருட்டாகி, இங்கு ஒரே ஆள் ஏறிப்போகக் கூடிய நிலையினைக் காணுகின்ருேம். ஏறக்கூடிய ஒவ்வொருவரும் நடுத்தூணையும் சுவரையும் தொட்டுத் தொட்டு ஏறுவது வேடிக்கையாக இருக்கும்.

ஒவ்வொருவராக ஏறி, இறுதியில் உச்சியையடைய வேண்டும். இங்கு வந்தவுடன், காற்று தன் கோபத்தை நம்மீது காட்டுகிறது. ஆளைப் புரட்டிக் கீழே தள்ளிவிடலாமா என்று கச்சை கட்டிக் கொண்டது போல் அவ்வளவு ஓங்காரமாக வீசுகிறது. கீழே விழுந்து விடாமல் பிடித்துக் கொள்ள பால்கனியைச் சுற்றி இரும்புக் கம்பிகள் கட்டிவிடப்பட்டிருக்கின்றன.

உச்சியில் இருக்கும்போது நீல வானில் தவழ்ந்து அசையும் வெண் மேகங்கள் தூணில் மோதி உச்சி இடிந்து விழுந்தால் என்னவாகும் என்ற அச்ச நினைவு முதன் முதலில் ஏறுவோரின் நெஞ்சில் கண்டிப்பாக ஏற்பட்டே தீரும்!

தூண் உச்சியில் நின்றவாறு எத்திசையையும் எந்த இடத்தையும் காணலாம். பாராளுமன்றம் பார்க்கலாம். செங்கோட்டைத் தெரியும்! யமுனை ஆறு எழிலுடன் விளங்கும். ஜும்மா மசூதி போன்ற ஒவ்வொன்றும் நம் கண்களுக்கு நல் விருந்தை அளிக்கும்.

வாழ்க்கையில் மேல் நிலையை எய்துபவர்கட்குப் புதிய உணர்வும், தென்பும் ஏற்படுவது போலவே டெல்லியில் மாவீரன் போல நிலைத்து நிற்கும் குதுப்மினரின் உச்சியை அடைபவர்களுக்கு அந்த உணர்வு உண்டாவதில் ஆச்சரியம் இல்லை, அல்லவா? ★

இரட்டைப் புலவர்கள்

பாரதிநேசன்

நெற்களஞர்களுக்கு (உழவர்) மட்டுமல்ல சொற்கலைஞர் களுக்கும் பெயர் பெற்றது நமது செந்தமிழ்நாடு. செந்தமிழ்நாடு என்னும்போது நம் கண்முன்னே நிற்பது பாண்டிய நாட்டின் எல்லைகள்தான். ஆம்; செந்தமிழ் நாடு என்பது பொதுவாக தமிழ் நாட்டையும் சிறப்பாக பாண்டிய நாட்டையும் குறிக்கும் சொல்.

பழந்தமிழ்ப் பாடல் ஒன்று, செந்தமிழ் நாடென்பதை.

'' சந்தனப் பொதியச்
செந்தமிழ் முனியுஞ்
சவுந்திர பாண்டிய
னெனுந்தமிழ் நாடனுஞ்
சங்கப் புலவருந்
தழைத்தினி திருக்கு
மங்கலப் பாண்டி
வளநாடு ''

என்று கூறுகிறது.

மேலும், தென்புலம் என்றும் பாண்டிநாடு அழைக்கப்படுகிறது. இதனை, ''தென்புலங் காவல் மரு மான்...மதுரையும்'' என வரும் சிறுபாணாற்றுப்படை யடிகளாலும்; தென்புலங் காவல் என் முதல் பிழைத்தது, கெடுக என் ஞயுள்'' என்று ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் கூறுவ தாகவுள்ள சிலப்பதிகார அடி களாலும் நன்கு அறியலாம்.

பண்டமிழ்ப் பாமாலை கொண்ட பாண்டி வளநாட்டில், மறை நாட்டு தஞ்சாவூரின் தலைவனும், வணங்காமுடிப் பாண்டியனின் அமைச்சனுமாகிய 'தஞ்சை வாணன்' மீது கோவை பாடி, பாட்டொன்றுக்கு ஒரு பொன் தேங்காய் வீதம் இரட்டைப் புல வர்கள் பரிசு பெற்றனர் என்று ஏரோக்கும் செஞ்சொல்...''எனத் தொடங்கும் பாண்டி மண்டல சதகச் செய்யுள் கூறுகிறது. ('தஞ்சைவாணன் கோவை' பாடியது 'பொய்யாமொழிப் புலவர்' என்பது பெருவழக்கு.) இந்த இரட்டையர்களின் வாழ்க்கை மிக விசித்திரமானது.

சோழநாட்டைச் சேர்ந்த 'ஆமிலந்துறை' என்னும் ஊரில் பிறந்தவர்கள் இந்த இரட்டை யர்கள். இவர்கள் ஒருவருக்கொரு வர் அம்மான் சேய் முறையினர். ஒருவர் முடவர். மற்றொருவர் குருடர். இருவரும் சிறுவயதி லேயே சிறந்த தமிழ்ப் பாடல் இயற்றும் திறமை பெற்றிருந்த னர்.

உடற்குறை கொண்ட இவர் களின் அறிவு நிறைவுடன்தான் விளங்கியது. முடவர் செய்யுளைத் தொடங்கிப் பாதி முடிப்பதற்குள் குருடர் தம் நுண்ணறிவால் அதனை விரைந்து முடிப்பார். ஆனால் அச்செய்யுள் ஒருவர் பாடியது போன்றே இருக்கும்

குருடரின் தோள்மீது முடவர் அமர்ந்து கொண்டு குருடருக்கு வழிகாட்டுவார். இங்ஙனமே பல பெரும் செல்வந்தர்களை அண்டி அவர்கள் மேல் பாடல் பாடி பரி சில் பெற்று தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தனர். ஊரார். முட வரை 'முதுசூரியர்' என்றும் குரு டரை 'இளஞ்சூரியர்' என்றும் அழைத்தனர்.

ஒரு சமயம், இருவரும் மதுரைப் பதியிலுள்ள பொற்றாமரைத் தடா

கத்தில் குளிக்கும்படி நேர்ந்தது. முடவர் கரையில் உட்கார்ந்து கொண்டார். குருடர் தடாகத்தில் இறங்கி படித்துறையில் தன் ஆடையைத் துவைத்துக் கொண்டிருந்தார். அவ்வாறு துவைத்த பின்னர், அதனை நன்கு சுத்தப் படுத்த தண்ணீரில் விரித்து வீசினார். அப்படி வீசும்போது அந்த ஆடை கைத்தவறி விலகி தண்ணீருக்குள் அமிழ்ந்து விட்டது. குருடர் கைகளை நீட்டித் தேடினார். ஆனால் அவருக்குக் கிடைக்கவில்லை. கைகளை நீட்டி நீட்டித் தேடினார். ஆடை அமிழ்ந்த இடம் தெரியாமல் தவித்தார்.

அது கண்ட முடவர் கேலியாக,

''அப்பிலே தோய்த்திட்டடுத்
தடுத்து நாமதனை தப்பினல்
நம்மையது தப்பாதோ?''

என்றார். அது கேட்ட குருடர்,

''அப்படியே ஆனாலுங் கந்தை
அதிலுமோர் ஆயிரங்கண்
போனல் துயர்போச்சுப் போ''

என்று கூறி பாட்டை முடித்தார்.

மற்றொரு சமயம், இருவரும் மிக்க பசியுடன் ஆங்கூர் என்னும் ஊருக்குச் சென்றனர். அங்கே உள்ள கோயிலுக்குச் சென்று பிரசாதம் பெற்று பசிப் பிணியைப் போக்கிக் கொள்ள எண்ணினர்.

கோயிலில் பூசைக்குரிய மணி ஒலித்தது. வாத்திய கோஷங்கள் வானைப் பிளந்தன. ஆனால் இன்னும் பிரசாதம் வரவில்லை. புலவர்களுக்கோ பசி அதிகரித்தது. எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த முடவர்,

''தேங்குபுகழ் ஆங்கூர்ச் சிவனே
வல்லாளியப்பா நாங்கள்
பசித்திருக்க நியாயமோ?''

என்று பாடினார். உடனே குருடர்,

''போங்காணும் கூறுசங்கு
தோல்முரசு கொட்டொசை
யல்லாமல்
சோறுகண்ட மூளியார் சொல்?''

என்று சினத்துடன் பாட்டை முடித்தார்.

அதே சமயம், அப்பக்கம் வந்த கோயில் நிர்வாகஸ்தர் புலவர்களுடைய கவித்திறமைக்கு வியந்து அவர்களைத் தமதில்லத்திற்கு அழைத்துச் சென்று விருந்து செய்வித்து. பொன்னும் மணியும் கொடுத்து அனுப்பினார். ★

அறிஞர்கள் வாக்கில் 'அன்பு'

''அன்பு'' உள்ள இடத்தில் தான் உண்மையான வாழ்க்கையைக் காணமுடியும்.

—எமர்ஸன்.

அஹிம்சை, ''அன்பு'', கருணை என்பவைகளைக் கடைபிடித்தால் மிருகமும் கூட மனிதனாகிவிட முடியும்.

—காந்திஜி.

''அன்பில்லாதவர்கள்'' தமக்காகவே தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறார்கள். ''அன்புடைய''வர்கள் தமது வாழ்க்கையைப் பிறருக்காக உண்டாக்கிக் கொள்கின்றனர்.

—லெனின்.

அஸ்வமேத யாகம்

"பிரதிபா"

அஸ்வமேத யாகம் (யாகத்தில் குதிரையை பலியிடுவது) பாரத நாட்டில் மட்டுமின்றி புராதன கிரீஸ், ரோம், பாரசீக நாடுகளிலும் நடைபெற்று வந்திருக்கிறது.

யமுனை நதிக்கரையில் ஹரித்துவாருக்கும் டேராடூனுக்குமிடையே அஸ்வமேத யாகம் செய்த மேடையொன்று புதைபொருள் நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அஸ்வமேத யாக மேடை மூன்றாவது நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்று நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். சிலவர்மன் என்ற மன்னன் இங்கு இந்த யாகத்தை செய்ததாக ருசுக்கள் கிடைத்திருக்கின்றன. ஆனால் இந்த மன்னனைப் பற்றி அதிகம் தெரிந்திருக்கவில்லை.

அஸ்வமேத யாகத்தில் பத்து விதங்கள் உள்ளனவாம். இவைகளில் ஒன்றான 'கருடசாயா' என்ற அஸ்வமேத யாகத்தைத்தான் சிலவர்மன் செய்திருக்கிறானும். இந்த அஸ்வமேத யாகக் குண்டம் கருடன் பறப்பது போல செங்கற்களால் அமைக்கப்பட்டுள்ள காரணத்தால் 'கருடசாயா' என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

இந்த செங்கல் கட்டிடத்தில் சம்ஸ்கிருத கல்வெட்டுகள் காணப்படுகின்றன, இவை புது டில்லியில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்த யாகம் செய்யப்பட்டதன் நோக்கங்கள் இதுபற்றிய தகவல்

கள் காளிதாஸனின் ரகுவம்சத்தி லும், மாக்டனுல்ட், ஒல்டன்பர்க் எழுதிய நூல்களிலும் காணப்படு கின்றன. ஸ்காண்டிநேவிய நாடு களிலும் இந்த யாகம் நடைபெற் றிருப்பதாக ஒரு குறிப்பு இருக் கிறது.

சமுத்திர குப்தர் காலத்தில் தங்க நாணயங்கள் சிலவற்றில் அஸ்வ மேத யாகத்தைப் பற்றி தகவல்கள் காணப்படுகின்றன. குண்டூர் ஜில்லாவிலுள்ள நாகார்ஜுன கொண்டாவில் இந்த யாகம் சம் பந்தமான கல்வெட்டுகள் அநேகம் உள்ளன.

சந்திர குப்தன் அஸ்வமேத யாகம் செய்த இடம் இப்போது ஆராய்ச்சியாளர்களால் தேடப் பட்டு வருகிறது.

ராமாயணத்தில் இந்த அஸ்வ மேத யாகம் பற்றிய விவரங்கள் வருகின்றன. சர்வ லக்ஷணங் களும் பொருந்திய உயர்ந்த ஜாதி குதிரையை அலங்கரித்து பல நாடுகளுக்கும் அனுப்புவது ராஜாக்களின் வழக்கம். இதன் பின் பெரும்படை செல்லும். எந்த நாட் டில் அதை பிடித்துக் கட்டுகிறார் களோ, அந்தநாட்டினர் இப்படை களுடன் போரிட்டாகவேண்டும். இப்படி வெற்றிகரமாக திக் விஜயம் செய்து வந்த குதிரை யையே யாகத்தில் பலியாகக் கொடுப்பது வழக்கம்.

டேராடூனுக் கருகிலுள்ள அக்த கிராமம் என்ற இடத்தில் இரு அஸ்வமேத யாகக் குண்டங்கள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன.

அஸ்வமேத யாகம் செய்த மன் னர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். பாண்டவர்கள் கௌர வர்களை முறியடித்து வெற்றிகண்ட பின்னர் இந்த யாகத்தைச் செய்த னர். ராமனும் இதைச் செய்தார்.

இந்த யாகத்தைச் செய்ய ஏராள மான செலவு ஆகும் என்பது மட்டு மல்ல. இதர மன்னர்களை எல்லாம் பணியச் செய்யும் ஆற்றலும் வேண்டும்.

இந்த யாகம் எப்படி தோன்றி யது, முதல் யாகத்தைச் செய்தவர் கள் யார் என்பதெல்லாம் பற்றி விவரங்கள் கிடைக்கவில்லை. ஆரிய மன்னர்கள்தான் இதை முதன் முதலில் செய்தார்கள் என் பதற்கான ஆதாரங்கள் கிடைத் திருக்கின்றன. யஜுர்வேதத்தில் இந்த யாகம் பற்றிய தகவல்கள் ஏராளமாக இருக்கின்றன.

இந்த யாகத்திற்காக பொறுக்கி எடுக்கப்படும் குதிரை சர்வ லக்ஷணங்களும் பொருத்தியதாக இருக்கவேண்டும். 24 வயதுக்கு மேற்பட்டதாக இருக்கவேண்டும். இந்தக் குதிரையை மடக்கி யாகத்தை நடக்க வொட்டாமல் செய்பவர்கள் கொல்லப்படுவர் என்பதைக் காட்ட குதிரையை ஆயத்தமாக்கியபின் ஒரு நாய் கொல்லப்படும்.

குதிரை திக்விஜயத்திற்கு அனுப் பப்பட்டு திரும்பி வரும்வரையாகம் நடந்த வண்ணமாகவே இருக்கும். வெற்றியுடன் திரும்பி வரும் குதிரை பிரஜாபதியாகவே மதித்து பூஜிக்கப்படும். ராணி இக் குதி ரைக்கு எண்ணெய் தேய்க்கிறாள். ராஜா அன்ன ஆகாரம் ஊட்டு வான்.

குதிரையை மட்டும் பலி கொடுப் பதுடன் யாகம் முடிந்து விடாது. ஆடுகள், பசுக்கள் எருமை, ஒட்ட கம், காண்டாமிருகம், சிங்கம், புலி முதலிய மற்றும் இதர பிராணி களும் பட்சிகளும்கூட பலியிடப் படும். ஆனால் வீட்டு மிருகங்கள் மட்டுமே பலியிடப்பட்டு காட்டு மிருகங்கள் யாகத்திற்குபின் விடு விக்கப் படுவது வழக்கமாக இருந் திருக்கின்றது.

ராணி, இறந்துபோன குதிரை யைக் கட்டிக்கொண்டு இரவில் படுக்கவேண்டும் என்றும் அப்படி படுத்தால் அவளுக்கு குழந்தை பிறக்குமென்றும் நம்பி அனுஷ் டிக்கபட்டு வந்ததென்றும் பின்னர் அது கைவிடப்பட்டு விட்ட தென்றும் தெரிகிறது. மறுநாள் காலை ராணி தங்க ஊசிகளால் குதியையை பல பாகங்களாக கீற வேண்டும். அப்படி கீறின இடங் களில் குதிரை துண்டாக்கப்பட்டு தீயில் ஆகுதி செய்யப்படும். இந்த யாகத்திற்குப்பின்தான் சக்கிர வர்த்தி எனப் பட்டம் மன்னருக்கு கிடைக்கும். ★

பாட்டு பிறந்த நேரம்

"சாமா"

இரு நண்பர்கள் நட்புக்கு இலக்கணம் கூறலாம், இருவரின் லட்சியங்களும் மிக உன்னதமானவை. மிகப் பெரியது என்று கூடச் சொல்லவேண்டும். உறவாடும் உள்ளங்களிலே சதா உணர்ச்சி வேகம் ஊறிக் கொண்டேயிருக்கும். ஆம். அன்பும் அறிவும் ஒன்றுபட்டுவிட்டன. எதற்கு? போரில் வெற்றிபெறுவதற்குத்தான். அதற்கான திட்டங்களும் தயாராகிவிட்டன. செயலில் ஈடுபடவேண்டியதே...

நண்பர் செயலாற்றலுக்காகப் பிரிந்து சென்றுவிட்டார். நண்பரைக் கண்காணிக்க ஒற்றர் கூட்டமும் வட்டமிடுகிறது. அதன் நிமித்தம் நண்பர் மாறுவேடங்களுடன் வளைய வருகிறார். உண்பது ஓரிடம்; உறங்குவது ஓரிடம்; இளைப்பாறுவது வேறிடம் இப்படியாக நாட்கள் சென்றுவிட்டன.

சென்ற நண்பர் திரும்பவில்லை.

இங்கே, மற்றொரு நண்பர் எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டிருக்கிறார். அதற்குள் உடல் நலம் குறைந்து படுக்கையில் படுத்துவிடுகிறார். உடல் உஷ்ணமேறி கொதிக்கிறது. உள்ளமும் அப்படித்தான். அருகேயுள்ள மனைவி மக்கள் நண்பர்கள் இருந்து பணிவிடைகளைச் செய்துகொண்டிருக்கையில்—

சென்ற நண்பர் திரும்புகிறார். வந்தவர் நண்பரின் நோய்ப் படுக்கைக்கு வந்து, அருகே அமர்ந்து, சூடேறிக் கிடக்கும் சுடர் உடலில் கைவைத்து, "என்ன, ஏன் இப்படி?" என்று வினவுவதைப்போல், பார்க்கிறார்......

படுத்தவரின் உடலும் உள்ளமும் கங்கை நீர் அருவியாய்ப் பாய்ந்து குளிர்வித்து விட்டது போல் குணமாகி எழுந்து, "நண்பா! நீ வாழ்க...நீ வராததைக் கண்டு நான் எப்படியிருந்தேன் என்கிறாய்?" வினா எழுந்தது. கூடவே அதே மூச்சு விடும் வேகத்தில் பாடலும் பிறந்துவிட்டது—

தூண்டிற் புழுவினைப்போல்
—வெளியே
சுடர் விளக்கினைப்போல்—

என் நெஞ்சம் உனக்காக நீண்ட பொழுதாய் துடியாய்த் துடித்தது. அதுமட்டுமில்லை. நீ எங்கே எப்படி இருக்கிறாயோ என்ற நினைவும் வந்தது...

பாலும் கசந்ததடீ—படுக்கை
மிக நொந்ததடீ...

நீ அலைந்து திரிந்து உணவின்றி உறக்கமின்றி தவித்ததைக் கண்டு வருந்திவந்தேன். உடலும் நலிவுபட்டதால் படுத்தேன்.

ஆம்! நீ வந்துவிடுவாய் என்றே எண்ணிப் படுத்து கனவும் கண்டும் விட்டேன், இதோ இப்போது



வ. வே. சு. அய்யர்

பாரதியார்

வந்து என் நெஞ்சில் தண்ணென்று கை வைத்துவிட்டாய். இனி எனக்கென்ன?

இச்சை பிறந்ததடீ—எதிலும்
இனிப்பு வந்ததடீ......''

'' ஆகா! பாட்டு, பாடவே பிறந்துவிட்டாய். அதைக் கேட்கவே நான் வந்துவிட்டேன்.''

* * *

மேற்கண்ட சம்பவம் **மகாகவி பாரதியார்** புதுச்சேரியில் இருந்தபோது, அவரது உயிர்த் தோழரான மகரிஷி **வ. வே. சு. அய்யர்** அவர்கள் தேச விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, பிரிட்டிஷாருக்கு அஞ்சி அல்லல் பட்டபோது, வ. வே. சு. அய்யர் பிரிந்து சென்று மீண்டும் இருவரும் சந்தித்தனர்.

அச்சமயம், பாரதியார், பாடிய பாட்டுதான் - '' தூண்டிற் புழுவினைப் போல்...''. என பாரதியாரின் வாழ்க்கையைப் பற்றி எழுதிய அறிஞர் ஒருவர் எழுதியிருக்கிறார்.

இந்த ஆத்மார்த்த அன்புப் பிரிவாற்றாமையைச் சித்தரிக்கும் பாட்டு, இப்போது நடன மேடைகளில் எப்படியிருக்கிறது தெரியுமா?

''பாலும் கசந்தது, படுக்கையும் நொந்தது'' என்ற பாடலுக்கு அபிநயம் பிடிக்கும்போது, காதலன் பிரிந்து போய் காதலி அவன் அணைப்பை எண்ணி ஏங்குவதாக கேவலம் உடல் இச்சையைக் குறிக்கும் விரகதாபத்தை வெளியிடும் உணர்ச்சியைத்தான் நடன குமாரிகள் காண்பிக்கின்றனர். அதோடு, இன்னொன்றையும் குறிப்பிடவேண்டும். 'எவனோ என்னகம் தொட்டுவிட்டான்' என்ற பாட்டை அரைகுறையாக முடித்து விடுவதோடுமட்டுமில்லாமல், ''வந்து நின்ற நாயகன், அணைத்து முத்தமிடுவது போல்'' நடன பாவத்துடன் சில குமாரிகள் ஆடுகின்றனர்!...

ஆமாம்...சில நடன ஆசிரியர்கள் பாரதி பாடலின் பொருளைப் பூர்ணமாக அறியாமல் சிஷ்யைகளுக்குச் சொல்லிக் கொடுத்ததின் விளைவுதான், இக் காட்சிகள்.

பாரதி பாடிய பாட்டான 'தூண்டிற் புழுவினைப் போல்' காதலன் காதலி பிரிவான பாட்டாகச் சிலர் எண்ணிவிட்டனர். ஆனால் அது அப்படி எழுந்ததல்ல...அன்பின் உயர்வுக்கானது. ''அன்பு ஒரு கோபுரச் சுடர்–விரக வேதனை குழம்பிய குட்டை-''இவ்வாறு பாரதி பாடலை விமர்சித்து தமிழகத்து பிரபல அறிஞர் ஒருவர், சில வருஷங்களுக்கு முன் எழுதியிருந்தார்.'' இந்தப் பாட்டைப்போன்று. இன்னும் சில பாரதி பாடல்களும் நடன மேடைகளில் அரைகுறையாகப் பாடப்பட்டு வருவதால் கவிதையின் உயர்வே மங்கிவிடுகிறது.

இதை ஆட்சேபிக்கமுடியுமா? ★

மறக்க முடியாத சம்பவம்

மறக்க முடியாத சம்பவங்கள் சிலவேனும் உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும். அவைகளைப்பற்றி 200 வார்த்தைகளுக்குள் எழுதி அனுப்புங்கள். ஒவ்வொரு மாதமும் பிரசுரிக்கப்படும் முதல் கட்டுரைக்கு ரூ. 10 சன்மானம் தரப்படும். பிரசுரம் செய்யப்பட்ட இதர சம்பவங்களுக்கும் ரூ. 3 வீதம் கொடுக்கப்படும்.

ஆசிரியர்: 'திங்கள்', 17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

தந்தைக்கு துரோகம்

பகுத்தறிவுப் போட்டி பைத்தியம் என் தந்தைக்கு அதிகம். ஒரு முறை அவர் போட்டி கூப்பனை கவரில் போட்டு காலேஜ் செல்லும் என்னிடம் கொடுத்து அன்றே தபாலில் சேர்ப்பிக்கும்படி சொன்னார். ஆனால், பாழாய்ப்போன ஞாபக மறதி என்னை அவர் சொல்லி மூன்று நாட்களுக்குப் பின்னும் அந்தத் தபாலை அனுப்ப முடியாமற் செய்துவிட்டது.

மூன்று நாட்களுக்குப்பின் அவர் கொடுத்த கவரை என் மேஜை அறையினுள் கண்டபோது என் நெஞ்சம் பதறியது, அவர் விடைகள் சரியாக இருந்து விட்டால்...? ஐயோ... வரவிருக்கும் அதிர்ஷ்டத்தை என்னாலல்லவா அவர் இழக்க விருக்கிறார்? புத்திரனே தந்தைக்குத் துரோகியாவதா?

துணிந்து கவரைப் பிரித்த போது முடிவு தேதி முடிந்து இரண்டு நாட்களாகி விட்டன என்பதை யறிந்தேன். இந்த சம்பவம் நடந்து ஒருவாரத்திற்குப் பின் பத்திரிகையில் விடை வெளியான போது ரகசியமாக என் தந்தை பூர்த்தி செய்த கூப்பனை அத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தேன். ஐயோ பாவம்! முற்றிலும் சரியான விடை! பாவி, என் ஞாபக மாறதி பால் அவர் பரிசு பெற இயலாமற் போய்விட்டதே! அவர் இந்த விஷயத்தை உணர்ந்தால் வீட்டில் பெரிய பூகம்பம் ஏற்பட்டு விடுமே!

அன்றிரவு அவர், காலையில் நான் பார்த்த பத்திரிகையைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். என் நெஞ்சம் துடித்தது, நானே அவர் அருகில் சென்று குற்றமுள்ள நெஞ்சுடன், "என்னப்பா! விடை சரியா? முதற்பரிசு உங்களுக்கா?" என்றேன்.

"அன்றைக்கு நான் அனுப்பிய கூப்பனின் விடையின் நகலை எங்கேயோ தொலைத்து விட்டேன். தேடித் தேடிப் பார்த்தும் கிடைக்கவில்லை... சரியாக இருந்தால் பணம் தானாக வருகிறது!" என்று சர்வ சாதாரணமாகச் சொன்னார் என் தந்தை.

அவருக்கு துரோக மிழைத்து விட்டு நயவஞ்சக நாடகம் நடத்திய என் நெஞ்சம், என்னை ஆயிரம் ஈட்டிகொண்டு தாக்கியது. பாவம் இன்று நான் உண்மையை வெளியிட்டுவிட்டேன்... ஏனெனில் அவர் உயிருடனில்லை என்ற தைரியத்தில் தான்.

தர்மராஜன்,
சென்னை-1

தற்கொலை தப்பியது

காலையில் எஸ், எஸ். எல். ஸி. முடிவு பேப்பர்களில் பிரசுரமாகியிருந்தது. வழக்கத்திற்கு விரோதமாக, அவ் வகுப்பில் நான் பெயி

லாய்விட்டிருந்தேன். சொல்லொணு மன வருத்தத்தோடு, இரவு வரை ஊர் முழுதும் பித்தன் போல் சுற்றித் திரிந்த நான், கடைசியாக விபரீதமான ஒரு முடிவிற்கு வந்து, தண்டவாளத்தில் தலை கொடுத்த படி படுத்திருந்தேன். சென்னைக்கும் போகின்ற கொச்சின் எக்ஸ்பிரஸ் என்னை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தது. இன்னும் ஓரிரு விஞடிகள் தான் என் வாழ்வென்ற நிலை. ஆனுல்...?

அதுகாறும் வேகமாக வந்து கொண்டிருந்த ரயில், என்னை நெருங்கியதும் சாவகாசமாக நின்றுவிட்டது. அத்துடன் ரயிலிலிருந்து இறங்கி, என்னை நோக்கிப் பலபேர் வந்தார்கள். அதுகண்டு, 'அவர்கள் தற்கொலை புரிய முயன்ற குற்றத்திற்காக நம்மைப் போலீஸில் பிடித்துக் கொடுப்பார்களே! அதற்காகப் போலீஸார்கள் உடல் துடிக்கத் துடிக்க நம்மை அடித்து வாட்டுவார்களே. ஐயோ...!' என்று மனங் கலங்கிக் கொண்டிருந்தேன் நான். அப்பொழுது...

''தம்பி எழுந்திரு! ரயில் தான் நின்று விட்டதே. இன்னுமேன் இந்தக் குளிரில் படுத்திருக்கிருய்? நீயேன் இவ்வாறு படுத்திருக்கிருய் என்பதை நாங்கள்தான் அறிந்து கொண்டு விட்டோமே'' என்ருர் ரயில் கார்டு.

''உங்களுக்குத் தெரிந்து விட்டதா...?'' என்று பயத்தோடு கேட்டேன் நான்.

''ஆமாம் தம்பி! போகிற பாதையில் 'லைன்' மழையால் விலகியிருக்கிறதென்பதை, போன ஸ்டேஷனில் எங்களுக்குத் தகவல் கொடுத்து விட்டார்கள்'' என்று என் பயத்தை நீக்கினுர் ரயில்வே கார்டு.

அப்பாடா! அப்பொழுதுதான் எனக்கு உயிர் வந்தது. செய்ய விருந்த தவறுக்கு வருந்தி, அதைத் தடுத்து விட்ட ஆண்டவனின் செயலை வியந்து வீடு திரும்பினேன் நான். அதுமட்டுமல்ல, அடுத்த நாள் காலைப் பேப்பரில் விடுபட்டுப் போன பரீட்சை நம்பர்களின் வரிசையில், என்னுடைய நம்பரும் இருக்கக் கண்டேன்.

ப. தங்கப்பன்,
ஈரோடு.

என் வீட்டில்?

இரவு மணி எட்டிருக்கலாம். பார்மஸியை மூடிவிட்டு வீட்டிற்குச் செல்வதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தேன் நான். அப்பொழுது......

''டாக்டர் சார்! ஓடி வாருங்கள். என் அம்மாவைத் தேள் கொட்டி விட்டது. ஓடிவாருங்கள்'' என்று கதறியபடி ஓடோடி வந்தான் ஒரு சிறுவன்.

அந்த அம்மாளுக்கு வேண்டிய மருந்துகள் கொடுத்து ஒரு ஊசியையும் போட்டு, இனி ஆபத்தில்லையென்ற நிலைமை யேற்பட்டதும் நான் என் வீட்டிற்குச் சென்றேன். அங்கே...

அன்று என்றுமில்லா வகையில், என் வீட்டு வாசலில் பலர் கூடியிருந்தார்கள். சிலர் தேம்பித் தேம்பி அழுகின்ற சப்தமும் தெளிவாகக் கேட்டது. என்னவோ, ஏதோ வென்ற பயத்தோடு நான் உள்ளே நுழைந்தேன். ஐயோ, அங்கே நான் கண்ட காட்சியை எப்படிச் சொல்வேன்? என்னுடைய ஒரே மகள் தேள் கொட்டிய விஷம் தாளாது பிணமாகிக் கிடந்தாள்.

தேள் கடித்தவுடன், எனக்கு விபரம் தெரிவிக்கப் பலரை பார்மஸிக்கு அனுப்பினுர்களாம். ஆனுல் நான் அங்கு இருந்தால் தானே? அந்த சமயத்தில் நான் வெருெரு தேள்கடிக்கு வைத்தியம் செய்து, வேருெருவனின் உயிரைக் காப்பாற்றும் காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேனே!

வி. ராஜப்பன்,
ஈரோடு.

யானைகள்

பா. கோ.



பேனாவைக் கையிலெடுத்து எழுதத் தொடங்குமுன் 'பிள்ளையார் சுழி' போட்டுத்தான் ஆரம்பிக்கிறோம். எந்த நல்ல வேலையையும் தொடங்குமுன் 'நிர்விக்கினமாக' நிறைவேற வேண்டுமென்று ஸ்ரீ விக்னேஸ்வரரைத் தொழுதே செய்கிறோம். விநாயகர் என்றதும் யானையின் நினைவு நமக்கு வருகிறதல்லவா? விநாயகரைப் போலவே யானையும் நம் வாழ்வில் வியாபகம் பெற்றுள்ளது. இந்த யானை இல்லாமல் எந்த நல்ல காரியம் நடக்கிறது? கோயிலில் விழா, சுவாமி புறப்பாடு என்றால் முன்னே மணி ஒலிக்க, அசைந்தாடி வருவது எது? ஊர்வலங்கள், கல்யாணங்கள், பொது விழாக்கள் என்றால் நாம் முன்னே காண்பது எது? யானை இல்லாத சர்க்கஸ் உண்டா? ஒரு மிருகக்காட்சி சாலைக்குப் போனால், விநோத விலங்குகளை வேடிக்கையாய்ப் பார்க்கும் நாம், யானை அருகே வரும்போது அங்கும் சற்று நின்று பார்க்கத்தானே செய்கிறோம்?

முன்னாளில் நாட்டின் காவற் படைகளில் நாயகமாக விளங்கிய யானை, பவனிகளில் அரசனைச் சுமந்து வரும் பாக்கியம் பெற்றது. போரில் நாட்டின் கொடியைப் பெருமையாகத் தூக்கி நின்றது.

திருமணம் பற்றிய செய்தியை யானை மீதிருந்து நகர மாந்தர்க்கு அறிவிக்கும் பழக்கம் அக்காலத்தில் இருந்ததைச் சிலப்பதிகார வாயிலாக அறிகிறோம். காவியங்கள், புனிதநூல்கள் ஆகிய அற்புத இலக்கியசிருஷ்டிகளின் அரங்கேற்றுவிழாவில் அலங்கரிக்கப்பட்ட யானைகளே அவற்றை எடுத்து வந்தன. சமீபத்தில் சென்னை மிருகக்காட்சி சாலையின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டதல்லவா? அப்போது நடைபெற்ற விநோத விலங்குகளின் ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் பேறு யானைகளுக்கன்றோ கிடைத்தது!

யானையைப்பற்றிக் குறிப்பிடாத தமிழ்ப்பேரிலக்கியமே அநேகமாக இல்லை எனலாம். புறநானூற்றில் பல இடங்களில் யானையைப் பற்றி கூறப்படுகிறது. அதியமானின் வள்ளன்மையை விளக்க யானையின் உதாரணத்தைக் கையாளுகிறார் ஔவையார். முற்காலத்தில் போரையும் வீரத்தையும் சிறப்பாகக் குறித்தது யானை. போர்க்களத்தில் யானையை எதிர்த்து, வேலெறிந்து வீழ்த்தி, வெற்றி கொள்ளுதலை காளையின் வீரம் எனக் கருதப்பட்ட காலம் அது. போர்க்களத்தில் மலை, மலையோடு மோதுதல்போல் யானைகள் போரிட்ட காட்சியைக் கலிங்கத்துப் பரணி கவின் பெறக் கூறுகிறது. குறிஞ்சிக்கலி என்ற நூலிலும் யானைக்கும், புலிக்கும் இடையே நடக்கும் போர்க்காட்சி ஒன்று இடம் பெற்றுள்ளது.

முற்காலத்தில் வாரிசு இன்றி ஒருநாட்டு அரசன் இறந்துவிட்டால், அடுத்த வாரிசைத் தேர்ந்தெடுக்கும் மகத்தான பொறுப்பை பட்டத்து யானைகள் ஏற்று, அற்

புதமாக நிறைவேற்றி வைத்த தைப்பற்றிப் பலகதைகள் கேட்டதில்லையா? அரசர் தேர்தலில் அன்று அங்கம்வகித்தயானை, இன்றைய அரசியல் தேர்தல்களிலும் அங்கம் வகிக்கத் தவறவில்லை. கட்சிகளின் தேர்தல் பெட்டிகளை அலங்கரிக்கும் சின்னங்களில் யானைக்குத்தான் எத்தனைப் போட்டி, எத்தனைமவுசு! 'யானைப் பெட்டிக்கு ஜே! யானைப் பெட்டிக்கே ஓட்டுச் செய்யுங்கள்' என்று ஊர் அதிரக் கூச்சலிட்டு ஊர் வலங்கள் வந்ததை எல்லாம் இதற்குள் நாம் மறந்திருக்க முடியாதல்லவா?

யானை, பருமனில் மலை. உறுதியில் வைரம். பசியில் பகாசுரன். நடையில் அழகன். நல்லுழைப்பில் ஒரு அடிமை. வஞ்சந் தீர்ப்பதிலோ கொடிய கூற்றம். காதல் துறையிலும், குடும்ப உணர்விலும், கூடிவாழும் பண்பிலும் மனிதனைப் போன்றது அது.

நற்குணங்கள் பல நிறைந்திருந்தும், யானையிடம் நாயிடம் காணும் நன்றி உணர்வை நாம் காணமுடியாது. திடீரென மதங் கொண்டு விட்டால், பலநாள் பழகிய தன் பாகனையே பரிவின்றிக் கொல்லும் சிறுமதி படைத்தது அது.

''பட்டிக்காட்டான் யானையைப் பார்த்த கதை''—துதிக்கையில் ஊசியால் குத்திய தையற்காரன் கடையில் சேற்றை வாரி இறைத்து சேதப்படுத்திய யானைக் கதை—திருமாலால் முதலை வாயிலிருந்து மீட்கப்பட்ட கஜேந்திரன் கதை—சோமசுந்தரர் கல்யானைக்குக் கரும்பு கொடுத்த கதை—குறவள்ளியை எழில் முருகன் இனிது மணம் முடிக்க ஐந்து கரத்தான் யானையாய் வந்து அருளிய கதை—என்று யானைக் கதைகள் எண்ணற்றவை.

இவ்வகையாக, இலக்கியத்திலும் அரசியலிலும் இடம் பெற்றுள்ள யானை, கலைகளிலும் நிலைபெற்றுள்ளதைக்காண்கிறோம்.

திருக்கோயில்களின் புறவாயிலே,தேர்ந்த சிற்பி செதுக்கிய கல்யானைகள் அழகு செய்கின்றன. மங்காப் புகழ் கொழிக்கும் மாமல்லபுரச் சிற்பங்களிலும் யானையைப் பார்க்கிறோம். எழில் ஒழுகும் வண்ண ஓவியங்கள் நிறைந்த ஒரு குகை 'எலிபெண்டா குகை' என்று யானையின் பெயரால் அழைக்கப்படுகிறது. ஆடைகளின் பார்டர்களை அற்புதமாக அலங்கரிக்கிறது அதன் உருவம். தந்தத்திலும், சந்தனத்திலும் பிறமரங்களிலும் அதன் உருவை கைதேர்ந்த தொழிற் கலைஞர்கள் செதுக்குகின்றனர். விரிப்புக்களிலும், சாய் படுதா. திரைச் சீலைகளிலும் யானை உரு காணக்கிடக்கிறது. இன்னும் யானைமார்க் குடை, யானைமார்க் மண்ணெண்ணெய், யானை மார்க் பொடி, யானைமார்க் பீடி, யானைமார்க் லேகியம், யானைமார்க் காகிதம், யானைமார்க் பெயிண்ட்—என்று வியாபார உலகிலும் எல்லையற்ற விளம்பரம் பெற்று விளங்குகிறது யானை.

இத்தனைச்சிறப்புக்களைப் பெற்ற யானைக்கு இன்னுமொரு சிறப்பு உண்டு. யானை ஒரு ஒப்பற்ற பரிசுப் பொருள். முற்காலத்தில் தமிழரசர்கள் அணிபூண்ட யானைகளையும் அவற்றின் பராமரிப்புக்கான பெருஞ் செல்வத்தையும் புலவர்களுக்கு மனமுவந்து அளித்தனர் என்று இலக்கியத்தில் படித்து இறும்பூது எய்துகிறோம். இதெல்லாம் பழங்கதை என்று தானே பலரும் கூறுவர்? நல்ல காலமாக இந்த 'யானைக் கொடையாளர்' பரம்பரை அடியோடு மறைந்து போய்விட வில்லை என்றுகேட்க மகிழ்ச்சி ஏற்படுகிறதல்லவா? இவ்வகையில் வைத்துப் போற்றக்கூடிய ஒரு மனிதர் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார். தாய் நாட்டின் விடுதலைக்காக தம் உடல், பொருள் ஆவி எல்லாம் அர்ப்பணித்த அவ்வொப்பற்ற தியாக வள்ளல், இன்று யானைக் குட்டிகளைப் பிற நாடுகளுக்குப் பரிசுகளாக அனுப்பி மகிழ்கிறார். அந்த அதிசய

மனிதர்--ஆம்! பாரத ரத்தினமான பண்டித நேருதான். 'இந்திரா' என்ற இளம் யானையை ஜப்பானியக் குழந்தைகளுக்கு அன்பளிப்பாக அனுப்பிய அவர் 'காவேரி', 'லலிதா' என்ற இரு யானைகளை ரஷ்ய மக்களுக்கு அனுப்பி வைத்தார். இந்த 'யானைக்குட்டிப் பரிசு' கேட்டுப் பல நாட்டுக் குழந்தைகள் 'நேரு மாமா'விற்கு எழுதுகின்றன.

இலங்கையில் வாழ்பவர்கள் யானையைப்பற்றிக் கூறும் விசித்திரத் தகவல்கள் மிகவும் வியக்கத் தக்கவையாக இருக்கின்றன,

மூப்படைந்த யானைகள் தமக்கு வயோதிகம் நெருங்கி வீட்டதை உணர்ந்து, ஒன்றிலும் பற்றில்லாமல் அடிக்கடி ஸ்தம்பித்து நின்று விடுகின்றனவாம். அவை மௌனமாக அசைவின்றி நிற்பதைக் கவனிக்கும்போது பெரும் தீர்க்க தரிசி ஒருவர் ஆழ்ந்த சிந்தனையிலிருப்பதுபோல் தோன்றுமாம். வயோதிக யானைகள் தாங்கள் இனி வாழ்வதில் பிரயோஜனமில்லை என்பதை உணர்ந்து, மிகப் பெரிய குன்றுகளையடைந்து, சிறிது நேரம் மௌனமாக பிரார்த்தனை செய்வதைப் போல் நிற்கின்றனவாம், பிறகு கிடு கிடு பாதாளத்தை நோக்கி அவை தாங்களாக விழுந்து உயிர் துறந்து விடுவதாக இலங்கை வாசிகள் கூறுகின்றனர். யானையின் அறிவை என்ன வென்பது? அவ்வாறு யானைகள் விழுந்து இறக்கும் இடத்தில் ஏராளமான தந்தங்கள் குவிந்து கிடக்குமாம்.

தார்மீகத் துறையில் உலக நாடுகளை இன்று வென்று, வாகை சூடிவரும் தனிப்பெரும் தலைவரான நேரு, பாரதநாட்டின் உயிர் வளங்களில் உன்னதப் பிராணியாய் விளங்கும் யானைகளை பாரதத்தின் 'நல்லெண்ணத் தூதர்'களாய் பிற நாடுகளுக்கு அனுப்புவது பொருத்தம்தானே! ★

புலவர் கூற்று

''கழைதின்யானையார்'' என்னும் புலவர் ஓரிவள்ளலைச் சந்திக்கிறார். மன்னர்க்கும் மதிவாணர்க்கும் நிகழ்ந்த உரையாடலின் போது புலவர் கூறுகிறார்:

''வருவார்க்கு வாரி வழங்கும் ஓரி வள்ளலே! இரவலன் ஒருவன் ஈயெனச் சொல்லி இரத்தல் இழிந்தது. பாவலன் ஒருவன் இரந்தேன் முன் ஈயேன் என்று சொல்லி மறுத்தல் அதனினும் இழிந்தது.

''ஒருவன் இரக்குமுன் அவன் குறிப்பறிந்து கொடுத்தல் உயர்ந்தது. கொடுத்ததைப் பெறுது கொள்ளேன் என மறுத்தல் அக் கொடைச் செயலினும் மிக உயர்ந்தது.

''நீர் வேட்கை உடையோர் பெருங்கடல் நீரை உண்ணுர், ஆவும் மாவும் கலக்கிய சேற்று நீராயினும் அதனையே உண்பர்.

''கார்மேகம் போலக் கருதாது வழங்கும் உண்மை உடையோய்! இரவலரும் பாவலரும் அவரவர் செயலில் உயர்வர்! நீவாழ்க!'' என்று வாழ்த்துரை கூறினர். மன்னன் ஓரி, வாய் புதைத்து நின்றான், புலவர் மொழிகேட்டு.

வெங்காயம்

சன்மிஷ்டை

வெங்காயம் என்பதில் காயம் என்பது கார்ப்புள்ளது என்று பொருள்படும். மிக்க கார்ப்புள்ளதாகையால் அதற்கு வெங்காயம் என்று பெயர் வந்தது. சில வெண்மையாய் இருப்பதால் வெண்காயம் என்றும் பெயர் வழங்குவதுண்டு. உள்ளி என்பது உள்ளிப்பூண்டு. அது உலர்ந்து வற்றியிருக்கும். வெங்காயம் அவ்விதம் வற்ருமல் ஈரமாக இருப்பதால், அதற்கு (ஈர உள்ளி) ஈரவுள்ளி என்றும், ஈருள்ளி என்றும், ஈரவெங்காயம் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. இது கிழங்குப் பயிர்களில் ஒன்று.

வெங்காயத்தில் சிற்றிராசி, பேரிராசி என்று இருவகைகள் உண்டு. சிற்றிராசி எங்கும் பயிராகும். பேரிராசி பெல்லாரி ஜில்லாவில் ஏராளமாகப் பயிராகிறது. பெல்லாரி ஜில்லாவில் வஜ்ரகரூர், வெங்காயத்துக்குப் பேர்போன இடம். இது மூன்று, நான்கு மாதகாலத்தில் பலன் கொடுக்கும் பயிராகையாலும், சாகுபடி ஏராளமாகையாலும், நிலத்தை நன்ருக ஏருழுது பண்படுத்தி, எருவும் தாராளமாய் இட வேண்டும். வெங்காயம் பயிராகிற இடத்திலுள்ள நிலங்களில் புல் பூண்டு முளைத்து வளராதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். வெங்காயத்தைத் தனியாகப் பயிரிடுவதன்றி, மிளகாய், மஞ்சள், வெள்ளைப்பூண்டு முதலானவைகளோடு கலந்தும் பயிரிடுகிருர்கள்.

பயிர் செய்யும் விதம்

வெங்காயத்தைத் தனியாகப் பயிரிடுவோர், முதலில் நிலத்தைப் பக்குவமாக உழுது, எருவிட்டு, பிறகு பாத்திகள் கட்டி, அந்தப் பாத்திகளில் வெங்காய நாற்றுக்களை நடுவார்கள். கால நிலைக்குத் தக்கபடி வாரத்தில் ஒரு முறையாவது அல்லது இருமுறையாவது நீர் பாய்ச்ச வேண்டும். ஆடி, ஆவணி மாதங்களில் அல்லது கார்த்திகை, மார்கழி மாதங்களில் வெங்காய நாற்றுக்களை நடுவதற்குரிய காலம் எனலாம். இலை பழுக்கலுற்ருல். சாகுபடிக்குரியகாலம் என்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம். உடனே செடிகளைப்பிடுங்கி, தாள்களை அறுத்து விட்டு, வெய்யிலில் கிழங்கை உலரப்போடுவார்கள்.

வெங்காயத்தில் கந்தகச்சத்து அதிகமாயிருப்பதால், அதிக நாற்றமுள்ள பதார்த்தமென்று சிலர் அதை உபயோகிப்பதில்லை. வெங்காயத்திலுள்ள அருமையான சத்துக்களைக்கண்டு ஐரோப்பியரும், அமெரிக்கரும் அதை ஏராளமாக உபயோகிக்கின்றனர். வெங்காயத்தை உபயோகிப்பதால் இரத்தம் சுத்தியாகிறது. ஜீரண உறுப்புக்களும் எலும்புகளும் திடமடைகின்றன. மனிதருடைய மூளையின் சக்தியை விருத்தி செய்யும் சத்து வெங்காயத்தில் விசேஷமாயிருக்கிறது என்பர் ஆன்ருேர்.

வெங்காயத்துக்குள்ள இந்தக் குணத்தை அனுபவத்தில் அறிந்தவர்கள், அதை மிகவும் உயர்வாகப் பேசுவார்கள். 'வைத்தியனுக்குக் கொடுக்கிற பணத்தை வெங்காயத்தில் போடு' என்றும் சிலர் நம்மிடையே சொல்லுகிருர்கள். வெங்காயத்தைப் பல பதார்த்தங்களோடு சேர்க்காமல் தனியாகச் சாப்பிடுவது நல்லது.

விஷத்தை உண்டு பண்ணும் கிருமிகளை ஒழிப்பதற்கு வெங்காயம் மிகவும் சிலாக்கியமானது.

சில தேசங்களில் பிணங்களை வைத்திருக்கிற அறைகளில் வெங்காயத்தைத் துண்டித்து வைக்கிருர்கள். சீக்கிரத்தில் அந்த வெங்காயத்துண்டுகள் கறுத்துப் போகின்றன. பிணத்தில் மொய்க்க வருகிற அணுவளவான பூச்சிகள் வெங்காயத்தில் மொய்க்கத் தொடங்குவதே இதற்குக் காரணம். ★


திருக்கழுக்குன்றம்

திருக்கழுக்குன்றம் தென்னிந்தியாவிலுள்ள சிறந்த சிவஸ்தலங்களுள் ஒன்று. இது செங்கற்பட்டுக்கு தென்கிழக்கே ஒன்பது மைலிலும் சென்னையிலிருந்து 45 மைல் தூரத்திலும் உள்ளது. மகாபலிபுரம் இந்த ஸ்தலத்திற்கு கிழக்கே 10 மைல் தூரத்தில் கடலோரத்தில் அமைந்துள்ளது.

தக்ஷிணக் கைலாசம் என்ற சிறந்த பெயர் பெற்ற இந்த ஸ்தலத்தின் திருமலைக்கோயிலில் ஸ்ரீவேதகிரீஸ்வரரும், கீழேயுள்ள கோவிலில் திரிபுரசுந்தரி அம்பாளும் காட்சி அளிக்கின்றனர்.

திருக்கழுக்குன்ற மலையின் உயரம் சுமார் 500 அடி. அழகிய வளமுள்ள சஞ்சீவிக் காற்று தரும்படியான இரண்டேகால் மைல் பிரதக்ஷிண பாதை கொண்டுள்ள மலையாக இக்குன்று அமைந்திருக்கிறது. சமயாச்சாரியர்களால் பாடப்பெற்ற ஸ்தலம். நான்கு வேதங்களே நான்கு மலையாகவும், அவற்றுள் அதர்வண வேத உச்சியில் சிவபெருமான் கோவில் கொண்டிருப்பதாகப் புராணம் கூறுகின்றது.

இந்தக் கோவில் கி. பி. 7-ம் நூற்றாண்டில் பல்லவ மன்னர்களால் கட்டப்பட்டதென்பது

சென்னையிலிருந்து ஐம்பத்திமூன்றாவது மைலில் உள்ள மகாபலிபுரம் இத்திருக்கழுக் குன்றத்தினால் மேலும் சிறப்புற்று விளங்குகிறது.



திரிபுரசுந்தரி அம்மன் கோவில் கோபுரம்

ஆராய்ச்சி. இந்த ஊரின் ஸ்தல விருக்ஷம் வாழை.

இந்த ஸ்தலத்தில் சங்கு தீர்த்தம் என்ற பிரசித்தி பெற்ற குளம் இருக்கின்றது. மார்க்கண்டேயர் காசி சென்று திரும்புகையில், இந்தத் தீர்த்தக் கரையில் சிவலிங்கம் அமைத்துப் பூஜிக்கும் போது அபிஷேகாதிகள் செய்ய பாத்திரமில்லையே என்று நினைத்தவுடன், ஓங்கார ஒலியோடு வெண்சங்கு தோன்றியது என்றும், அதனால் மார்க்கண்டேயர் பூஜையை முடித்தார்

என்றும் ஸ்தல புராணம் கூறுகிறது, இந்த ஸ்தலத்தில் 12 வருஷங்களுக்கொரு முறை கும்பகோணத்தில் மகஸ்நான மும், கோதாவரியில் புஷ்கர ஸ்நானமும் செய்யப்படுவது போல சங்கு தீர்த்த ஸ்நானம் செய்யப்படுகிறது.

சங்குதீர்த்தம் தாமிர சத்து டையது என்றும் தெய்வீகம் வாய்ந்துள்ளது என்றும் எல்லா நாட்டவராலும் பாராட்டப்பட்டு, பல பாகங் களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் வந்து ஸ்நானம் செய்து, நல்ல பலன் களை அடைந்து வருகின்றார் கள். 12 ஆண்டுகட்கு ஒரு முறை இக்குளத் தில் சங்கு பிறக்கிறது. இச் சங்குகள் தேவஸ் தானத்தில் பாது காத்து வைக்கப்பட் டிருக்கின்றன.

இரு கழுகுகள் தினந் தோறும் காலை 11மணி சுமாருக்கு மலை உச்சி யில் வந்து கோயில் தேசிகர் கொடுக்கும் சர்க்கரைப் பொங்கலை யும் நெய்யையும் உண்டு செல்வதைக் காணலாம்.

திருக்கழுக்குன்ற புஷ்கர மென்பது தீர்த்தங்களுக்குரிய ஓர் புண்ணிய காலம். நவக்கிரகங்களுக்குள் சுபக் கிரகமாகிய குரு வின் சாரத்தை அனு சரித்தே தீர்த்த சம் பந்தமான புண்ணிய காலங்கள் ஏற்படு கின்றன. குரு கன்னியா ராசி யில் பிரவேசிக்கும் காலத்தில் சங்கு தீர்த்த புஷ்கரம் ஏற்பட விருக்கிறது. (20-10-56) அப் போது லக்ஷ தீபோத்ஸவமும் நடைபெறவிருக்கிறது.

இத்திருவிழாவை யொட்டி சென்னையிலிருந்தும், சுற்றுப் பிரதேசங்களிலிருந்தும் எண் ணற்ற ஜனங்கள் திரளாகத் திரண்டு வந்து, திருக்கழுக் குன்ற தெய்வத்தை வணங்குவ துடன், சரித்திரப் பிரசித்தி பெற்ற மாமல்லபுர சிற்பங்களை ரசிக்கவும் தவறுவதில்லை.

மலைக்குப் படிகள் ஒழுங்காக அமைக்கப்பட்டிருக்கின்றன.



போட்டோக்கள் :
ஆர். ராஜாராமன்



சங்கு தீர்த்தம் எனப்படும் அழகிய தடாகம்.
குளத்தின் நடுவிலுள்ள நீராழி மண்டபம்.





குன்றின்மீதுள்ள வேதகிரீஸ்வரர் கோவில்

கழுகுகளுக்கு உணவளிக்கப்படுகிறது.

நிறங்கள் பேசினால்?

ஆர். பி. மல்லாரி

நிறங்களின் இயற்கைத் தன்மையை நாம் மதிப்பிடுவது ஒரு விதம். அவை ஒன்றுடன் ஒன்று பேசமுற்பட்டால் வெளிப்படும் உண்மைகளை ஆசிரியர் தன் கற்பனை மூலம் இக்கட்டுரையில் எழுதுகிறார்.

கறுப்பு: அட, சொல்லி வைச்சாப்போல ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு நிறத்திலே சேலை கட்டிக்கிட்டு வந்திருக்கோமே!

சிவப்பு: உன்னோட சிவப்பு நிறத்துக்கு கறுப்பு நிறப்புடவை எவ்வளவு ஜோரா இருக்கு தெரியுமா? கறுப்புன்னா ஒரு அழகுதான்.

பச்சை: அதான், நீ செகப்பு புடவை கட்டியிருக்கே கறுப்பாக இருக்கிற பொம்பளை என்ன நிறம் வேணுமின்னாலும் கட்டட்டும்... கறுப்பு நிறம் மட்டும் வேண்டவே வேண்டாம்.

மஞ்சள்: நல்லாச் சொன்னே பச்சையம்மா,

சிவ: எனக்கு, எந்த நிறமின்னாலும் பிடிக்குமின்னு சொன்னயே, கறுப்போட மஞ்சள் நிறமும் பிடிக்காது.

கறு: உனக்கு மஞ்சள் நிறம் பிடிக்காதா? (சிரித்து) அதனாலே தான் மஞ்சளை லச்சிமியின்னு வைச்சுருக்கிறாங்க ஏம்மா...

சிவ: நாம அன்றாடம் பூசிக்கிற மஞ்சளை நீங்க பார்த்திருந்தா அதனோட ரகஸ்யம் தெரியும். மஞ்சள் நிறமென்ன?

பச்: அதாஞ் சொன்னாளாமே ஒருத்தி, எங்க வீட்டுக்காரர் பேரு நாஞ் சொல்ல மாட்டேன், அவரு பேரு கோடி வீட்டு சுப்பண்ணன் பேரு மாதிரின்னு...

மஞ்: அப்படிச் சொல்லு பச்சையம்மா! (சிரிப்பு)

சிவ: சிரிச்சு மதிப்பிட்டா உண்மை பொய் ஆயிடுமா? மஞ்சள் தன்னோட நிறத்தைப் பார்க்காமல் இருக்கிறதுக்காக லேசா வெள்ளைப் போர்வை போர்த்தியிருக்கு.

மஞ்: (பாட்டு)

மஞ்சள் புகழ்பாட மாதேவன்
சிரம் பணிந்தால்
கொஞ்சமும் உதவி புரியாளோ
கோதையரே
கொஞ்சும் கிளி அழகை
கூட்டி அழகாக்கும் மஞ்சள்
ஆபரணங்கள் ஆற்றி
அழகான முகந் தருமாம்.

கறு: அடடே...தனியா மஞ்சள் நிறம் அருவருப்பாக இருக்குதுன்னு சொல்லுறிங்க...அப்படியானா, மஞ்சள் அரளிப்பூவும் கொன்றைப்பூவும், அடடா... எவ்வளவு அழகு—ரஸகுண்டு ரஸகுண்டா. தங்க உருண்டைகள் போல, சரஞ்சரமா தொங்குதே...அது மட்டுமா காததூரம் வாசமடிக்கிற தாழம்பூ என்ன நிறம்? மனோரஞ்சிதம் அடடா... நிறத்திலே நல்ல நிறம் மஞ்சள் தான்.

மஞ்: பூவிலே மஞ்சள் நிறம் பூ இருக்கட்டும். நாமெல்லாம் அழுந்து விழுந்து நகை நகையின்னு பூட்டிக்கொள்ற பவுன் நிறமென்ன? தங்கத்தோட நிறமே மஞ்சள் கலந்த பசுமைதானே!

சிவ: இருக்கட்டுமே...அதனாலே மஞ்சள் நிறந்தான் உசத்தியா? பாவம், மஞ்சக்காமலே வந்தவங்ககிட்டே கேளுங்க.

"ஐயோ சாமி! ஆண்டவனே! லோகத்திலே மஞ்சளே வேண் டாம்" என்றுதான் சொல்லு வாங்க!

மஞ் : ஆமா, மங்கோலிய ஜாதி யாரைப் பார்த்திருந்தா...?

கறு : அதனாலேதான் நீ மஞ் சள் புடவை கட்டியிருக்கிறயே?

மஞ் : இந்த மஞ்சள் புடவை இருக்குதே,இது அடுத்த வெள்ளா விலே என்ன நிறமா மாறுமின்னு எனக்குத் தெரியும்.

கறு : ஓ...கோ...இது பஞ்ச வர்ணமோ?

மஞ் : இது கடைக்குள்ளே எலக்டிரிக் விளக்கடியிலே ஒரு நிறமா இருந்தது. வெளிச்சத்திலே வந்ததும் ஊதாவோ, நீலமோ தெரியலே...ஒரு வெள்ளாவிலே ஆரஞ்சாகி, இப்போ மஞ்சள் கல ரிலே வந்து நிக்குது.

சிவப் : (சிரித்து) சரிதான், இதனாலேதான் இந்த இன்ஸ்டா மெண்டு நோட்டீசுக்கு மஞ்சள் கடுதாசியின்னு பேரு!

பச்சை : அடி அம்மா, அதுக்கு இன்ஸ்டாமெண்டு நோட்டீ சுன்னு பேரு இல்லே. இன்ஸால் வெண்டு நோட்டீசுன்னு மஞ்சள் கடுதாசு...

மஞ் : மஞ்சள் கடுதாசு வாங் கிறது போலதான், இப்போ மஞ் சள் நிறமா இந்தச் சேலே!

கறு : இப்படியெல்லாம் பேச றீங்களே நாம் இன்னிக்கி சுதந் திரமா இருக்கிறதுக்கு காரணம்?

சிவ : வீட்டு ஆண் பிள்ளைகள் உலாத்தப் போயிட்டதுதான்.

கறு : நாமதான் என்னிக்கும் சுதந்திரமாச்சே. நம்ம தேசமே சுதந்திரம் அடைந்தது எதனாலே, மஞ்சள் பெட்டியினாலேதான். என்ன இருந்தாலும் மஞ்சள் என் றைக்கும் மஞ்சள்தான்.

சிவ: வர்ணங்களிலேதான் எத் தனை வர்ணம், பாக்கு நிறம், சாம் பல் நிறம, தவிட்டு நிறம், வெள்ளை, பழுப்பு இப்படி சொல்லிக் கொண்டே இருக்கலாம்.

பச் : ஆனாலும் பச்சைக்கு மிஞ் சின நிறமுமில்லே பருப்புக்கு மிஞ் சிய ருசியுமில்லே.

கறு : ஓஹோ உம்பேரு பச்சை யம்மால்லே! அதனாலே அந்த மாதிரி சொல்றியோ பச்சை யம்மா. ஐயோ பச்சையும் ஒரு நிறமா? சிவப்பு போல அழகு லோகத்திலே ஏது...ஆனோ பெண்ணோ சிவப்புக்குத்தான் அழகு.

சிவ : ஆமாம்மா...ரத்தச் சிவப் பைக் கண்டா கண்ணை மூடிக்கி றோம். எந்த நிற மிருந்தாலும் இருக்கட்டும், சிகப்பைக் கண் டாலே மனசு கஷ்டப்படுது.

மஞ் : நம்ம நிறந்தானே நமக்கு உசத்தி.

கறு : சிகப்பு சிகப்புன்னு அடிசுக்கிடறமே.....உலகத்திலே கறுப்புன்னா மட்டும் ஒதுக்கியா தள்ளிடறாங்க? கறுப்பாயிருக்கிற வர்களுக்கும் கலியாணம் காட்சி நடக்கத்தான் செய்யுது.

சிவ : அது தெரியாமலா சொன்னாங்க, "கறுப்பு ஒரு அழகு! சூடு ஒரு ருசி!"...அப்ப டின்னு! அழகிலே கறுப்புக்கு ஒரு துடிப்பு உண்டு பளபளப்பும் உண்டு. கண்ணுமுழி அழகான கறுப்பு...அதனோட நிறம் கறுப் புத்தானே?

பச் : ரொம்ப பச்சையாச் சொன்னா. கறுப்போட மகி மையை நாம் சொல்லி முடியாது. இப்போ ஒரு பக்கம் நடக்கிற மார்க்கெட்டுக்கு கறுப்பு மார்க் கெட்டுன்னுதானே பேரு-

மஞ் : நல்லாச் சொன்னே பச்சையம்மா...

பச் : கறுப்புநிறம் இருந்தாலும் இருக்கட்டும், கறுப்பு மார்க் கெட்டு மாத்திரம் வேண்டவே வேண்டாம்.

சிவ: கறுப்பு நிறமும் ஆகாது, சிவப்பு நிறமும் ஆகாது.

கறு: ஆகாதா? சிவப்பிலே உள்ள அழகு எதிலே உண்டு. குங்குமம் இட்டுப்பாருங்க அப்போ தெரியும் சிவப்போட அருமை. அவ்வளவு சொல்லுவானே, செந்தாமரைப்பூக்கு ஏன் எல்லா நிறத்தையும் விட்டு சிவப்பு நிறம் கொடுத்தார் கடவுள், செம்பரத்தைப்பூ, பவளம். இதெல்லாம் அழகா இல்லையா? சாயங்கால வானத்தைப் பாருங்க செக்கச் செவேலன்னு...

சிவ: (பாடுகிருள்)

சிவப்பின் நிறங்கண்டு
சிந்தை மகிழலாம்
செந்தாமரை மலர்ந்தால்
செகம் மெல்லாம் சிரிக்குமாம்
சிவப்பை விடச் சிறந்த நிறம்
செப்புவீர் சேடியரே.

கறு: (கெலியாக) அடே... சொல்லம்மா சேடி...

சிவ: எங்கிட்டே கேட்டா. அழகு, நிறத்தோட தன்மையிலே இல்லே, அது சார்ந்திருக்கிற இடத்தைப்பொருத்து இருக்குது!

பச்: அதென்ன அப்படி ஒரு போடு போட்டே?

சிவ: சுவரிலே வெள்ளையடிச்சா, கண்ணைப் பறிக்கிறது. கொஞ்சம் பார்வையை உறுத்துது. அதே வெள்ளைநிறம் மட்டும் மலரிலே, வெண்தாமரையிலே இருந்தாலும் சரி இல்லை மல்லிகை, முல்லை இருவாட்சி, பன்னீர் பூவிலே இருந்தாலும் சரி. உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தூய்மை பொருந்தியது அது அதனுடை அழகே தனிதான்.

கறு: நிறத்துக்கு தனிப்பட்ட அழகு இல்லை. அது சேர்ந்திருக்கிற பொருளுக்கு ஏற்பதான் பகட்டுத்தருவது.

சிவ: ஒரு விஷயம் பார்த்தீங்களா? வெள்ளை நிறமா இருக்கிற பூக்கள்தான் அதிக வாசனையா இருக்குது.

பச்: அது ஏன்?

கறு: இது கடவுள் சிருஷ்டி தான்.

பச்: அதாவது இரவிலே மலர்கிற புஷ்பங்கள் எல்லாம் வெள்ளையாகவும், மணமாகவும் இருக்கும்.

சிவ: அதுவும் அப்படியா நம்மைப்போன்ற பெண்களுக்குத் தான் நிறத்திலே மோகம், பிரியம், ஆண் பிள்ளைகளுக்கு வெள்ளை நிறத்திலே வேஷ்டி, சட்டை துண்டு கிடைக்சாப் போதும்.

கறு: பாருங்கள், லோகத்திலே எங்கேயும் நீல நிறந்தான் அதிகமாக இருக்குது. ஆகாயம் நீலம், பரந்த கடல் நீல நிறம். இப்படி பெருவாரியான பரப்பெல்லாம் நீலநிறத்திலே இருக்குது. எனக்குக்கூட நீல நிறத்திலே ரொம்ப இஷ்டம்.

மஞ்: இருக்கலாம். திருமாலேயும் நீலமேகவண்ணன்னுதான் சொல்லுருங்க.

பச்: நீலத்தைவிட கண்ணுக்கு அழகு...

கறு: இரு...இரு......நீல நிறம் கொண்ட விளக்கிலே யாரைப் பார்த்தாலும் திருமாலாத்தான் தெரியும். சினிமா கொட்டகைகளிலே நீல நிற விளக்கு ஒரு அழகுதான். இதே போல நீல நிறம் அடிச்ச அறையிலே சுலபமாகத் தூக்கம் வருமாம்.

பச்: தூக்கம்வர, நீல நிறமா இருக்கலாம். ஆனா, துக்கம் நிறைந்த மனசுக்கு தூண்டுதல் தருகிறது எது தெரியுமோ? பச்சைதான்.

பச்சை போல் பகட்டுவது
பாரில் ஒன்றும் இல்லையே
இச்சகம் மெலாம் நிறைந்தது
எந்த நிறம் சொல்லுவீர்
கண் கவர்ந்திடும் கருத்தை
கவ்வும் நிறம் எதுவோ?

சிவ: பச்சையிலேயும் கிளிப் பச்சை, கீரைப் பச்சை எவ்வளவு

அழகு! வயலைப் பாருங்க ஒரே பச்சை கம்பளம் விரிச்சமாதிரி!

பச்: எங்கு பார்த்தாலும் பச்சை போர்த்திய அழகுதான் முள்ளம் பன்றிபோல காய்க்கிற பலா மரமும் பச்சை—மத்தளக் கட்டை போல காய்விடும் முருங்க மரமும் பச்சை, ரத்தச் சிவப்பாக பூப்பூக்கும் முருங்க மரமும், ஆப்பிள் காய்க்கும்மரமும் பச்சை. செக்கச் சிவக்க செந்தாழம்பூப் பூக்கும் தாழையின் நிறமும் பச்சைதான்.

கறு: (சிரிப்பு) ஆமாம் அம்மா...அவ்வளவு சொல்லுவானே...இனனையத் தேதியிலே பச்சை நோட்டுக்குத்தானே பெரிய மதிப்பு.

சிவ: இப்படி எங்கும் பச்சையாக இருக்கிறபோது, மனுஷனை ஏன் கடவுள் பச்சை நிறத்திலே படைக்காமல் விட்டுவிட்டார்?

பச்: மனுஷன் என்ன, ஆடு மாடு எந்த ஜீவனைத்தான் பச்சையாகப் படைத்து விட்டார்? பச்சையாக இருக்கிற ஜந்துவிலே கிளிதான் அழகு...

சிவ: (கேலியாக) பச்சைப் பாம்பை பார்த்திருக்கிறயோ, கொடிபோல பளபளன்னு இருக்கும்.

மஞ்: மஞ்சள்ளே மஞ்சக் காமாலை மாதிரி, பச்சை நிறத் துக்கு திருஷ்டிப்பரிகாரமா வெட்டுக் கிளிவந்து சேர்ந்திருக்கு.

பச்: நல்லநிறம் ஒவ்வொன்றிலேயும் ஒரு தீமையும் இருக்குது. ஆனால் கடவுள் நிறம் எதிலே தெரியுதாம்.

பார்க்கு மிடங்களெல்லாம்—
நந்தலாலா நின்றன்
பச்சை நிறந்தோன்றுதடா—
நந்தலாலா.

சிவ்: கடவுள் பச்சை நிறமின்னு சொல்லறையா பச்சையம்மா, இப்படி இருக்குமோ? அருகம் புல்லை கடவுளுக்கு ஒப்பிடற தோட ரகசியம் அது பச்சையா இருக்கிறதுதான் காரணமோ?

பச்: புல்லிலே உள்ள சத்து எதிலே உண்டாம்? பச்சை நிறக் கீரைகளில் உயிர் சத்து ஜாஸ்தி. பச்சிலைகள் மகத்துவம் வரவர போயிட்டுதே. பசுந்தாள் உரத்துக்கு மிஞ்சின உரம் இல்லை. உலகத்தின் சக்தி யெல்லாம் பச்சையில் இருந்துதான் வளர்கிறது.

சிவ: பச்சை நிறத்திலே நமக்கெல்லாம் பிரியம் விழுதோ விழலையோ பச்சையா பேசறதிலே.....

கறு: போதுமே பேச்சு... நமக்கு ஒவ்வொரு நிறத்திலேயும் பட்டுச்சேலை, நூல் சேலைன்னு எடுக்க எடுக்க எப்போதான் ஆசை குறையுது? கொஞ்சம் பார்டர் மாறிப்போனு, உடல் அதே கரையாக இருந்தாலும் எடுக்க ஆசை பிறக்கத்தானே செய்யுது.

சிவ: நிஜந்தாம்மா! பச்சை புடவையிலே எத்தனை தினுசு பார்டர்கள்வருது, எத்தனை தினுசு கோடுகள்! குறுக்கும் நெடுக்குமா கட்டங்கள்!

பஞ்: பெண்களோட, புடவை ஆசையைத் தெரிஞ்சு நிற பேதங்கள் செய்யறுங்க.

மஞ்: நமக்குப் புடவைகளிலே இருக்கிற பிரியத்தைப் போலவே ஆண்பிள்ளைகளுக்கு மாட்டு நிறங்களிலே பிரியம்.

சிவ: பசுன்னு வெள்ளை வெளேர்னு இருந்தா பார்க்க மெழுகு பொம்மைபோல இருக்கும்.

பச்: வெள்ளைப் பசுவோட பால் அவ்வளவு ருசியில்லையாம்.

மஞ்: வெள்ளைப் பசுவோட பாலிலே ருசிமட்டுமா வெண்ணெயும் அப்படி அப்படித்தான்.

சிவ: ஓகோ மாட்டிலேயும் சிகப்புக்குத்தானு கிராக்கி?

பச்: ஆமா, சிவலைப் பசுவோட பால் தனி ருசி. அத்தோட அளவும் அதிகம். எல்லாத்திலேயும், மாட்டு நிறத்திலே, கருமெழுகுபோல இருக்கிற மாட்டுப்பால் ருசியே தனி.

சிவ: காராம் பசுதான் உசத்தியா? பெண்கள் கறுப்பே உதவாதுன்னு, மாடுகளிலே கறுப்புத் தான் உசத்தி.

மஞ்: வெள்ளாட்டுப் பால் தான் சத்துள்ளது. கறுப்பிலே அழகு இருக்கோ, இல்லையோ யானையோட கம்பீரம் கறுப்புக்கு உண்டு.

கறுப்பன் நிறந்தே கன்னியரே
நீங்கள்
விருப்புடன் பார்த்தால்
விநோதங்கள் தோன்றும்
பொறுப்பில் மக்கள் புகழ்வர்
சிவப்பென
மறுப்பர் யாரோ? மாயானை
நிறமதுவே.

பச்: உலகத்திலே ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு நிறங்களிலே பிரியம். அதனதன் அழகில் அவரவர்கள் ஆசைப்படுகிறுர்கள்.

சிவ: இதையெல்லாம் அறிஞ்சு தானே என்னமோ, வானவில்லின் அழகுக்கு ஆசைப்படாதவர்களே கிடையாது.

மஞ்: ரொம்ப நியாயமான பேச்சு. அவரவர்கள் பிரியப்பட்ட நிறத்தை பூவிலோ, புடவையிலோ அணிந்து கொள்ளலாமே ...வானவில்லே எல்லா நிறமும் இருக்கிறது.

(ஒன்ருகச் சேர்ந்து ஒரே குரலில்) நியாயமான தீர்ப்பு ... அதனுலே தான் வானவில்லைப் பார்க்க ஆசைப்படாதவர்களே இல்லை...

கறு: ஆகவே நாம் அந்த வானவில்லையே கேட்போமே?

வானவில்லே
வண்ணத்துப் பூச்சியினைக்
கண்டதுண்டோ—நீலம்
உண்ட கண்டன் அன்பினை
நீ பெற்றதுண்டோ
வண்ண நிற மலர்களுன்னைத்
தொட்டதுண்டோ—அந்த
விண்ணிலேழு வர்ணமுடன்
விளக்குதற்கே.

மிஸ் ஆரஞ்சு, நீலம்மா, மிஸஸ் இண்டிகோ முதலியவர்களும் வந்து சம்பாஷணையில் கலந்து கொள்ளவே நிறங்கள் மகாநாடு தொடர்ந்து நடைபெறுகிறது. கடைசியில் கறுப்பாயி கொண்டு வந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேறுகிறது.

கறு: நான் கறுப்பா இருந்தாலும், ஒரு உண்மை சொல்ல விரும்புகிறேன். வானவில்லின் நிறமெல்லாம் வெள்ளையிலிருந்து பிறந்ததுதான். நாம் என்ன நிறமாக இருந்தாலும், நம் மனமும் கடவுள் மனம் போல வெள்ளையானது. இதையறிந்து, ஒருத்திக்கு மற்றவள் பக்கத்தில் வரும் போது, மற்ற நிறத்தின் பகட்டை எடுத்துக் காட்டப்பாடுபடுவோமாக!

கைதட்டல், ஆரவாரத்துடன் மகாநாடு முடிகிறது. ★

வருந்தத்தக்க விஷயம்......விரும்பத்தக்கதல்ல!

'திங்கள்' புரட்டாசி இதழில் 'புதுமைவாணன்' என்பவர் 'புத்தகங்கள்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருப்பதை நேயர்கள் அறிந்திருப்பார்கள். இக்கட்டுரை பற்றி எமக்கு திரு. பா. கோபாலகிருஷ்ணன் என்னும் வாசக அன்பரிடமிருந்து ஒரு கடிதம் வந்துள்ளது. பிரஸ்தாப கட்டுரையை திரு. பா. கோபாலகிருஷ்ணன் ஏற்கனவே 'சிவாஜி' இதழில் தான் 'பா.கோ.' என்ற பெயரில் எழுதியிருப்பதாகவும், அதே கட்டுரையை எழுத்து மாருமல் 'புதுமைவாணன்' தர்ஜுமா செய்திருப்பதாகவும் சான்றுகளுடன் நிரூபித்து விட்டார். இதுபற்றி 'புதுமைவாணன்' கூறும் சமாதானம் நம்பிக்கைக்குப் புறம்பான தென்றே எமக்குப் புலப்படுகிறது. இத்தகைய தவறு நேர்ந்ததற்கு மிகவும் வருந்துகிறேம். இது வருந்தத்தக்க விஷயம்; விரும்பத்தக்கதல்ல!

—ஆசிரியர்.

சலவை சோப் உற்பத்தி

எக்ஸ், வி. கொரேரா

மானத்தைக் காப்பதற்காக ஒரு முழத் துணியை உடுத்திக் கொள்ளுகிறான், ஒருவன். அதே மானத்தைக் காப்பதற்காக பல முழ நீளத்திலுள்ள துணியை நாகரீகமோஸ்தரில் புஷ் ஷர்ட், நீண்ட கால்சட்டை போன்றவைகளை தைத்து மாட்டிக் கொள்ளுகிறான் மற்றொருவன். ஆனால் இவர்கள் இருவருமே ஒரு முறை உடுத்திக் கொண்ட உடை அழுக்கேறிய பின் எறிந்து விடுவதில்லை. உடையிலுள்ள அழுக்கை மீண்டும் மீண்டும் சுத்தம் செய்து அந்த உடையை பல மாதங்கள் வரை நாசூக்காக உபயோகித்துக் கொள்கிறார்கள். இவ்வாறு சுத்தப் படுத்துவதற்காக "சோப்பு" என்ற பொருள் ஏழை, பணக்காரன், சிறுவன், முதியவன், ஆண், பெண் எல்லோருக்கும் உபயோகப்படுகின்றது.

குமரி முதல் இமயம்வரை பரந்துள்ள பாரதநாட்டின் 38 கோடி மக்களுக்கும் தங்கள் துணிமணிகளைத் தாங்களே சுத்தப்படுத்திக் கொள்ள அன்றாட வாழ்க்கையில் பயன்பட்டு வருகிறது. ஆதலால் சோப்பு நம் வாழ்க்கையின் இன்றியமையாத பொருள்களில் ஒன்று.

இத்தகைய பொருளை கோடிக் கணக்கான ரூபாய்களை முதலீடு செய்து உற்பத்தி செய்ய டாடா போன்ற பெரிய ஸ்தாபனங்களும், நூறு ரூபாய்களே முதலீடு செய்து உற்பத்தி செய்யும் குடிசைத் தொழில் ஸ்தாபனங்களும் முளைத்திருக்கின்றன. சொற்ப முதலீடு செய்து ஆர்வமுள்ள எவரும் இந்த தொழிலில் வெற்றி காணலாம். ஏனெனில் சோப்பு நம் வாழ்வில் இன்றியமையாத பொருள்களில் ஒன்றாய் இருப்பதால் அதற்கு எப்போதும், எங்கும் தேவை இருந்து வருகிறது.

சோப்பு என்பது என்ன? கொழுப்பில் (மிருகக்கொழுப்பு, மீன் எண்ணெய் அல்லது தாவர எண்ணெய்கள்) காஸ்டிக சோடா அல்லது காஸ்டிக் பொட்டாஷ் என்ற ரசாயன உப்புக்களில் ஒன்றை சேர்ப்பதால் உண்டாகும் வெண்ணிறக்குழம்பே சோப்பு. இந்த குழம்பை அச்சுகளில் ஊற்றி உலர வைப்பதால் கட்டிகளாக கிடைக்கிறது. இதிலுள்ள சோடா அல்லது பொட்டாஷ் அழுக்கை சுத்தப் படுத்தும் குணம் உடையது. ஆனால் இந்த சுத்தப்படுத்தும் குணம் துணிகளுக்கு கெடுதல் விளைவிக்கும் அளவுக்கு அதிகமாயிருப்பதால் நாசப்படுத்தும் குணத்தைக் குறைப்பதற்காக கொழுப்பும், தண்ணீரும் உபயோகிக்கப்படுகிறது. இவ்வாறு சோடா உப்பையும் எண்ணெய்யையும் சேர்த்து தயாரிக்கப்படும் சோப்பு குழம்பில் கிளிசரின் என்ற உபபொருள் உண்டாகிறது. சலவைக்காகத் தயாரிக்கப்படும் சோப்புகளிலிருந்து இதைப் பிரித்தெடுப்பதில்லை. ஸ்நான சோப்புகளிலிருந்துதான் கிளிசரினை பிரித்தெடுப்பது வழக்கம்.

சலவை சோப்பில் இருக்க வேண்டிய குணங்கள்: (1) தண்ணீரில் அதிகமாக நுரையை உண்டாக்க வேண்டும். (2) அழுக்கை சுத்தப்படுத்துவதோடு துணிகளுக்கு தீங்கு விளைவிக்கக்கூடியதாக இருக்கக் கூடாது.

அழுக்கை சுலபமாக சுத்தப் படுத்துவதற்காக சில தயாரிப்பாளர்கள் எண்ணெயோடு தேவைக்கு மேற்பட்ட அளவுக்கு காஸ்டிக் சோடா உப்பை சேர்த்துக் கொள்ளுகிறார்கள். இவ்வாறு தயாரிக்கப்படும் சோப்பு துணிகளுக்கு கேடு விளைவிக்கின்றது.

லாபம் அதிகமாக அடைவதற்காக சில தயாரிப்பாளர்கள்

சோப்பு தயாரிக்கும்போது, அதிக அளவு தண்ணீரைச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். தேங்காய் எண்ணெய் போன்ற எண்ணெய்களால் தயாரிக்கப்படும் சோப்பு 65% வரை தண்ணீரை ஏற்றுக் கொள்ளும். மேலும் சில தயாரிப்பாளர்கள் சோப்புக் கட்டிகளின் அளவை அதிகரிப்பதற்காக நன்றாகத் தூள் செய்யப்பட்ட மண், சினைக்களிமண் முதலியவற்றையும் சேர்த்துக் கொள்கிறார்கள். இவ்வாறு தயாரிக்கப்படும் சோப்பில் சுத்தம் செய்யும் குணம் குறைந்து விடுவதுமல்லாமல் துணிகளுக்கு கெடுதலும் ஏற்படும்.

தேவையான பொருள்கள்:
தேங்காய் எண்ணெய் 5 பவுண்ட்
காஸ்டிக் சோடா 3½ ,,
சோடா தூள் 1 ,,
தண்ணீர் 1 காலன்

காஸ்டிக் சோடா லை என்பது ஒருகாலன் தண்ணீரில் இரண்டு பவுண்டு காஸ்டிக் சோடா குச்சுகளையாவது சில்லைகளையாவது சேர்ப்பதால் கிடைக்கும் கலவை.

தேங்காய் எண்ணெயில் காஸ்டிக் சோடா லையை ஊற்றி நன்றாகக் கலந்து சுமார் 40 நிமிஷங்களுக்கு வைத்த பிறகு தண்ணீரை விட்டு கொதிக்க வைக்கவேண்டும். இவ்வாறு கொதிக்க வைப்பதால் எண்ணெயும் சோடாவும் ரசாயன மாறுமாடு பட்டு இளம் மஞ்சள் நிறமுள்ள குழம்பு உண்டாகிறது. இப்போது சோடா தூளை (வாஷிங் சோடா) சேர்த்து நன்றாகக் கலக்கி அச்சுகளில் வார்த்து சோப்பு கட்டிகளாகவும் தயாரிக்கலாம்.

சோப்பு தயாரிப்பதில் முக்கியமாக கவனிக்கத்தக்கது சோப்பு குழம்பை சரியான கொதிநிலையில் கொதிக்க வைப்பதுதான். இந்த கொதிநிலை உபயோகப்படுத்தப்படும் எண்ணெய் சோடாவின் தரம் முதலியவற்றைப் பொருத்தியிருக்கும். சோப்பு தயாரிக்கும் பழக்கத்திலிருந்து தான் சரியான கொதி நிலை இன்னதென்று தெரிந்து கொள்ள முடியும்.

கொதிக்க வைக்காமலும் சோப்பு தயாரிக்க முடியும். ஆனால் இத்தகைய சோப்பு வியாபாரத்திற்கு லாபகரமாயிருக்காது என்பது என் அநுபவம். வீடுகளில் இந்த முறையில் சோப்பு தயாரித்து துணிகளுக்கு உபயோகித்துக் கொள்ளலாம்.

தேவையான பொருள்கள்:
காஸ்டிக் சோடா 4½ அ. எடை
தேங்காய் எண்ணெய் 10 ,, ,,
தண்ணீர் 30 ,, அளவு

காஸ்டிக் சோடாவில் தண்ணீரைச் சேர்த்து கலக்கிக்கொண்டிருந்தால் ரசாயனமாறுபாடு ஏற்பட்டு சூடு ஏறிவிடும். சூடு குறையும் வரை கலக்கிக் கொண்டிருக்க வேண்டும். பிறகு எண்ணெயைச் சேர்த்து சுமார் 45 நிமிஷங்களுக்கு கலக்கிக் கொண்டே இருக்க வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட கலவையை அச்சுகளில் வார்த்து உலர்ந்தபின் கட்டிகளாக வெட்டி எடுத்துக் கொள்ளலாம். நீல நிற சோப்பு வேண்டுமென்றால் எண்ணெயைச் சேர்ப்பதற்கு முன் வேண்டிய அளவுக்கு நீலப்பொடியைச் சேர்த்துக் கொள்ளலாம். ★

உரிமைகள்!

மனித உள்ளத்திற்கு விடுதலை வழியில் செல்லும் உரிமை வேண்டும். பேச்சிலாவது பத்திரிகையிலாவது மேடையிலாவது உண்மையான கருத்துக்களையும் நம்பிக்கைகளையும் வெளியிடுவோரைத் துன்புறுத்தலாகாது. கருத்துக்களை சுதந்திரமாய் ஒருவர் மற்றவருக்குச் சொல்வது ஒருவருக் கொருவர் செய்யும் முக்கியமான தொண்டு என்பது என்கருத்து. அவ்வாறு ஒருவருக் கொருவர் சொல்லா விட்டால், அறிவுபரவாது. மனிதன் மாண்பெய்த மாட்டான். உண்மையான சுதந்திரம் இராது. இறுதியாக உலக சமாதானம் ஏற்படாது.

—பிராங்கிளின்

விக்கிரமாதித்தன் கதையில் அரிய கருத்துகள்

வி. சந்தானம்

நம்மிடையே பலர் விக்கிரமாதித்தன் கதை வாசித்திருக்கிறார்கள். ''வேதாளம் மறுபடியும் முருங்கை மரம் ஏறிக் கொண்டது போல'' என்ற வசனம் கூட வழங்கி வருகிறது. இந்தக் கதையை முதலிலிருந்து கடைசி வரை வாசித்துப் பார்த்தால், பல அரிய கருத்துகள் தோன்றுகின்றன.

கதைச் சுருக்கம் : விக்கிரமாதித்த மன்னன் இந்திர சபையில் ரம்பை, ஊர்வசி இவர்களின் நடனத்தைப்பார்த்து, யாருடைய நடனம் உயர்வானது என்று தீர்ப்புச் சொல்லுகிறான். முப்பத்திரண்டு படிகள் அடங்கிய சிம்மாசனமும், ஆயிரம் வருஷம் அரசாட்சியும் வரனாகக் கிடைக்கிறது. அவனுடைய மந்திரி பட்டிக்குக் காளி 2000 வருஷம் ஆயுள் வரனாக அளிப்பதால், விக்கிரமாதித்தன் ஆயுளும் இரண்டாயிரம் வருஷம் நீளுவதற்காக, பட்டி ஆறுமாத நாடாட்சி, ஆறுமாத காட்டுவாசம் உபாயமாகச் சொல்லுகிறான். பல்வேறு சாகஸங்களைப் புரிந்து 2000 வருஷம் வாழ்ந்த விக்கிரமாதித்தன், கடைசியில் குயவ வம்சத்தில் பிறந்த சாலிவாஹனன் என்பவனால் கொல்லப்படுகிறான்.

கருத்துகள் : விக்கிரமாதித்தன் பிதா, சந்திரவர்ணன் தாசி அலங்காரவல்லியைத்தான் மணப்பேன் என்று கூறிய பொழுது, நியாய சபையினர் ஒரு பிராமணன் தாசிப்பெண்ணை கலியாணம் செய்துகொள்ள வேண்டுமானால், அதே முகூர்த்தத்தில் ஒரு பிராமணப்பெண், ஒரு க்ஷத்திரியப் பெண், ஒரு வைசியப்பெண் மூன்று பேர்களையும் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்று் தீர்ப்பளிக்கின்றனர். இது அந்தக் காலத்திய சட்டமுறைகளைக் காட்டுகிறது.

முன்னோருக்குத் தெரிந்த கர்ப்பத்தடை முறை

பத்திரகிரி என்ற சந்திரவர்ணன் பிள்ளை, தகப்பனுக்காகத் தான் கலியாணம் செய்து கொண்டாலும், பிள்ளை பெறாது செய்து கொள்ளுவேன் என்று வாக்களிக்கிறான். அதற்கு அவன் செய்த உபாயம் இவ்வாறு கூறப்படுகிறது. தன் மனைவிமார்கள் சூதகமாய்ப் பன்னிரண்டு நாட் சென்ற பின்னால் அவர்களுடன் அனுபோகஞ் செய்து, இதைச் சாதித்துக் கொண்டான் என்று கூறப்படுகிறது. இது தற்காலத்திய பத்திர காலமுறையை நம் முன்னோர்கள் முன்னமேயே அறிந்திருந்தனர் என்று தெரியப் படுத்துகிறது.

ஜாடையினால் காதலைத் தெரிவித்தல்

வேதாளத்தின் கதை ''பத்மாவதி'' யில் ஒருபெண் ஒரு ராஜகுமாரனைக்கண்டு, அதிக காமம் கொண்டு, தடாகத்தில் புட்பித்திருக்கும் தாமரை மலரைக் கொய்து, தன்னிரு கண்களிலும் ஒற்றி, பல்லினால் கடித்துக் கால்மேற் போட்டுக் கொண்டு, மற்றொரு தாமரை மலரைக் கொய்து மார்பிலணைத்துக்கொண்டு, பிற்பாடு அவ்விடத்தை விட்டு அகன்றனள்.

பெரிய எழுத்து விக்ரமாதித்தன் கதையைப் படிக்காதவர்கள் நம்மில் வெகு சிலரே. அந்த பாமர ரஞ்சகக் கதையில் தான் எவ்வளவு அரிய கருத்துகள் அடங்கியுள்ளன.

என்று கூறப்படுகிறது. இதற்கு மந்திரி குமாரனின் வியாக்கியானம் அவள் தாமரை மலரைக் கண்ணில் ஒத்திக்கொண்டது தானிருப்பது கண்ணுபுரம் என்றும், பல்லினுற் கடித்தது தன் பெயர் பத்மாவதி என்றும், தன்காலிற் போட்டுக் கொண்டது தன் தகப்பன் பெயர் காளிங்கராயரென்றும், மார்பில் அணைத்துக்கொண்டது தன்னருகில் வந்தால் அணைகிறேனென்றும், தலையில் வைத்தது ரகசியமாக வரவேண்டும் என்றும் இதுவே இந்தச் சைகைக்கு அடையாளமென்றும் கூறுகிறுன். ஒரு பெண் அபிநயம் மூலம்தன் உள்ளக் கிடக்கையை அறிவித்ததை இது குறிக்கிறது.

எல்லாம் விதிப்படியே நடக்கும்

வேதாளக் கதையொன்றில் பிராமணன் ஒருவன் தனக்கு ஒருவர் வீட்டில் அளித்த அன்னத்தை நதிக்கரையில் ஒரு மரத்தினடியில் வைத்துவிட்டுக் குளிக்கப்போகிறுன். அவன் சென்றவுடன் மரத்தின் மேல் கிளையில் ஒரு கருடன் ஒரு பாம்பைப் பிடித்து வாயில் வைத்துக்கொண்டு உட்கார்ந்தது. கருடன் அலகினுல் கொத்த, வலி பொறுக்கமுடியாமல் பாம்பு விஷத்தைக் கக்கிற்று. விஷம் உடனே பிராமணன் வைத்திருந்த அன்னத்தில் விழுந்தது. பிராமணன் குளித்துவிட்டு வந்தவுடன் ஒன்றையும் கவனிக்காமல் சாதத்தைச்சாப்பிடவே இறந்தான். ''இந்தப் பாபம் யார்மேல் சேரும்?' என்று வேதாளம் விக்கிரமாதித்தனைக் கேட்க, விக்கிரமாதித்தன், ''இந்தப் பாபம் அன்னம் பிஷை அளித்தவனையும் சேராது. கருடனையும் சேராது. இந்தப்பாபம் இன்னுரைச் சேரும் என்று சொன்னவன் மேல் சேரும்'' என்று கூறினுன். எல்லாம் விதியின் விளையாட்டு என்பதை இக்கதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகிறது.

இன்னு செய்தாரை ஒறுத்தல்

சனிஸ்வர பகவான் விக்கிரமாதித்தனைப் பிடித்துக் கொண்டபொழுது அவன் மதுரேந்திரன் என்ற அரசனிடம் வேலையாளாக இருந்தான். விக்கிரமாதித்த மன்னனின் மனைவிகளை யடைய மதுரேந்திரன் ஆசைப்பட்டு, விக்கிரமாதித்தனைப் பலவாறு வருத்தினுன். கடைசியில் சனி பகவான் விக்கிரமாதித்தனை விடுவித்தபோது, ''மதுரேந்திரன் மீது பழிதீர்த்துக்கொள்'' என்று கூறிய பொழுது, ''சனி பகவானே! நான் இவனிடம் வந்த நாள்முதல் அடியேனுக்குத் தினம் ஆயிரம் பொன் கொடுத்துக் காப்பாற்றி வந்தானே யல்லாமல், வேறு நமக்கு என்ன பொல்லாங்கு செய்தான்? யாதொன்றும் செய்யவில்லை. கேட்போர் பேச்சுக் கேட்டு இவ்விதம் செய்தான்? அவன்மீது தவறில்லை. அவனை மன்னித்தருளவேண்டும்'' என்று விக்கிரமாதித்தன் கூறியது ''இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்'' என்ற கருத்தை நினைப்பூட்டுகிறது.

விக்கிரமாதித்தன் காடாறு மாதம் சென்றிருந்தபோது, அவன் தேவிமார்களில் ஒருவளான ஏலாக ரம்பை என்பவள் வேருெருவனிடம் நட்புகொண்டிருந்தாள். இந்தச் சம்பவம் தெரிந்து, விக்கிரமாதித்தன் தலைநகருக்கு வந்து அவளைக் கொல்லுகிறுன். இந்தச் சம்பவம் பெண்களைத் தனியாய் விட்டு வெளியூரில் புருஷன் அதிக நாள் தங்கக்கூடாது என்பதைத் தெரிவிக்கிறது.

அற்பர் சகவாசம் பிராண சங்கடம்

''கம்மாளன் கபட நெஞ்சம் கொண்டவன், அவனுடன் நட்பு வேண்டாம்'' என்று பட்டி கூறியும், விக்கிரமாதித்தன் அவனுடன் நட்பு கொள்ளுகிறுன். கம்மாளனுக்குக்கூடுவிட்டுக்கூடு பாயும் வித்தையைக் கற்றுக் கொடுக்கிறுன். ஒரு நாள்காட்டில் மரணமடைந்த ஒரு ஆண்கிளிக்காகப் பெண் கிளி கதறிக் கொண்டிருந்தது. விக்கிரமாதித்தனும், கம்மாளனும் இதைப்

பார்த்தார்கள். உடனே கம்மாளன் விக்கிரமாதித்தனை, ''ஆண் கிளியின் உடலில் புகுந்து, அதற்கு உயிருண்டாக்கி பெண் கிளியின் சோகத்தைத்தீர்'' என்று கூறினான். விக்கிரமாதித்தன் இதை உண்மையென்று நம்பி, ஆண்கிளியின் உடலில் புகுந்தான். வஞ்சக எண்ணங்கொண்ட கம்மாளன் உடனே விக்கிரமாதித்தன் உடலில் தான் புகுந்து, தன் உடலை எரித்து விட்டு, அரண்மனை திரும்பி மன்னனின் தேவிமார்களுடன்தான் சுகிக்கத் தொடங்கினான். இது ''அற்பர் சகவாசம் பிராண சங்கடம்'' என்பதை விளக்குகிறது. கடைசியில் பட்டியின் யுக்தியால் குட்டு வெளிப்பட்டு, கம்மாளன் செம்மறியாட்டு ரூபத்தில் கழுத்தறுபட்ட போது, ''கெடுவான் கேடு நினைப்பான்'', ''கெட்ட எண்ணத்தில் பிரவேசித்தவன் கடைசியில் நாசத்தை அடைவான்'' என்பதை நமக்கு நினைவுறுத்துகிறது.

பெண் யாரைச் சேர்ந்தவள்?

வேதாளக் கதையொன்றில் மூன்று பிராமணப் பிள்ளைகள் ஒரு பெண்ணை அவள் பிதாவிடம் மணம் முடித்துத் தரும்படி கூறவே பிதா பதில் தருமுன், பெண் இறந்து விட்டாள். அவளைக் கொள்ள வந்த மூவரும் மகா விசன முடையவர்களாகி, ஒருவன் தகனம் பண்ணின சாம்பலைக் காத்திருந்தான். வேறொருவன் அஸ்தியை எடுத்துக் கொண்டு காசியாத்திரை போனான். மற்றொருவன் தேசாந்திரியாக பூமி எங்கும் திரிந்து ஒரு அக்கிரகாரத்திலே ஒரு பிராமணனிடம் இறந்தவரை உயிருக்கு அழைக்கும் மந்திரத்தைக் கற்றான். இவனுடைய மந்திர பலத்தாலே பெண்ணுக்கு உயிர் வந்தது. ''இவர்களுள் யாருக்கு இந்தப் பெண் சேரும்?'' என்பதற்கு விக்கிரமாதித்தன் கூறும், பதில் ''அஸ்தியை எடுத்துக் கொண்டு காசி யாத்திரை போனவன் பிள்ளையாக வேண்டும். எழுப்பினவன் தகப்பனாக வேண்டும். சுடுகாடு காத்திருந்தவன் புருஷனாக வேண்டும்'' என்று சொன்னான். இதில் ''ஆபத்து சமயத்தில் உயிரைக் காப்பாற்றி, உயிரைக் கொடுத்தவன் பிதா வாகிறான்'' என்ற கருத்துப் புலனாகிறது.

மூளையைக் குழப்பும் கதை

நீதி வமிசகேது என்ற கதையில் ஒரு சுவாரஸ்யமான விஷயம் கேள்வியாகக் கேட்கப்பட்டிருக்கிறது. ஒரு பெண்ணின் தமையனும், அவள் புருஷனும், அந்தப் பெண்ணும் தேசாந்திரம் செல்லுகின்றனர். கள்வர்கள் பெண்ணின் நகைகளை அபகரித்துக் கொண்டு, பெண்ணின் தமையனையும், அவள் புருஷனையும் கழுத்தை வெட்டி விட்டு ஓடி விடுகின்றனர். பெண் காளியின் வரம் பெற்று, அவர்களை உயிருடன் எழுப்பிவிடவேண்டி தடவவேண்டிய மெழுகைத், தவறி அவசரத்தில், புருஷன் முண்டத்தையும் தமையன் தலையையும், தமையன் முண்டத்தையும் புருஷன் தலையையும் சேர்த்துத் தடவி விடுகிறாள். இதனால் புருஷன் தலையும், தமையன் முண்டமும், தமையன் தலையும், புருஷன் முண்டமும் உள்ள உருவங்கள் எழுந்திருக்கின்றன. ''இவற்றில் எதை அந்தப்பெண் புருஷனாகக் கொள்ள வேண்டும்?'' என்று வேதாளம் கேட்டதில் விக்கிரமாதித்தன், புருஷன் முண்டமும், தமையன் தலையையும் கொண்ட உருவத்தையே புருஷனாக அடைய வேண்டும் என்று கூறுகிறான். கதை சுவாரஸ்யம்மிக்கதாய்இருக்கிறது.

சுவாரஸ்யமான பல கதைகள்

இப்படியாகப் பல சுவாரஸ்யமான பொழுது போக்குக் கதைகளும், நீதிக்கதைகளும் அடங்கிய கதைக் களஞ்சியமே பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை. இந்தப் பெரிய கதையைக் குடியானவர்கள் மிக விரும்பிப் படிக்கின்றனர். இந்தப் பெரிய கதையிலிருந்து தன அமராவதி கதை, தாசி அபரஞ்சி கதை, சாலிவாஹனன் கதை என்பவைகள் இதுவரை படமாக எடுக்கப்பட்டுள்ளன. உயர்ந்த நீதிகள் உள்ள இக்கதைகளை அனைவரும் படிக்கவேண்டும். ★

திங்கள் ஒளியின் நன்மைகள்

அ. ராம்கோபால்

'திங்கள்' புரட்டாசி மாத இதழில் 'நிலவொளியின் கெடுதல்'களைப்பற்றி படித்திருப்பீர்கள். எதிலும் நல்லது மிருக்கிறது, கெட்டதும் இருக்கிறது. சந்திர ஒளியினால் ஏற்படும் நன்மைகளை விளக்குகிறது இக்கட்டுரை.

சூரியனைப் போலவே நிலவொளியும் மனித சமூகத்திற்கு நன்மை பயப்பது என நம் முன்னோர்கள் நம்பினார்கள். இதனாலேயே சூரியனைப்போலவே சந்திரனையும் நம்மவர்கள் தெய்வமாக மதித்து வணங்கி வருகின்றனர். நம் கோவில்களில் பெரும் பாலானவற்றில் நவக்கிரகங்கள் உண்டு. அந்நவக்கிரகங்களில் சந்திரனும் ஒன்று. சிவபெருமானின் முடியில் சந்திரனிருப்பதாக ஹிந்துக்களின் நம்பிக்கை. இதனாலேயே சங்கருக்கு சந்திரசேகரன், சந்திரசூடன், சந்திரதரன், சந்திரபாலன், சந்திரபூஷண், சந்த்ரமாலலாமன், சந்திரமௌளி, சசிதரன், சசிபிருதன், சசிசேகரன், சசிமௌளி எனப்பல பெயர்கள் வழங்குகின்றன. நிலவொளியைப் புகழாத காவியமோ, கதையோ, நாவலோ நம் நாட்டில் காண்பது அரிது. கவிகளுக்கும், கற்பனையாளர்களுக்கும் சிந்தனையூற்று பெருக்கெடுத்தோட நிலவொளியைப்போல் உதவுவது வேறு எதுவுமில்லை. கருத்தொருமித்த காதலருக்கு இன்பம் கூட்டுவதிலும் திங்கள் ஒளிக்கு இணையானது ஒன்றுமில்லை.

சூரிய ஒளிபடும்போது அதோடு சூடும்படருகிறது. விளக்கொளியில் கைவைத்தால் அது சுட்டு விடுகிறது. மின்சார விளக்கின் பல்புமீது கைவைத்தால் அதுவும் நம் கையைச் சுட்டுவிடுகிறது. இப்படிச்சுடும் ஒளியை சூட்டொளி அல்லது வெப்பஒளி எனச் சொல்லுவார்கள். ஆங்கிலத்தில் இதை இன்சான் டெசன்ஸ் லைட் எனச்சொல்லுவார்கள். சந்திர ஒளி வீசும்போது அதோடு சூடு படருவதில்லை. மின்மினிப் பூச்சியைத் தொட்டால் நம்கையை அது சுடுவதில்லை. இப்படிச் சுடாத ஒளியை குளிர்ஒளி அல்லது சீதள ஒளி எனச்சொல்லுவார்கள். ஆங்கிலத்தில் இதற்கு லுமின்சென்ஸ் லைட் என்று பெயர். சந்திரஒளி குளிர் ஒளி வகையைச் சேர்ந்தது. இது கண்ணுக்கும் உடலுக்கும் இதம் அளிக்கும் பண்புடையது. சூரியஒளியில் 98 சதவிதம் வெப்பம் அடங்கியிருக்கிறது. 2 சதவீதம் தான் ஒளி. ஆகையால் சூரியஒளி கண்ணுக்கும் உடலுக்கும் தீமை செய்யும் பண்புடையது. ஆனால் சூரிய ஒளி மூலமே மனிதனுக்கு வேண்டிய சக்தியும் ஆற்றலும் கிடைக்கிறது.

இந்த இருபதாம் நூற்றாண்டிலும் உலகில் ஜோஸ்யத்தை நம்பாத நாடு எதுவும் கிடையாது. நாட்டுக்கு நாடு ஜோசியமும், ஜாதகம் கணிக்கும் முறையும் மாறுபட்டாலும், எல்லா நாடுகளிலுமே பொதுவாக கிரகங்களை ஆதாரமாக வைத்தே இக்கலை வளர்க்கப் பட்டிருக்கிறது. நம் நாட்டிலும் சீனாவிலும் ஜாதகம் கணிப்பதில் கிட்டதட்ட ஒரே முறையைப்பின் பற்றிவருகிறார்கள். இந்நாடுகளில் சந்திரனின் நிலையைக் கேந்திரமாக்கிக்கொண்டு மற்ற கிரகங்

களின் நிலை, சஞ்சாரம் முதலிய வற்றைக் கணக்கிடுகின்றனர். சந்திரன் மனிதனுக்கு உடல்பலம், சாந்தி, புகழ், கவிதை முதலிய வற்றைத்தருவதாக ஜோசியர்கள் கூறுகிறார்கள்.

மனிதன் பைத்தியமாவதற்கோ ஸோம்னும்புலிஸம் என்னும் தூக்கத்தில் நடக்கும் நோய் உண்டாவதற்கோ நிலவொளி காரணமல்ல. காரணம் என்பதற்கு இதுவரை எந்தவிதமான ஆதாரமும் கிடையாது. ஆனால், முன்காலத்தில் உலகில் சிலபாகங்களில் இவ்வித குருட்டு நம்பிக்கை இருந்து வந்தது. இப்பொழுது படிப்படியாக எங்கும் இந்நம்பிக்கை மங்கி மறைந்து வருகிறது. உலகஜோதியாக விளங்கும் பகவான் புத்தர் ஞான ஒளி பெற்றது வைசாக பூர்ணிமை ஒளியில்தான்.

ஒவ்வொரு பௌர்ணமி சமயமும் கடல்மிகவும் கொந்தளிப்பாயிருக்கும். இதை நானும் கப்பல் பிரயாணத்தில் பல முறைகவனித்துள்ளேன். பௌர்ணமி சமயம் சந்திரனின் ஆகர்ஷண சக்தி மிகவும் கூடுவதே இதற்குக் காரணம். இக்கடல் கொந்தளிப்பால் ஏதோ ஒரு சில இடங்களில் ஓரளவு கரை கரையக்கூடும். பெரும்பாலான இடங்களில் தீமை எதுவும் ஏற்படுவதில்லை. நன்மையே ஏற்படுகிறது. கடல் கொந்தளிப்பால் கடற்காற்றின் சலனவேகம் அதிகரிக்கிறது. இதனால் கடல் நீர் ஆவியாவதும், அதன் மூலம் மேகமும் மழையும் அதிகரிப்பதும் சாத்தியமாகிறது.

கமாண்டர் ஏ. பி. காம்வெல் என்பவர் உலகில் பல நாடுகளில் சென்று பலவிஷயங்களைப் பற்றி ஆராய்ந்து புகழ்பெற்றவர். ஒரு நாள் அவர் வட அட்லாண்டிக்கில் கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். இரவுநேரம் பௌர்ணமி தினம். முழுவட்டமதி பால்போல் காய்ந்து கொண்டிருந்தது. எங்கும் நிசப்தம். நடுக்கடலில் அவர் தங்கியிருந்த காபினுக்கு வெளியே துப்பாக்கியால் சுடுவது போல 'பட் பட்' என ஏதோ வெடிக்கும் சப்தம்கேட்டது. வெளியேவந்து பார்த்தார். தாங்க முடியாத குளிர். வெப்ப நிலை 31° கும் குறைவாக இருந்தது. வெளியே வைக்கப்பட்டிருந்த பால்சம் பூச்செடிகள்தான் 'பட் பட்' என வெடித்துக் கொண்டிருந்தன. துப்பாக்கி வெடியல்ல!

பால்சம் செடிகள் இவ்விதம் வெடிக்கக் காரணம் என்ன என ஆராய ஆரம்பித்தார் காம்பெல். அதன் பயனாகச் சில உண்மைகள் தெரிய வந்தன. வளர் பிறையின் போது சந்திரக்கலை அதிகரிக்க அதிகரிக்க, அதற்கேற்றபடி செடிகளில் செடி உணவு ரசம் (சாப்) அதிகரிக்கிறது. தேய்பிறையின் போது சந்திரக்கலை குறையக் குறைய அதற்கேற்றபடி செடி உணவு ரசத்தின் அளவும் குறைந்துகொண்டே வருகிறது. பௌர்ணமி தினத்தன்று செடியின் எல்லா உயிரணுக்களும் (செல்ஸ்) செடி உணவு ரசத்தால் பூரணமாக நிரம்பி நிற்கின்றன. அச்சமயம் திடீரெனவெப்பநிலைகுறைந்தால், நிரம்பி நிற்கும் உணவு ரசம் உறைய ஆரம்பிக்கிறது. உறைய உறைய உருவில் பெருக்க ஆரம்பிக்கிறது. இதனால் உயிரணுக்கள் வெடிக்க ஆரம்பிக்கின்றன. செடிகள்காய்ந்து சுருண்டுபோகின்றன. காம்பெல் கண்டறிந்த உண்மை இதுதான். இதன் காரணமாக இப்பொழுது பிரிட்டனில் உள்ள விவசாயிகள் செடிகளையோ நாற்றுகளையோ வளர் பிறையில் தான் இடம் பெயர்த்து (டிரான்ஸ்பிளாண்டிங்) நடுகிறார்கள்.

பிரேஸிலில் மிகப் புகழ்பெற்ற இரயில்வே இஞ்சினியர் ஒருவர்; ஸபானிஷ்காரர் அவர். ஹர்பர்ட்டி-பெட் என்பது அவர் பெயர். ரயில்வே தண்டவாளங்களுக்கு அடியில் போடப்படும் ஸ்லீப்பர் கட்டைகளைப்பற்றி அவர் நீண்ட நாட்களாக ஆராய்ந்தார். தேய்பிறையில் வெட்டிய மரக்கட்டைகளை ஸ்லீப்பராகப் போட்டால் அவை சிக்கிரம் வெடிப்புக்கண்டு கெட்டுப் போவதாகவும், வளர் பிறையில் வெட்டிய மரக்கட்டை

ஸ்லிப்பர்கள் அப்படி இல்லாது நீடித்து உழைப்பதாகவும் அவர் கண்டறிந்தார். இதன் காரணமாக ஸ்லீப்பர்களுக்கு டெண்டர் கேட்கும்போது வளர்பிறையில் வெட்டிய மர ஸ்லீப்பர்களே சப்ளை செய்ய வேண்டும் என நிபந்தனை விதிக்கிறார் அவர்.

இதனால் அவர் தன் கம்பெனிக்கு நல்ல லாபம் தேடித் தந்திருக்கிறார். பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞானியான ஏ. வி. குயிஸ் என்பவர் 'பொலிவியாவில் ஆறு ஆண்டுகள்'' (ஸிக்ஸ் இயர்ஸ் இன் பொலிவியா) என்னும் தன் புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:

''இந்நாட்டு மக்கள் வீடு கட்ட வெட்டும் மரங்களை சுக்ல பட்சம் முதல் வாரத்தில் மட்டுமே வெட்டுகின்றனர். மற்ற சமயங்களில் வெட்டுவதில்லை. மற்ற சமயங்களில் வெட்டும் மரங்களை பல வகைப் பூச்சிகள் தாக்கி நாசப்படுத்துவதே இதற்குக்காரணம்.''

நம்நாட்டில் அஸ்ஸாம், தேயிலைக்குப் பெயர் போனது. அங்கே உள்ள தேயிலைத் தோட்டக்காரர்கள் தங்கள் செடிகளை வளர்பிறையிலேயே ''புருன்'' செய்வது வழக்கம். அப்போதுதான் கொழுந்துகள் அதிகமாக கிடைப்பதோடு உயர்தரமாகவு மிருக்கின்றன. ஆகையால் அங்கே தேயிலைக் கொழுந்து கிள்ளும் வேலை பெரும்பாலும் வளர்பிறையிலேயே நடத்தப்படுகிறது.

கானரித்தீவு வாழைக்குப் பெயர் போனது. அட்சாம்சம், தீர்க்காம்சம், தட்பவெப்பம் முதலியவை வாழைப்பயிரை வெகுவாகப் பாதிப்பவை என்பது வெகு நாட்களாக அந்நாட்டவருக்குத் தெரியும். நிலவொளியும் வாழையை வெகுவாகப் பாதிப்பதாக அவர்கள் இப்பொழுது கண்டறிந்திருக்கிறார்கள். சந்திர ஒளிமிகுதியாக உள்ள மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் மற்ற மாதங்களைவிட பழங்கள் அதிகமாக நீண்டும், பளபளப்பாகவும், ருசியாகவும், மணமாகவுமிருப்பதாக அனுபவ பூர்வமாக அவர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

இப்பொழுது உலகில் பெரும்பாலான நாடுகளில் சந்திர ஒளிக்கும் பயிர் வளர்ச்சிக்கும் சம்பந்தம் உண்டு என்பதை ஒப்புக்கொள்ளுகிறார்கள். பயிர்களை நிரந்தரமான இடங்களில் விதைப்பதோ, நடுகை செய்வதோ வளர்பிறையில் நடத்தும் வழக்கம் படிப்படியாக எல்லா நாடுகளிலும் இப்பொழுது பரவி வருகிறது.

வளர்ந்துவரும் விஞ்ஞானம் தற்போது செயற்கைச் சந்திரனைக் கண்டு பிடித்து ஓரளவு வெற்றியும் கண்டுள்ளது. சந்திரனுக்குள்ள இயற்கை குணங்கள் இந்த செயற்கை சந்திரனிடம் இருக்குமா என்பதை நாம் அனுபவ பூர்வமாகவே கூற வேண்டும். நன்மை பயக்கும் இயற்கை திங்களின் அதிசயத் தன்மைகளை ஆராயும் வர்க்கத்தினர் எந்த விதம் இந்த செயற்கைச் சந்திரனிடம் புகுத்தியுள்ளார்களோ?

திருப்பாற் கடலிலிருந்தே நிலவு பிறந்ததாக நம் புராணங்கள் கூறுகின்றன. தேவ—அசுரர்கள் பாற்கடலைக் கடைந்தபோது அதிலிருந்து முறையே காமதேனு, அமிர்தகலசம், கல்பவிருட்சம், அப்சரஸ், சந்திரன், விஷம், சுதை, லட்சுமி முதலியவை தோன்றியதாகக் கூறப்படுகிறது. பூமியிலிருந்தே சந்திரன் பிரிந்துபோனதாக தற்காலத்தில் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். பூமியில் எவ்விடத்திலிருந்து சந்திரன் பிரிந்து சென்றதோ அவ்விடமே இன்று பசுபிக் மாக சமுத்திரமாக உள்ளது என அவர்கள் கூறுகிறார்கள். பசுபிக் மகா சமுத்திரத்தின் தோற்றமும் நிலவைப்போல் வட்டவடிவமாகவே அமைந்துள்ளது. உண்மையில் நாமும் பூமா தேவியின் புத்திர புத்திரிகளே. ஆகையால் நிலவுக்கும் நமக்கும் சகோதர உறவு உண்டு என்றால் அது பொய்யாகாது. ★

குழந்தையே நம் செல்வம்

மோ. விசுவநாதன்

குழந்தைகள் - வாழ்க்கைப் பாதையின் கண்ணோ கண்டெடுக்கக்கூடிய ஒளி வீசும் வைரங்கள். இன்பம் பொங்கும் இனிய பார்வை - ஒளி வீசும் கண்கள் — முத்துப் பற்கள் — முல்லைச் சிரிப்பு— மோகன இதழ்கள் - புரியாத மொழி பேசும் பொற்சித்திரங்கள் —உள்ளங்கவர் கள்வர் - வெள்ளை உள்ளங் கொண்டோர் என இவர்கட்கு இலக்கணம் வகுத்தால் மிகையாகாது. கருத்தொருமித்து வாழும் காதலர்கள் பூண்ட அன்புப் பெருக்கின் அடையாளச் சின்னங்கள். இன்பப் பூங்கா எங்கே எங்கே என்று தேடி ஏமாந்து ஏக்கமுறும் அறிவிலிகளுக்கு இதோ இங்கே தான் இன்பப் பெருக்கை என்று, தம் பொக்கை வாய் திறந்து, சொல்லாமற் சொல்லுங்குழவிகள். இவர்களைக் காணுந்தோறும் ஏனோ இந்த உலகமே தன்னை மறந்து விடுகின்றது. இதனையெல்லாம் ஒரு சேரக் கூட்டி இரண்டே வரிகளில் வரைந்து தள்ளினார் வள்ளுவர்.

''குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள்
மழலை சொல் கேளாதவர்''

என்று.

வாழ்க்கை ஒரு சிலருக்குத்தான் இனிக்கிறது. அது யாருக்கு? பெட்டி நிறையப் பணமடுக்கி, இரவு பகலும் தத்தம் தூக்கத்தைக் கெடுத்து அதன் பக்கலில் நின்று பாதுகாக்கும் செல்வச் சீமான்களுக்கல்ல. அவர்களுக்குத்தான் இந்தத் தொழிலிலேயே காலம் கழிந்து விடுகிறதே! பின் வேறு யாருக்கு என்றால் அதுதான் இவர்கள் ஒழிந்த ஏனையோருக்கு. அரை வயிறு உணவு கிடைத்தாலும் அதிலோர் தனி இன்பமெய்தி, மனைவி மக்களுடன் கள்ளமின்றிப் பருகுகிறான் ஏழை. எதிர்கால அறிவுச் செல்வங்களை வாரியணைத்துப் பேருவகை காண்கிறான் அந்த ஏழை. அவர்கள் தரும் பொருளில்லா உரைகள் அவன் பசியைத் தீர்த்து விடுகின்றன. போதும் போதும் இனியும் பசியில்லை எனக்கு என்று அவன் தோல்வியை ஒப்புக் கொள்ளுமளவிற்கு இந்தக் குழவிகள் இன்பம் உண்டாக்குகின்றன. அவர்களுடன் அமர்ந்து அவர்கள் புரியும் வினைகளைக் கண்கொண்டு பார்த்திருந்தாலே போதும், மனதில் எழும் எல்லாவித இன்னல்களும் ஆதவனைக் கண்ட பனி போல் நீங்கி மனதைக் குளிர்விக்கின்றன. அதுவும் கிட்டுவது எளிதல்ல. அதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இன்னும் கூறப்போனால் குழந்தைகளின் இளமை பொருந்திய உள்ளங்களைக் கவர்வதும் ஓர் கலைதான். அவர்களிடம் மாறுபாடாக நடந்து கொண்டால் பின் அவர்களுக்குக் கோபம்தான் வரும். பின் என்னதான் செய்தாலும் அவர்களின் உள்ளங்களை மாற்ற முடியாது.

இவற்றிற்கான இரு ஆயுதங்கள் இன்மொழியும், அன்பும்தான். ஒருவர் உள்ளத்தின் அன்பை அவர் முகமெனும் கண்ணாடி காட்டி விட்டால் அதிலே ஓர் கவர்ச்சியைக் காணுவர் இக்குழந்தைகள். அவர்களுக்கும் ஆய்வுத் திறன் இருக்கத்தான் செய்கிறது. இவர் இப்படிப்பட்டவர் என்ற எண்ணம் ஒரு தரம் பட்டு விட்டாலே போதும். உடனே அதன் எதிரொலியை அக்குழந்தைகளின் செய்கைகளில்

> செல்வம் எனப்படுவதில் குழந்தைகளும் அடக்கம் என்பது அநேகருக்குத் தெரியாது. குழந்தைகளின் மழலைச் சொல்லில்தான் எவ்வளவு இன்பம் இருக்கிறது என்பது அனுபவித்தவர்களுக்கே தெரியும்.

காணலாம். நல்லவர் என்ற தோற்றம் அதன் உள்ளத்தில் ஆழப் பதிந்த பின், அது அந்த நல்லவனையே நம்புகிறது. ஆனால் எந்தவிதத்திலாவது அதற்கு மன நிறைவு ஏற்படவில்லையேல், பின் அதன் முகம் கூம்பி விடும். அவர் தம் மனக்கண்களினின்றும் ஒளி எழாது. அத்தகையோன் வலியச் சென்றாலும் அது ஒறுத்து விடுகிறது.

அமிர்தத்தை நாம் கண்டதில்லை. கேட்டிருக்கிறோம் அதைப் பற்றி. ஆனால் அந்த அமிர்தமோ நமக்குக் கிடைப்பதில்லை. அதை எந்தக் கடையிலும் விற்பதில்லை. ஆனால் அதை நாம் பெற வழியுண்டு. அதனை நல்கும் நல்லோர் வேறு யார் என்று எண்ணுகிறீர்கள்? வேறு யாருமல்ல – அவர்களே நம் "புன்தலைச்சிறார்." அமிழ்தின் சுவை இப்படியிருக்கும் என்று திட்டவட்டமாக நம்மால் இயம்ப முடியாது. ஆனால் இக்குழவிகள் தம் பிஞ்சுக் கரங்களால் அள்ளி நம் வாயகத்தே ஊட்டும் கூழும் அவ்வமிழ்தின் சுவையினை மிஞ்சக் கூடியது என்று நான் கூற வில்லை. இதோ வள்ளுவர் கூறுகிறார், கேளுங்கள் :

"அமிழ்தினும் ஆற்ற இனிதே
தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்."

இம்மட்டோ? குழந்தைகளின் அரவணைப்பிலே நம் உடல் புளகாங்கிதமடைகிறது. அவர் தம் மழலை மொழி நமது செவிகளுக்கு இன்பங் கூட்டுகிறது. காணுங்கள் அதையும் இங்கே :

"மக்கள் மெய்தீண்டலுடற்கின்ப
மற்றவர்
சொற் கேட்டலின்பஞ் செவிக்கு"

இன்னும் கூறப்போனால் குழந்தைகளுக்கு இருக்கும் ஒரு சில சிறந்த திறமைகளும் நம்பால் இல்லை. எல்லா மக்களும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஒருவருக்கும் மற்றவருக்கும் உள்ள வேறுபாடு மலைக்கும் மடுவுக்கும் உள்ளதாக இருக்கிறது. நம்மில் சிலர் அன்பொழுகப் பேசுகின்றனர். வேறுசிலர் பேசுவதுகூட கிடையாது. ஏனையோருக்கு பேசு முன்பே கோபம் அளவிறந்து வந்துவிடும். அதன் காரணமும் விளக்கற்பாலதன்று. ஆனால் இந்த மூவகையினரும் குழந்தைகளைக் காணுங்கால், தம் மனத்தகத்தே நின்றவைகளையெல்லாம் அகற்றி, கனிந்தொழுகும் கனிச்சான்றாகின்றனர்.

இதோ புறநானூறு காட்டும் இன்னொரு புதுமைச்சித்திரம் :

படைப்புப் பல படைத்து
பலரோடுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ
ராயினு மிடைப்படக்
குறு குறு நடந்து
சிறு கை நீட்டி
இட்டுந் தொட்டுங்
கல்வியுந் துழந்தும்
நெய்யுடையடிசின்
மெய் பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை
யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்
தாம் வாழுநாளே.

குறைவற்ற செல்வம்—குபேரச் செல்வம்—குவிந்து கிடக்கின்றது கேட்பாரன்றி. அதனைச் செலவிட வழி தெரியவில்லை. யாதுசெய்வது? அறுவகைச் சுவையுடனும், நெய்யும், பாலும், தேனும் கலந்து பக்குவமாகத் தயாரித்த ருசி மிக்க உண்டி, தனியாக அல்ல; நண்பர் குழாம் புடைசூழ வந்திருந்து, நல் விருந்தை ஒரு பெருவிழாவாக்கி, இன்பக்கேணியில் மூழ்குகிறார்கள் செல்வர். ஆனாலும் அதிலும் ஓர் குறை காண்கிறார் புலவர். குறுக்கும் நெடுக்கும் தன் சிந்தை காட்டும் வழி நடந்து, தன் பிஞ்சுக் கையால் ஆவன செய்து இன்பம் விளைக்கும் குழவியினைப் பெறுதோர், பிறந்தும் அதன் பயனை அடையத்தவறியோரே என்கிறார். அவர்கள் தம் வாழ்நாளை வீணாக்கியவர்களேயாம். எனவே குழந்தைகளின் மதிப்பீட்டை இத்தகைய எடுத்துக்காட்டுச் செய்யுள் வாயிலாக அறிந்து நாம் பெருமிதம் கொள்ள முடிகிறது.

இறுதியாக-இவ்வமுகுச் செம்மல்களைப் பேணிப் போற்றுதல் பெற்றோர்க்குரியபெருங்கடன். உண்மையிலேயே குழந்தை வளர்ப்பு எளியதோர் செயலன்று. பெரு முயற்சியுடனும் நல்லுறுதியுடனும் அக்குழந்தைகளின் இள உள்ளங்களை இனிய நற்பாதையில் திருப்பி அவர்களுக்கோர் வழிகாட்டியாய் அமைவதே பெற்றோர் கடன்.

இந்தப் பொறுப்பு பெரும்பாலும் தாய்க்குலத்திற்கே உரித்தது. பத்து மாதம் தம் கருப்பையிலே தாங்கிய அவர்களுக்குத்தான் குழந்தைகளின்மேல் பாசமும் பற்றும் அதிகம் இருக்க வழியுண்டு. மேலும் தவழ்ந்து விளையாடி கால் ஊன்றி நடக்கும் வரை தாயின் கவனிப்பையே குழந்தைகள் அதிகம் பெறுகின்றன. பின்னர் பள்ளி செல்லுங்கால், தாயே, அறிவிற் சிறந்த கருத்துக்கள் கொண்ட கதைகளையும் வரலாறுகளையும் எடுத்தியம்பி, தன் குழந்தையின் நலனுக்குப் பாடுபடுகிறாள். முக்கியமாக, ஒரு குழந்தையின் வருங்காலம் தாயகத்தேதான் அடங்கியுள்ளது. ஏனென்றால் வளரும் உள்ளங்களுக்கு ஏற்றதொரு வழியை வகுத்துக் காட்டுவதும் அவளே யாதலால், அவளே அக்குழவியின் வாழ்க்கைக்கு அடிப்படை. எனவே இங்கு தாயின் திறமையே மிகுதியாகப் போற்றப்படும்.

ஆக இத்துணைப் பொறுப்புக்களையும், தாயார் பொறுமையென்னும் அணிபூண்டு வெற்றியுடன் பெருமையையும் அடைதலே சாலச் சிறந்தது. அத்தகைய தாய் ஒரு குழந்தைக்கு மட்டுமல்ல, உலகத்திற்கே ஒப்பற்ற தாயாக விளங்குவாள்.

நூற்றாண்டு வாழ்ந்து உலகின் கண் வெறுப்புக்கு ஆளாகும் குழந்தைகளைக் காட்டிலும், காலனையும் வெல்லும் சக்தி படைத்த உத்தமபுத்திரனான மார்க்கண்டேயன் போன்ற நற்குணமமைந்த பாலர்களே உலகின் உய்விற்கு இன்றியமையாதவர்கள்.

அறிவுச் செல்வங்களும் தத்தம் கடமையை யுணர்ந்து வருங்காலத்து, இளைஞர்களான பின் இல்லறமாய நல்லறம் ஏற்று ''மகன் தந்தைக்காற்றும் நன்றி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்'' என்னும் உயர் வாக்கிற்கோர் எடுத்துக்காட்டாய் நின்று நிலவுவர் என்பது வெள்ளிடைமலை. ★

மொழிப்பெயர்ப்புகள்

★ பகவத் கீதையை அரபு மொழியில் மொழி பெயர்த்தவர் அல்பெரூனி.

★ 'பில்கிரிம் புரோக்ரஸ்' என்பதை தமிழில் ரக்ஷண்ய 'யாத்ரீகம்' என்ற பெயரில் செய்யுள்களாக அமைத்தவர் எச். ஏ. கிருஷ்ணபிள்ளை.

★ திருக்குறள் முழுவதையும் பிரெஞ்சு மொழியில் எழுதியவர் லெமிரேடர். ஜெர்மன் பாஷையில் கிரால் என்பவர் மொழிபெயர்த்தார். லத்தீன் மொழியில் வீரமாமுனிவர் மொழிபெயர்த்தார்.

★ நாலடியாரையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி. யூ. போப்.

விநோத மீன்கள்

பூமியிலுள்ள ஜீவராசிகளிலேயே வியக்கத்தக்கனவாய் விளங்குபவை நீர் வாழ்வனவே. அந் நீர் வாழ்வனற்றுள் விநோத விநோதமாகவும், விநோதங்களைப் புரிந்தவாறும் இருப்பவை மீன் வகைகளையாகும்.

மீன்கள் ஒன்றுடன் ஒன்று தமக்குள் பேசிக் கொள்கின்றன. அவை பல விதங்களில் இரைந்தும், சீறியும், உறுமியும், முணுமுணுத்தும், சீழ்க்கை அடித்தும் தங்களுடைய வார்த்தைகளை வெவ்வேறு விதமாக வெளியிடுகின்றன. இவ்விதமான சப்தங்களெல்லாம் மீனின் காற்றுப் பையிலுள்ள தசைகளின் வெவ்வேறு வகையான அசைவுகளால் ஏற்படுகின்றன. தாரைமீன் ஹாரனைப் போன்றே சப்தமிடும். கருநீல நிறமுள்ள ஒருவகை மீன் தன்னுடைய பற்களை ஒன்றினுடன் ஒன்று உராய்த்து, கோரமான ஒலிகளையெல்லாம் எழுப்பும். தம்பட்ட மீனின் படபடப்பு சப்தம் அறுபது அடி ஆழத்திற்குக் கீழே ஏற்பட்டாலும் நன்ருக நமக்குக்கேட்கும். காற்றுப்பையின் வெளிப்புறத்தை சிறகுகளினுல் வேகமாய் அடித்து அது தம்பட்ட சப்தத்தை உண்டாக்குகிறது.

மீன்கள் சில வியக்கத்தக்க சர்க்கஸ் வேலைகளை யெல்லாம் செய்து காட்டுகின்றன. சின்னூ சாலமன் எனும் மீன் பதினுறு அடி உயரம் நீரினின்று எழும்பி, உயரே குதிக்கும். டுனு, வான்மீன் முதலியனவும் நன்ருகக் குதிக்கும். இருலும் கடற்குதிரையும் நிமிர்ந்த நிலையிலேயே நீந்தும். ஊசிமீன் தலைகீழாக நின்றவாறே நீந்தும். நைல் நதியிலுள்ள பூனைமீன் முதுகின் உதவியினுல் நீந்துகிறது. வாள் மீன் எல்லாமீன்களைக் காட்டிலும் வேகமாக நீந்தக் கூடியது.

கர்னுர்டு எனும் மீனிற்கு கைகள், கால்கள், சிறகுகள், துடுப்பு இவை எல்லாமே உண்டு. உடல் பளபளப்பாக இருக்கும்; கடினமான தோலாலான ஒரு தலைக்கப்பும் உண்டு. இதனுல் நடக்கவும், ஓடவும், நீந்தவும், பறக்கவும் முடிகிறது. கெடவிறு என்ற பிரசித்தமான மீனைப் போலவே இதுவும் வேகமாகப் பறக்கும். இது மலேயாவிற்கருகில் காணப்படுகிறது.

மரமேறிமீன் நீரினருகாமையிலுள்ள மரங்களில் பூச்சிகளை உண்ண ஏறும்; கரையிலும் சிறிது தூரம் ஓடும். பாம்பு மீனும், சேற்றுத்துள்ளியும் நீரினின்று கரைக்கு வந்து, உலாவியவாறு இரைதேடும். ஊரும் மீன் என்ற பிரபலமான மீன் ஒரு மைல் தூரத்திற்கு மேலேயே தரையில் ஊர்ந்து செல்லும். தண்ணீரினின்று வெளி வந்த ஒரு வாரம் வரை உயிருடன் இருக்கும்.

வீங்கு மீனும், முள்ளம் பன்றி மீனும் மிகச் சிறிய அபாயம் நேர்வதாகத் தெரிந்தாலும் காற்றையோ, நீரையோ அடிவயிற்றில் உறிஞ்சிக் கொண்டு, பந்து போன்ற உருண்டை வடிவம் பெற்று, முதுகிலுள்ள முட்களை



நீட்டி நிமிர்த்தியவாறு மிதக்க ஆரம்பித்து விடும். இதன் கூறிய முட்களைக்கண்டு எதிரிகள் இதனருகில் வர அஞ்சும். இவை நீரினை நிறைய உட்கொண்டு விட்டால், வெடித்து இறந்து விடுகின்றன.

தென் ஆபிப்ரிக்க சுதேசிகள் அங்கே காணப்படும் ஒருவகை மீனை எடுத்து ஊதி ரப்பர் பந்து போல் கடற்கரையில் துள்ளவிடுகிறார்கள்; நீரில் விழுந்தவுடன் இவை பழைய வடிவம் கொண்டு விடுகின்றன. பகட்டான இந்த மீனின் தோலைக் கொண்டு ஜப்பானியர் கண்ணைக் கவரும் பல வண்ண விளக்குக் கூண்டுகளை செய்கின்றனர்.

மீன் வகைகளிலேயே மிகவும் சிறியது கோபி எனும் மீனுகும், பிலிப்பைனிலுள்ள லூஸான் ஏரியில் இவை ஏராளமாகக் காணப்படுகின்றன. முழு வளர்ச்சியடைந்த மீன்கள் அரையங்குலத்தைவிட குறைவாகவே யுள்ளன. மீன் வகைகளிலேயே பெரியன திமிங்கிலமும், ராக்ஷஸ சுரு மீனுமாகும்.

மெக்ஸிக்கோவில் இருக்கும் அக்ஸோல்டன் என்ற மீன் தரையிலும் தண்ணீரிலும் வசிக்கிறது. மழை காலத்தில் அதற்கு இரண்டு ஜதைக்கால்கள் முளைக்கின்றன. எனவே அது நீரிலிருந்து வெளிவந்து தரையில் வசிக்க முடிகிறது. வெயிற்காலம் ஆரம்பமான உடனேயே அது தன் கால்களை இழக்கத் துவங்குகிறது, எனவே நீரை மீண்டும் நாடுகிறது.

டால்பின் என்ற வகை மீன் தன் வர்ணங்களை மாற்றிக் கொள்வதில் புகழ் பெற்றது. இதே போல ராஸி எனும் மீனும் தன் எதிரிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ள கண் சிமிட்டும் நேரத்தில் சூழ்நிலைக் கேற்றவாறு நிறத்தை மாற்றிக் கொள்ளும்.

விஞ்ஞானிகளைப்பேராச்சரியத்தில் ஆழ்த்தும் ஒரு மீன் வகையை கலிபோர்னியேவிலுள்ள உஷ்ண நீரூற்றுக்களில் காணலாம். இதன் பெயர் ஸிப்ரிண்டன். மேலே சொன்ன ஊற்றுகளின் உஷ்ண நிலை 200°F ஆகும்; அதாவது தண்ணீரின் கொதி நிலையைவிட 12° குறைவு. மேலும் அத்தண்ணீரில் போராக்ஸ் என்ற ரசாயனப் பொருளும் கலந்துள்ளது; ஸோப்பின்றி துணிகளை வெளுக்க இந்நீரை உபயோகிக்கலாம்! இப்படியிருந்தும் இயற்கை உயிர்வாழ எப்படித்தான் துணை செய்கிறதோ?

ஈல் என்ற விலாங்கு மீன் மின்சாரத்தைப்படைக்கக்கூடிய வல்லமையுள்ளது. மனிதன் மின்சாரத்தினைப் பற்றிக் கனவுகூட காணாத காலந்தொட்டு இருந்து வரும் உயிருள்ள டைனமோவாகும் இது. இதன் தலையில் தேன் கூடு போலப் பல மின்சாரக் கலங்கள் நிறைந்துள்ளன; ஒவ்வொரு கலமும் ஒரு வோல்ட் மின்சார சக்தியை உண்டாக்கக் கூடியது. ஆனால் இவ்வளவு கலங்களிலும் உண்டாகும் சக்தியை ஒன்றாக இணைத்து, எப்படி இந்த மீன் பலமான மின் சக்தியை வீசுகிறது என்பது மட்டும் புதிராகவே யுள்ளது. இவ்விலாங்கு மீனின் மின்வீச்சால் இவற்றின் கண்கள் குருடாகி விடுகின்றன விரைவில். எனவே தலையிலுள்ள 'ரடார்' சாதனம் போன்ற குழிகளின் உதவியால் இரைதேடுகின்றன.

இயற்கையின் சிருஷ்டித் தத்துவத்தையும், அது விந்தை புரியும் வகையில் செய்துள்ள உயிர்ப் பிராணிகளையும் நாம் அவ்வப்போது கூர்ந்து கவனித்தால் நம் வியப்பிற்கு எல்லை காண இயலாது. அத்தகைய விந்தை நிகழ்ச்சிகளில் இந்த மீன் வர்க்கங்களின் சிருஷ்டி குறிப்பிடத் தக்கது.

மீன்களிலே பல நிற மீன்கள் உண்டு. நீலம், சிகப்பு, பொன் நிறம், வெள்ளி நிறம், கருப்பு, ஊதா, மஞ்சள், சாம்பல் நிறம் முதலிய வர்ணங்களில் மீன்கள் உள்ளன. அதேபோல பந்து வடிவம், பாம்பு, வௌவால், சிலந்தி, இலை, குடை போன்ற விதம் விதமான உருவங்களிலும் இருக்கின்றன. இவற்றை யெல்லாங் கொண்டு மீனினத்தை விநோத வகையாக ஏன் கொள்ளக்கூடாது? ★

அச்சின் கதை

'மலர் மன்னன்'

இதோ இம்மாதத் 'திங்கள்' புதிய பொலிவுடனும் 'கம்' மென்ற அச்சு மை மணத்துடனும், ஒரே சமயத்தில், வெளியாகி பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை அதிகரிக்கிறது. ஆமாம்! ஐநூறு பக்கத்திற்கு மேல் உள்ள புத்தகங்களானாலும் அலட்சியமாகப் பல்லாயிரக் கணக்கான பிரதிகள் அச்சிடப்பட்டு, விற்பனைக்கு வந்து உடகார்ந்து விடுவதை இன்று சர்வசாதாரணமாகக் காண்கிறோம். ஆனால், பத்துப் பாட்டு, எட்டுத்தொகை போன்ற தேனொழுகும் சங்க இலக்கியங்களையும் மற்றும்பல காவியங்களையும் நம் முன்னோர்கள் இப்படியா வெகு எளிதில் அச்சிட்டு வெளியிட்டார்கள்? அல்லும் பகலும் ஊண் உறக்கமின்றி, பனை ஓலை நறுக்குகளில் எழுத்தாணிகொண்டு விரல்கள் காய்த்துப்போகும்படி எழுதியல்லவா அவற்றை உருவாக்கினார்கள்?

உண்மைதான், நம்மவர்கள் பொன், வெள்ளி நாணயங்களை அச்சிடுவதற்கான இயந்திரங்களை அமைத்துக் கொண்டார்களேயன்றி, நூல்களை அச்சிடும் பொருட்டு அச்சியந்திரங்களை அமைத்துக் கொள்ளவில்லை. அவர்களது மனமெனும் பூங்காவில் மலர்ந்த எண்ணங்களான மலர்கள்யாவும் எழுத்தாணியின் துணைகொண்டு, பனையோலையிலேதான் எழுத்தாக்கப்பட்டன.

ஆறாம் நூற்றாண்டில் சீனத்திலே நூற்களை அச்சிடும் முறை ஒன்று வழக்கில் இருந்து வந்தது. நூலில் ஒவ்வொரு பக்கத்திற்குமுரிய சொற்றொடர்கள் ஒரு மரப்பலகையில் பொறிக்கப்பட்டு, தாளில் அச்சிடப்பட்டன. இந்த முறையில் பெருத்த சங்கடம் இருந்தது. ஏனெனில் ஒவ்வொரு புத்தகத்திற்கும் ஒவ்வொரு பக்கத்திற்கு என்று அச்சுப் பலகைகள் தயார் செய்யவேண்டியிருந்தது. ஒரு புத்தகம் அச்சிடுவதற்கே, பலப்பல அச்சுப்பலகைகள் தயாரிக்க வேண்டியிருந்தால், எப்படி நிறையப் புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுவது சாத்தியமாகும்?

தற்போதைய அச்சுமுறையே, தனி. ஒரு குறிப்பிட்ட பகுதியை அச்சிட தனித்தனி எழுத்து வார்க்கப்பட்டுள்ள எழுத்துக்களைக் கோர்த்து, பின்னர் அவற்றை அச்சிட்டானதும், மறுபடியும் வேறொரு பகுதியை அச்சிட அந்த எழுத்துக்கோர்வையைப் பிரித்துப் பயன்படுத்திக் கொள்ளும் இந்த முறையினைக் கண்டுபிடித்தவர் ஜான் கூடன் பெர்க் என்ற ஜெர்மானியரே. இவர் ஜெர்மனியில் மேயன்ஸ் என்ற நகரத்தில் 1400ம் ஆண்டில் தோன்றினார்.

மேயன்ஸ் நகரத்தில் உண்டான கலகத்தின் காரணமாக இவரும் இவரது நண்பர்களும் நகரினின்று வெளியேற்றப் பட்டார்கள். அரசாங்கம் அவர்களை நகரத்தை விட்டு துரத்தியதோடு நில்லாமல், அவர்களது உடமைகளையும் விழுங்கி பெரிய ஏப்பமொன்றை விட்டது. எனவே இவர் மேயன்ஸுக்குத் திரும்பும் எண்ணத்தை மனத்தினின்று வேரோடு கிள்ளியெறிந்துவிட்டு, ஸ்ட்ராஸ்பெர்க் என்ற நகரத்திலே வசித்து வரலானார். வெகு விரைவில் அந்நகர மக்களின் அன்பையும் மதிப்பையும் கவர்ந்த இவர், அவர்களது உதவியினாலேயே தாம் இழந்த உடமைகளைத் திரும்பப் பெற்றுவிட்டார். இதைக் கொண்டு பல நாடுகளையும் சுற்றிப் பார்த்து அறிவையும் அனுபவத்தையும் வளர்த்துக் கொண்டார்.

ஒரு சமயம் இவர் ஹாலந்தில் இருக்கும் பொழுது இவரது நண்பரொருவர் ஒரு மரப் பலகையிலே செதுக்கப்பட்டிருந்த லத்தீன் மொழியை இவருக்குக் காண்பித்தார். அன்றிலிருந்து – அந்தக் கணத்திலிருந்து – இவருக்கு அச்சுப் பொறியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற பைத்தியம் பிடித்து விட்டது!

கூடன்பெர்க் பூஞ்சோலைக்குச் சென்று தமது காதலியைப் பற்றி எண்ணி எண்ணி இன்புற்று, அங்குள்ள மரங்களில் அவளது பெயரைச் செதுக்கி அகமகிழ்வது வழக்கமாம். அவ்வாறு ஒரு தடவை ஈரக்கசிவுள்ள மரப்பட்டையில் அவளது பெயரைச் செதுக்கி, அவற்றைத் தம் காதலியிடம் அளிக்கக் கருதியவராய் அதனை ஒரு காகிதத்தில் சுற்றி எடுத்து வைத்துக் கொண்டார். மறுநாள் காகிதத்தைப் பிரித்தவர் திடுக்கிட்டுப் போய் விட்டார்! ஏனெனில் பட்டையில் செதுக்கப்பட்டிருந்த எழுத்துக்கள் அக்காகிதத்தில் மிகத் தெளிவாகப் பதிந்திருந்தன!

கூடன்பர்க், அச்சுப்பொறி கண்டுபிடிப்பதற்கான அடிப்படை, எதிர்பாராதவிதமாகக் கிடைத்தது கண்டு மகிழ்ந்தார். ஊக்கமும் உற்சாகமும் கொண்டார். மரப்பலகைகளில் எழுத்துக்களைச் செதுக்கி மையை அவற்றின் மேல் தடவி அச்சிட்டுப் பார்த்தார். பல ஆண்டுகள் இரவு பகல் என்று பாராமல் இதனைப் பற்றியே கண்ணுங் கருத்துமாகச் சிந்தித்து, பற்பல ஆய்வுகளை நடத்தி, இறுதியாக ஒவ்வொரு எழுத்தையும் தனித் தனியாக சிறு சிறு மரத்துண்டுகளில் செதுக்கி அச்சிடுவது, என்ற முடிவிற்கு வந்தார்.

சிறு சிறு மரத்துண்டுகளில் எழுத்துக்கள் வடிப்பதென்பது லேசான வேலையல்ல. அந்த நுட்பமான வேலையை வெகு காலம் தொல்லைபட்டுக் கற்றுக் கொண்டார் கூடன்பர்க்.

ஹாலந்தினின்று ஸ்விட்ஸர்லாந்தை அடைந்த இவர், அங்கு தனித்தனி எழுத்துக்களை நூலில் கோர்த்து, அவை நெகிழ்ந்துவிடாவண்ணம் இறுக்கமாகப் பிணைத்து, பிற்பாடு அவற்றின் மேல் மை தடவி, அச்சிட்டுப் பார்த்தார். சொற்றொடர்கள் அழகாகக் காகிதத்தில் பதிவாகியிருப்பதைக் கண்டார். இந்தக் கலை வளர வேண்டுமேயானால், தாம் ஒரு அச்சுத் தொழிற்சாலை நிறுவியாக வேண்டும் என்ற முடிவிற்கு வந்தார் அவர்.

கூடன்பர்க்கிடம் அறிவு இருந்தது. ஆக்கத்திற்கான ஊக்கமும் நிரம்ப இருந்தது. ஆனாலும் என்ன செய்வது?

அல்வாகிண்டுவதற்கு எல்லாப் பொருள்களும் தயாராக இருக்கின்றன. கிண்டவும் நன்றாகத் தெரியும், இதெல்லாம் இருந்தும் என்ன பயன்? அடுப்பு இல்லையே? நெருப்பு கிடையாதே!

கூடன்பர்க் எப்படியாவது நிதி திரட்டி தொழிற்சாலை கட்ட வேண்டுமென்ற உறுதிகொண்டு பல செல்வந்தர்களிடம் சென்றார். செல்வந்தர்களோ செல்லாக்காசு கூடக் கொடுக்க முன்வரவில்லை; மாறாக, ''இதென்னய்யா, பைத்தியக்காரத்தனமாக இருக்கு! அச்சு இயந்திரமாம், கண்டுபிடிக்கப் போகிறாராம். காசைக் கரியாக்கணும்னு எங்களுக்கென்ன. ஆசையா, பிரார்த்தனையா?'' என்று அவர் மனமுடைந்து போகும்படி கேலியும் கிண்டலும் செய்து அவரைத் துரத்தி விட்டார்கள்.

எனவே அச்சுத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்ற எண்ணத்தை உள்ளத்தில் திடமாக வைத்துக்கொண்டு, வயிற்றுக் கவலையை நீக்கும்பொருட்டு, பல தொழிலாளிகளுடன் கூட்டாகச் சேர்ந்து அணிகலன்கள் செய்யும் தொழிலில் ஈடுபட்டார் அவர்.

பகல் முழுவதும் நகைகளை உருவாக்கி, இரவு முழுவதும் தொழிற்சாலை நிறுவுவதற்கான, திட்டங்களை உருவாக்கலானார். 'ஏமொரு

வராலேயே, அச்சியந்திரங்களைச் 'செய்து வெளியிடுவது முடியாத காரியம்' என்ற முடிவிற்கு வந்து, அச்சியந்திரம் பற்றிய நுணுக்கங்களைத் தமது கூட்டாளிகளிடம் வெளியிடலானார். அவற்றை அறிந்துகொண்ட அவரது கூட்டாளிகள், அச்சியந்திரங்களைத் தயாரித்து, அதனால் வரும் செல்வத்தையும் சிறப்பையும் தாமே அனுபவிக்க வேண்டுமென்ற பேராசை கொண்டு, அச்சுத் தொழிற்சாலையை நிறுவுவதற்குத் தங்களின் உதவி வேண்டுமாயின் அவர் தங்களது நிபந்தனைகளுக்குட்பட்டாக வேண்டுமென்று கூறினார்கள். கூடன்பர்க் அச்சுத் தொழிற்சாலை நிறுவ வேண்டுமென்ற ஒரே எண்ணத்தில் இருந்தமையால் அதற்கு உடன்பட்டார்.

அச்சுயந்திரத் தொழிற்சாலை நிறுவப்பட்டது. அதில் எதிர்பார்த்தது போலவே பெருந்த லாபமும், புகழும் வரலாயின. ஆனால் கூடன் பர்க்கிற்கோ இதனால் எவ்வித பயனும் இல்லாது போயிற்று. அக் கயவர்கள் லாபத்திலும் புகழிலும் பங்குபோட்டுக் கொண்டு அவரை வெறும் கூலியாளாகவே நடத்தி வர்தார்கள். பிறகு இந்த அச்சுத்தொழில் தங்களுக்கே உரியதென்று வாதாடவும், கோர்ட்டுக்குப் போய்விட்டார்கள்! ஆனால் வஞ்சகம் எத்தனை நாட்களுக்கு வாழும்? நீதி, கூடன் பார்க்கிற்கே அச்சியற்றும் உரிமை என்று தீர்ப்புக் கூறியது. தாம் அல்லும் பகலும் பாடுபட்டு உருவாக்கிய அச்சுப்பொறியின் உரிமை தனக்கே சொந்தமானவுடன் இவர் தமது சொந்த ஊருக்குக் கிளம்பிவிட்டார்.

மேயன்ஸில் தம் காதலியை— அச்சுத்தொழிலைக் கண்டு பிடிப்பதற்குப் பேருதவி செய்த 'ஆன்னெட்' என்ற சொல்லைப் பெயராகக் கொண்டிருந்த அம்மங்கை நல்லாளை — மணந்துகொண்டு இல்லறம் நடத்தலானார். வறுமைப் பேய் அவரை இறுக்கத் தழுவிக் கொண்டுவிட்டதால், அவரது வாழ்க்கை துன்பமயமாக இருந்தது. மேயன்ஸில் மீண்டும் கலகம் உண்டாகவே, இவர்கள் ஸ்விட்ஸர்லாந்திற்குச் சென்றார்கள். அங்கே கூடன்பர்க் அச்சுயந்திரத் தொழிற்சாலை நிறுவி, பல புத்தகங்களையும் வெளியிடலானார். இவர் கீழ் இருந்த பணியாட்கள் இவரை மோசம் செய்யவே, மறுபடியும் சொந்த ஊரையடைந்து வாழலானார். சொந்த ஊரில் பலரோடு சேர்ந்துகொண்டு கிறிஸ்துவ மத சம்பந்தமான நூல்களை வெளியிட்டு வந்தார். இதற்கிடையில் சொல்லொணா இடையூறுகளுக்காளானார்.

பிரான்சின் அப்போதைய மன்னனான பதினொன்றாம் லூயியின் ஆதரவில் இவர்கள் கொஞ்சகாலம் இருந்து வந்தார்கள். அப்போது இவர் மறுபடியும் அச்சுத்தொழிலை மேற்கொண்டார்.

நகரில் மறுபடியும் குழப்பமேற்பட்டது. கூடன் பார்க் தம்பதிகள் வழக்கம்போல் விரட்டப்பட்டனர். அந்நிய நாடுகளில் நாயினுங் கீழாக அலைந்து திரிந்தார்கள். இறுதியில் நாஸ்ஸோ என்னும் நாட்டின் தலைமகனால் ஆதரிக்கப்பட்டார்கள்.

அவனது ஆதரவில் அவர்களிருவரும் வாழ்ந்து வருகையில், கூடன் பர்க் தமது அறுபத்தொன்பதாம் வயதில் காலமானார்.

உழைத்து உழைத்து தன் சுயமுயற்சியால் வெற்றி காண முயன்ற கூடன்பர்க்கை அவர் வாழ்நாளில், அவர் திறமைக்காக யாரும் ஆதரிக்க முன்வரவில்லை. இருந்த போதிலும் தன்னம்பிக்கை அவரைக் கைவிடவில்லை.

இவர்காலமாகி சில ஆண்டுகளாவதற்குள் மேலைநாடுகளெங்கும் அச்சுத் தொழிற்சாலைகள் ஏற்படலாயின.

இன்று வெகுவேகமாக முன்னேறி, சிறப்பான கட்டத்தினை அடைந்திருக்கும் அச்சுத்தொழில், தனக்கு முதன் முதலில் அஸ்திவாரம் போட்ட ஜான் கூடன் பர்க்கை மறக்கமுடியுமா? ★

மகாகவி ஜான் மில்டன்

பி. ஜி, மங்கை

ஆங்கில மகாகவி ஜான் மில்டன் 1608-ம் வருடம் டிசம்பர் மாதம் 9-ம் தேதியில் லண்டன் நகரில் பிறந்தார். இவரது பிதா புராதன கிரந்தங்களில் நல்ல பாண்டித்யமும், சங்கீத ஞானத்தில் தேறின நுண்ணறிவும் உடையவர். ''தந்தை எவ்வழியோ மைந்தரவ் வழி'' என்பதாக மில்டன் தனது 15-வது வயதிலேயே கவிகள் இயற்ற ஆரம்பித்துவிட்டார். ஒரு சிறு குழந்தை இறந்து போனதின் பேரில், ''ஐயோ பூக்கு முன்னே பொறிந்து போன பூவே'' என்று ஒரு பாடல் இயற்றினார். பின் மழலைப் பாட்டுக்கள் பல பாடினார். லத்தின் பாஷையில் அவருக்கு அபார பிரேமை. அந்த பாஷையில் தீஞ்சுவை கனிய, இழுக்கு வழுக்கில்லாமல் செம்மொழியில் பல பாடல்கள் இயற்றியிருக்கிறார். 1627-ம் வருடத்தில் ஆங்கிலத்தில் ''விடுமுறை அப்பியாசம்'' என்ற பாடலை எழுதினார் மில்டன்.

1629-ம் வருடத்தில் மில்டன் உலக ரட்சகர் பிறந்த திருநாள் தேம்பாவணியாக ஜெனனச் சிந்து என்னும் செய்யுளைப் பாடினார். இந்த சிந்து ஆங்கில இலக்கியங்களில் இருக்கிற எல்லாச் சிந்துகளிலும் மகா சிரேஷ்டமானது என்று ஹாலன் என்ற வித்வானும், ஜான்சன் பண்டிதரும் எழுதியிருக்கிறார்கள். 1634-ம் வருடத்தில் 'காமன் கூத்து' என்ற கேளிக்கை நாடகத்தையும், 'இன்ப துன்பம்' இரண்டையும் எதிருக்கெதிராய் நிறுத்தி ஜோடித்து எழுதிய நூல்களையும் வெளியிட்டார்.

1638-ம் வருடம் பாரிஸ், நைஸ், ஜினேவா, என்னும் நகர்களின் வழியாகப் பிளாரன்ஸ் நகரத்துக்குப் போனார். சூரியன் பூமியைச் சுற்றி ஓடுகிறதென்று சாதித்ததற்காக சிறையில் வைக்கப்பட்ட பிரசித்தி பெற்ற கணித மேதையாகிய கலிலீயோ அவர்களை சிறைக்குச் சென்று பார்த்துப் பேசினார். அவரை சிறையிலடைத்த அக்கிரமத்தைக் கண்டு வருந்தினார். 1639-ம் வருடம் தமது ஊருக்குத் திரும்பிவந்தார்.

லண்டனில் ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து நடத்தி வந்தார். மில்டனுக்கு மனைவிகள் மூவர். முதல் மனைவி மேரிபவலுக்கும் அவருக்கும் அடிக்கடி சண்டை, சச்சரவுதான். நண்பர்கள் இருவருக்கும் பல விஷயங்களைக் கூறி சமாதானப்படுத்தி வைத்தார்கள். மூன்று பெண் குழந்தைகள் பிறந்தன. 1652-ல் மேரிபவல் இறந்துவிட்டாள். 1656-ல் கத்தரினாள் என்ற பெண்ணை காதலித்து, மணந்து கொண்டார். அடுத்த வருடத்திலேயே திடீரென்று மாரடைத்து அவளும் மாண்டு போனாள். 1664-ம் ஆண்டில் எலிசபெத்து என்ற மங்கையை மணந்து கொண்டார். மில்டனுக்கு இல்வாழ்க்கை சோதனையும், சஞ்சலமுமான வாழ்க்கையாகவே இருந்தது. 'அறிப்பகுதிகா' என்ற நூலை மில்டன் இயற்றினார். இந்த சமயத்தில் அவருடைய கண்ணொளி முற்றிலும் மங்கிவிட்டது. கண்ணொளி மறைந்த பின்பு பகலில் அவருடைய புத்திரிகளும் நண்பர்களும் அருகில் உட்கார்ந்து பூர்வ நூல்களையும் மூல வேதாகமத்தையும் வாசிக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்டிருப்பார். இரவிலே கடவுள் தியானத்திலிருந்து, புறக்கண் பஞ்சடைந்திருந்தாலும், அகக்கண் தெரிந்து விளங்க, மனோ திருஷ்டியால் மண்ணையும் விண்ணையும் ஊடுருவிப் பார்த்துக் கண்ணுள்ளோர் காட்சியைக் கடந்த மெய்க்கருப் பொருளைக் கண்டு செய்யுள் அடிகளைச்செய்து, திருத்தி மனதில் வைத்துக் கொண்டு, பொழுதுவிடிந்தவுடனே

தாம் சொல்லச் சொல்ல அவற்றை தமது புத்திரிகளைக் கொண்டு எழுதுவித்து மகிழ்ச்சியடைவார்.

'பூங்காவனப் பிரளயம்' என்னும் பெருங்காவியத்தை 1665-ம் வருடம் தொடங்கி 1666-ம் வருடம் முடித்து, 1667-ல் அச்சிட்டுப் பிரசுரம் செய்தார். இங்கிலீஷ் வேதாகமத்தையும், ஷேக்ஸ்பியருடைய நூல்களையும் தவிர, 'பூங்காவனப்' பிரளயத்துக்கு ஒப்பாக, பல கோடி பதிப்பு கண்டதும், பல்லாயிரம் பண்டிதர்களுடைய வியாக்கியானம் கொண்டதும், எல்லா பாஷைகளிலும் மொழி பெயர்ப்பு உண்டானதுமான நூல்கள் வேறில்லை என்றே கூறலாம். 1865-ல் லத்தீன் பாஷையிலும் அதன்பின் பிரெஞ்சு, இத்தாலிய, டச்சு, ஜெர்மன், ஸ்பானிஷ், போர்த்துகிஸ், ருஷிய பாஷைகளிலும் பூங்காவனப் பிரளயம் பிரசுரமாயிருக்கிறது. தமிழிலும் ''ஆதி நந்தவனப் பிரளயம்'' என்னும் பெயரால் இக்காவியத்தின் பொருளை வேதக் கண்ணு என்பவரும், 'பரதீச உத்தியான நாசம்' என்னும் பெயரால் மற்றொருவரும் இயற்றியிருக்கிறார்கள். இத்தமிழ் நூல்கள் இப்பொழுது கிடைக்கவில்லை.

மில்டன் தாம் செய்த 'பூங்காவனப் பிரளயம்' என்ற நூலின் முதல் இரண்டு காண்டங்களிலும் பாதாள இருளுக்குள் இறங்கி, அதை விவரித்த பின், மூன்றாவது காண்டத்தில் பரலோக ஒளிக்கு ஏறி அதை விவரிக்கத் தொடங்குகையில், தமது கண்ணொளி மங்கினதைக் குறிப்பிட்டு, கல்லும் உருகத்தக்க குரலோடு அங்கலாய்த்து, தமது ஊனக் கண் ஒளி மழுங்கினாலும் ஞானக் கண் மிகத் தெளிந்து காணாத காட்சிகளைக் கண்டறிந்து விவரிக்கும்படி அருள் தேடிப் பரஞ்சோதியை நோக்கிப் பிரார்த்திக்கின்றார்.

''உயிரளிக்கும் உன்னொளியை
உணர்ந்து நான் தேடி வந்தேன்
தேடி நான் அடைய வந்தேன்
தேடாய் நீ எனது கண்ணே;
இமைத்திமைத்துச் சிமிழ்த்தாலும்
எவ்வொளியும் காணாமல்
பாழிலே உழலுகின்ற பாவிகண்
அவிழ்ந்து ஐயோ! ஐயோ!
விடியாத இருள்மூட விதியேயோ.
விதியேயோ!

பரஞ்சோதி என்னெஞ்சில்
புகல்போல நீ உதித்து
மனக் கண்ணின் தத்துவங்கள்
மருள் நீங்கத் தெளிவித்து
மானிடரின் கண்ணுக்கு
மறைவான இரகசியத்தை
கண்ணுள்ளோர் காட்சியைக்
கடந்த மெய்க்கருப் பொருளை
கண்டு நான் விரித்துரைக்கக்
காட்டி தாராய் உன் சரணம்!''

மில்டன் 1674-ம் வருடம் நவம்பர் மாதம் 8-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை யன்று பரமபதமடைந்தார். அவருடைய சரீரம் ஜைல்ஸ் தேவாலயத்தில் புதைக்கப்பட்டது. 1737-ம் ஆண்டில் வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயத்தில் மில்டனுடைய உருவச்சிலையும், ஞாபகார்த்தமாக வைக்கப்பட்டது. மில்டனுடைய நண்பராகிய அறிஞர் மெக்காலே கூறுகிறபடி மில்டனுடைய பெயரைக் கேட்டாலும் செவிக்கின்பம். கண்டாலும் கண்ணுக்கு இன்பம். அவருடைய கருத்துகள் கற்பகச் சோலையிலிருந்து இறங்கி வந்த அமிர்த புஷ்பங்களையும், அமிர்தக் கனிகளையும் போல மனதுக்கு ரஞ்சிதமாயிருக்கின்றன.

கவிஞர் மில்டனுடைய நிர்மலமான மனக் கருத்தை விவரிக்கும் பாட்டைப் பாருங்கள்.

போதாத காலம் வந்து
பொல்லாத நாறல் வாயர்
என்ன பேச்சு என்ன ஏச்சு
எத்தனையாய் என்னை யேசி
அந்தகாரம் எனை வளைந்து
ஆபத்துக்கள் எனைச் சூழ்ந்து
ஆருமற்ற பாவியாக
அடியேன் கிடந்தாலும்
எப்போதும் என் தாயே!
என் கவியை நீ நடத்தி
என் கவியை சற்சனர்கள்
இதமாகப் படிப்பதற்கு
சொற்பமாகப் படித்தாலும்
சற்புருஷர் படிக்க வைப்பாயே! ★

இந்திய நினைவுகள்

அயல் நாட்டிலிருந்து மார்க்கோ போலோ, ஹுவன் ஸுவாங், பாகியான் போன்ற எவ்வளவோ பேர்கள் பாரத நாட்டிற்கு வந்து, தாங்கள் கண்ட அதன் அருமை பெருமைகளை எழுதிவைத்திருக்கின்றனர். அத்தகையவர்கள் ஜாபிதாவில் சேர்க்கப்பட வேண்டியவர் பிரபல ரஷ்ய எழுத்தாளரான இலியா எஹ்ரென்பர்க் என்பவர். இவர் இந்தியா குறித்து எழுதியுள்ள இக்கட்டுரை யாவரும் அவசியம் படிக்கவேண்டியதாகும்.

இலியா எஹ்ரென்பர்க்

அறிமுகம்

இலியா எஹ்ரென்பர்க் சோவியத் நாட்டு எழுத்தாளர்களின் பழைய தலைமுறையைச் சேர்ந்தவர். ரஷ்யப் புரட்சிக்கு முன்னரே இவர் இலக்கிய உலகில் இடம்பெற ஆரம்பித்து விட்டார். இவர் ஆரம்பத்தில் கவிதைகள் எழுதுவதிலேயே ஈடுபட்டிருந்தவர். எதையும் கண்ணால் கண்டு ரசித்து ஆனந்தித்து பின்பு, அதைப் பற்றி எழுதவேண்டும் என்ற ஆர்வம்படைத்தவர். 'நம்முடைய தினசரி உணவு' என்று அவர் எழுதிய புஸ்தகம் மிக மிகப் பிரபலமடைந்தது. 'பாரிஸின் வீழ்ச்சி' என்ற இவர் புஸ்தகம் 12 பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டது.

இவருக்கு இப்போது 65 வயதாகிறது. இன்னும் புதுப் புது நாவல்கள், கதைகள் சிருஷ்டிப்பதிலேயே ஊக்கம் காட்டி வருகிறார். உலக சமாதானத்திற்கான ஸ்டாலின் சமாதானப் பரிசைப்பெற்றவர் இவர்.

இந்தியாவைப்பற்றி அயல் நாட்டினர் சிலர் பல தவறான கருத்துகளைக் கொண்டிருந்தனர். மிஸ் மேயோ போன்றவர்களை இதில் சேர்க்கலாம். இம்மாதிரி தவறான போக்கை எடுத்துக் காட்டி, உண்மையான இந்தியாவை தான் கண்டது கண்டபடி இங்கு வருணிக்க முயன்றிருக்கிறார், இந்த பிரபல ரஷ்ய எழுத்தாளர் எஹ்ரன் பர்க். மேலைய வட்டாரத்தினர் இந்தியாவின் புது நிலையையும் செல்வாக்கையும் இன்னமும் பூரணமாக உணர்ந்தபாடில்லை என்கிறார் இவர். இது முற்றிலும் உண்மையே!



தில்லிமாநகரின் அற்புத ஸ்தூபி

உருக்கில் வார்க்கப் பெற்ற அற்புத ஸ்தூபி ஒன்றை, தில்லி நகரிலே கண்டேன். ஐந்தாவது நூற்றாண்டிலே நிறுவப் பெற்றது இது. பல நூறு ஆண்டுகளாக மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்தும் துருப்பிடிக்காமல் நிற்கும் ஸ்தூபி இது. உண்மையில் நான் பிரமித்துப் போனேன். பண்டைக் காலத்திலேயே இந்தியர்கள் உலோகத்தொழிலில் இவ்வளவு பரிபூரண ஞானம் பெற்றிருந்தார்கள் என்பது இதற்குமுன் எனக்குத் தெரியாது. இந்தியாவைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது என்பது அப்பொழுதுதான் எனக்கு விளங்கியது. ஆறு ஆண்டுகளுக்கு முன் நான் சீனாவுக்குச் சென்றிருந்தேன். நமது பள்ளிகளிலே நாம் அறிந்து கொண்டது எவ்வளவு அற்பசொற்பம் என்பதை அங்கு கண்டேன். இந்தியாவிலே மீண்டும் எனது அஞ்ஞானம் தெளிவாகத் தெரிந்தது.

இன்ப துன்பங்களைக் கருதாமல் ஐம்புலன்களையும் அடக்கி, அறவாழ்க்கை நடத்த வேண்டுமென்ற ஸ்டாயிக்குகள் பற்றியும் வாழ்வின் இன்பத்தை வலியுறுத்தி அறநெறியை போதித்த எப்பிக்கூரியர்கள் பற்றியும் நாம் பள்ளியிலே நிறையப் படித்திருக்கிறோம். ஜூயஸ் என்ற கிரேக்க தேவனின் எண்ணற்ற புதல்வர், புதல்வியர்களைப்பற்றியும் அவர்களுக்கிடையே எழுந்த சச்சரவுகளைப் பற்றியும் படித்திருக்கிறோம். கிரேக்க இதிகாசமான இலியத்தின் மொழிபெயர்ப்பைப் படித்திருக்கிறோம். ரஷ்ய மொழிபெயர்ப்பின் உதவியுடன் ஹோரேஸின் கிரேக்க நூல்களை படித்திருக்கிறோம். அழகு நுகர்ச்சியில் கிரேக்கர்கள் பெற்றிருந்த சிறப்பையும் நீதி பரிபாலனத்தில் ரோமானியரது சாதனையையும் நாம் அறிந்திருந்தோம். நாவல்களும், சிறந்த கவிதைகளும் படிக்கும்போது அபோலோ அழகுத்தெய்வம் ஆப்ரோடைட், கிரேக்க சொற்புரட்டுவாதம், லத்தீன் பொன்மொழிப் பாசுரங்கள் இவை யாவும் நமது கவனத்தைக் கவர்ந்து வந்துள்ளன. மிலோவின் வீனஸ் சிலையைப்பற்றி கேள்விப் படாதவர்கள் இல்லை. குற்றம் காணமுடியாத இதன் எழிலுருவைக் கண்டு உளமுருகி, கண்ணீர் உகுத்தனர். ஹீனும், கிளெப் உஸ்பென்ஸ்கியும் இலக்கியப் பேரவையில் புஷ்கின் கிரேக்க அப்பூலியஸைப் பாராட்டிப் பேசியதை நாம் அறிவோம். காதல் கணைகளால் தாக்குண்டபோது அவர் சைப்ரிய அப்ரோடைப்பற்றி குறிப்பிட்டதையும் நாம் அறிவோம். சாதயெவ்வை அவர் பெருக்ளிஸுடன் ஒப்பிட்டதும் நமக்குத் தெரியும். ஆர்க்கமிடிஸ், ''யுரேகா'' என்று கூவிக்கொண்டு ஓடிய கதையையும் படித்திருக்கிறோம். கணித விஞ்ஞானம் இவ்வகையில்தான் உதயமாயிற்று என்று நமக்கு போதிக்கப்பட்டது.

சம்ஸ்கிருத காவியங்களின் ரஷ்ய மொழி பெயர்ப்பு

கிரேக்கர்களையும் ரோமானியர்களையும் பற்றி இவ்விதம் நாம் தெரிந்து கொண்டிருப்பதில் தவறேதும் இல்லை. அறிவு வளருவதால் யாருக்கும் தீங்கு ஏற்பட்டுவிடுவதில்லை. கிரேக்க கலாச்சாரம் பற்றிய அறிவு, நமது கலை ரசனையின் தரத்தை உயர்த்தியதுடன், மனித முன்னேற்றத்திற்கான மகோன்னத குறிக்கோள் பற்றிய உணர்வையும் கூர்மை அடையச் செய்தது. நமது நாகரீகத்தின் வம்சாவளி வரலாறு பூர்த்தி செய்யப்படாததாக இருக்கிறது. எனவே அது தவறான வரலாறு. இந்தத் தவறான வரலாறு நமக்குப் பாடமாகப் போதிக்கப்பட்டு வந்துள்ளது என்பதில்தான் தவறெல்லாம் அடங்கியுள்ளது. கிரேக்க நாடு அன்றி, மற்றும் சில நாடுகளும்கூட, நமது கலாச்சாரத்தின் தோற்றுவாயாக விளங்கி வந்துள்ளது என்பது நமக்கு போதிக்கப்பட்டதே இல்லை. கன்பூஷியஸைப் பற்றியும் புத்தரைப் பற்றியும் இந்திய வேதங்களைப் பற்றியும் நமது பள்ளிக்கூடங்களிலே யாரும், எந்த சந்தர்ப்பத்திலும், நமக்கு ஒன்றும் சொல்லிக் கொடுத்ததில்லை. லீ போ அல்லது தூ பூ இயற்றிய கவிதைகள் எவையும் நமது பள்ளிக்கூடத்தின் பாடப் புத்தகங்களில்இடம் பெற்றதில்லை. தொன்மைசால் இந்திய சிற்பக் கலையைப்பற்றி நமக்கு ஏதாவது தெரியுமா? திசைகாட்டும் கருவியையும் அச்சடிப்பதையும் முதலில் கண்டுபிடித்துக் கையாண்டவர்கள் யார் என்பதாவது நமக்குக் கூறப்பட்டுள்ளதா? இவை எதுவும் நமக்குத் தெரியாது!

கூடன் பெர்க்கைப் பாற்றிதான் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அறிவுக்கூர்மையுடைய இந்த ஜெர்மானியர்தான் அச்சடிப்பதை முதலில் கண்டுபிடித்தவர் என்று நாம் எண்ணிவந்துள்ளோம். ''அதிசயத்திலும் அதிசயம்'' என்று இதைப் பாராட்டினார்கள் மக்கள். இதே அதிசயத்தை கூடன்பெர்க் பிறப்பதற்கு 800 ஆண்டுகளுக்கு முன்பே சீனர்கள் சாதித்திருக்கிறார்கள் என்பதை நமது பள்ளி ஆசிரியர் எவரும் பகர்ந்ததில்லை. இத்தாலிய விஞ்ஞானி கலிலியோ தோன்றுவதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் ஆரியபட்டர் என்ற இந்தியர், உலகம் உருண்டை வடிவமுடையது என்றும் அது தன்னைத்தானே சுற்றிவருகிறது என்றும் நிரூபித்துக்காட்டினார். இந்த வரலாற்று உண்மையையும் நாம் அறிந்ததில்லை. பெலின்ஸ்கி எழுதினார்: ''ராமாயணம், மகாபாரதம் இவற்றின் உள்ளடக்கத்தைப் பிட்டுப் பிட்டு உங்கள் முன்பு வைக்கப் போகிறேன் என்றோ, ''சாகுந்தலத்''தின் எல்லையிலா எழிலை அள்ளி அள்ளி வழங்கப் போகிறேன் என்றோ நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா? புனித வேத நூல்களைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. இதை நான் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இந்திய கவிதைகள், நாடகங்கள் பற்றிச் சொல்வதென்றாலும் நிலைமை அதுவேதான். இவற்றின் மொழிபெயர்ப்புகளைக்கூட நான் கண்ணுற்றதில்லை''—இவ்வாறு பெலின்ஸ்கி எழுதிய ஓராண்டுக்குப் பின், அன்னாரின் உதவியுடன் ''மகாபாரதத்''தின் ஒருபகுதி சமஸ்கிருதத்திலிருந்து ரஷ்ய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. அதை அடுத்து சிறிது காலத்திற்குள் ''சாகுந்தலம்'' வெளியிடப்பட்டது. நள, தமயந்தியின் காதற் காவியத்தை முதலில் ரஷ்ய மொழியில் பெயர்த்தவர் ஜுக்கோவ்ஸ்கி. காளிதாஸனுடைய நாடகத்தின் சில பகுதிகளை கராம்ஜின் மொழிபெயர்த்திருந்தார். மாஸ்கோ காமர்னிம் நாடக மன்றம் ''சாகுந்தலம்'' நாடகத்துடன்தான், அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. ஆயினும் உலக இலக்கியப் பயிற்சிக்கான எந்தவொரு பாடத் திட்டத்திலும் மேற்கூறிய அமர நூல்களில் எவையும் சேர்க்கப்பட்டதில்லை. மனிதவர்க்க வரலாறு குறுகிய விட்டத்திற்குள் அடைபட்டுக்கிடந்து வந்துள்ளது. இவ்வாறு கட்டுண்டி



வங்கக் கவி தாகூர்

ருந்த வரலாறே நமக்கு வழங்கப் பட்டு வந்துள்ளது.

கிழக்கும் மேற்கும்

''கிழக்கு கிழக்குதான். மேற்கு மேற்குதான். இவை இரண்டும் ஒரு போதும் சேராது. ஒரு போதும் ஒட்டாது'' இவ்வாறுதான் கிப்ளிங்கின் கவிதை ஒன்று ஆரம்பமாகிறது. ஆசியாவின் நாகரிகத்திற்கு எதிரிடையாகத் தமது நாகரிகத்தை மோதவிட்ட ஐரோப்பியர்கள் பலருக்கும் கிப்ளிங் கவிதையே கிளிப்பாடமாக இருந்தது. இந்த விபரீதத்திற்குப் பெரும்பாலும் காரணம், நான் மேலே குறிப்பிட்டுக் காட்டிய அறியாமையாகத்தான் இருக்க வேண்டும் என்று கொள்ளமுடியும்.

''மேலைய கலாச்சார''த்தைப் பாதுகாத்திடப் போராடுவது என்ற இந்த வீரப்பேச்சு, சில அரசியல்வாதிகளைப் பொறுத்தமட்டில், ஒரு வஞ்சக மூடுதிரையே. இலாப வேட்டைக் குறிக்கோளை மறைப்பதற்கான தந்திரமாகவே அவர்கள் இதைக் கையாளுகிறார்கள். ''மேற்கத்திய'' கலாச்சாரமாயினும் சரி, ''கிழக்கிந்திய'' கலாச்சாரமாயினும் சரி, அவர்களுக்கும் கலாச்சாரத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இப்படிப்பட்டவர்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் மனித வர்க்கத்தின் கலாச்சாரம் பூராவுமே கிரீஸிலிருந்துதான் பிறந்தது என்றும், ரோமானியப் படை வீரர்களினால்தான் இது ஐரோப்பாவிற்கு வரப்பிரசாதமாக வழங்கப்பட்டது என்றும் உண்மையாகவே நம்பிக்கொண்டிருக்கும் நேர்மையாளர்களான பிரெஞ்சு டாக்டர்களையும், ஆங்கில வழக்கறிஞர்களையும் நாம் அடிக்கடி சந்திக்கிறோம். கல்லூரிகளிலும் பேரவைகளிலும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்ட பாடம் அதுதான். அதையே அவர்கள் தமது வாழ்நாள் முழுதும் உண்மையென நம்பி வந்துள்ளனர்.

பஞ்சதந்திரக் கதைகள்

இந்தியாவிலே கிறிஸ்தவ சகாப்தத்தின் தொடக்கத்திலே, ''பஞ்சதந்திரம்'' என்ற கதைகள் தோன்றின. மடமை, பேராசை, பொறாமை. மற்றும் பல தீய குணங்களை இவை நையாண்டி செய்து தாக்குகின்றன. பண்டைய நீதிக் கதைகளை வழங்கிய இந்திய அறிஞர்கள் மதியில்லா கொடுங்கோல் மன்னர்களுக்கோ, பிடுங்கித் தின்னும் பிராமணனுக்கோ சூடு கொடுக்க அஞ்சியதில்லை. இந்த நீதிக் கதைகளைப்பற்றிய பிற்கால வரலாறு ருசிகரமானது. ஐந்து அல்லது ஆறு நூற்றாண்டுகளுக்குப் பிறகு இவை அரபுமொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. பிறகு அரபு மொழியிலிருந்து லத்தீன், கிரீக் மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன இறுதியாக இவை ஐரோப்பாவில் பரவலாயின. புராதன கிரீஸ் நாட்டில் இந்திய பஞ்சதந்திரக் கதைகள் ''ஸ்டெபனிட்டும் இச்னிலாட்டும்'' என்ற பெயரில் உலாவி வந்தன.

"கூண்டெலி மங்கை" என்ற பஞ்சதந்திரக் கதையை அப்படியே எடுத்துக் கையாண்டு அதை ஒரு கவிதையாகப் புனைந்தார். 12-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரெஞ்சு நாட்டுக்கவிஞர் மரி-தெ-பிரான்ஸ். ஆனால் இந்த அம்மையாருக்குத் தெரியாது, அது இந்தியக் கதை என்பது. பராபானியக் கதை என்றே அவர் பூரணமாக நம்பிக் கொண்டிருந்தார். அதேசமயத்தில் நன்னெறி போதிக்கும் இந்த ருசிகரமான கதைகள், டமஸ்கஸைச் சேர்ந்த செயின்ட் ஜானினால் கிரேக்க மொழியில் இயற்றப்பட்டவை என்று ரஷ்யர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்! டிலா போன்தேன், ஈசாப்பிற்குக் கடமைப்பட்டிருப்பதாகக் கருதினார். ஆனால் பஞ்சதந்திரக் கதைகளைப்பற்றி அவருக்குத் தெரியாது.

இரண்டாவது நூற்றாண்டில் சீனர்கள் கண்டுபிடித்த பாபிரஸ் காகிதமும், பண்டைய இந்தியக் கவிஞர்கள் உபயோகித்துவந்த ஓலைச் சுவடிகளும் இலகுவில் அழிந்துவிடக் கூடியவையே. தற்செயலாக அழியாமல் நமது கைக்குக் கிட்டிய ஒரு சில ஆதாரங்களிலிருந்தே பண்டைக்கால கிரேக்க, இந்திய, சீன இலக்கியங்களைப்பற்றி நாம் தெரிந்து வைத்திருக்கிறோம். சிற்பங்கள் செதுக்குவதற்கு உபயோகிக்கப்படும் பாறைகள், இலக்கியத்திற்கான ஓலைச் சுவடிகளைப்போல், இலகுவில் அழியக்கூடியவை அல்ல. கருங்கல் பாறைகூட காலத்தின் தாக்குதலால் பலநூறு ஆண்டுகளுக்குப் பிறகு அழிந்து விடுகின்றன. ஆயினும் இன்றுவரை அற்புதச் சிறப்புடைய சின்னங்கள் பல, அழியாது இருந்து வருகின்றன. இவற்றைப் படைத்த சிற்பிகளின் மகோன்னத கைவன்மையையும், அதிலிருந்து அவர்கள் வாழ்ந்த காலத்தைப்பற்றியும் நாம் ஓரளவு தெரிந்துகொள்வதற்கு இவை உதவுகின்றன. சமோத்ரேஸின் வெற்றிச் சின்னம் மேலானதா, அல்லது மத்ராவில் கண்டெடுக்கப் பெற்ற சாவைவென்ற பௌத்தபிரானின் சிலை மேலானதா? இவ்வாறு வாதப் பிரதிவாதம் செய்வது அர்த்தமற்றது. தேசிய சிறப்பியல்புகள் கலையின் பிரிக்கமுடியாததோர் பகுதியாகும். பண்டைய இந்திய, கிரேக்க சிற்பங்களில் அந்தந்த நாட்டிற்கே உரிய தனிச்சிறப்புகள் இருப்பதைக் காணலாம். ஆனால் மாண்புமிக்க கலை எனப்படும் ஒவ்வொன்றும் சொந்த நாட்டின் எல்லைகளைத் தாண்டிக்கொண்டு, உலகின் எல்லாப் பகுதிகளிலுமுள்ளவர்களுக்கும் புரியக் கூடியதாகவும் இன்பமளிப்பதாகவும் உயர்ந்துவிடுகிறது. இதுவே அதற்கு மாண்பை அளிக்கிறது.

ஏதன்ஸ் நகருக்கு விஜயம் செய்த இந்திய வர்த்தகர்கள் அந்நகரின் நாடக அரங்கத்தைக் கண்டு பெரிதும் வியந்தனர்- இந்தியாவின்மீது படையெடுத்த மகா அலக்ஸாந்தரின் சிப்பாய்கள் அந்நாட்டின் கலையைக்கண்டு பெரிதும் போற்றினர். எலியூஸிஸ் கோவிலிலுள்ள உருவச் சிலைகளின் கலை அழகை ரசிக்க வேண்டுமானால், இவற்றைப் படைத்த சிற்பிகளை ஊக்குவித்ததாகச் சொல்லப்படும் அற்புத சக்திகள்பற்றிய கதையை நம்பித்தான் ஆகவேண்டும் என்பதில்லை. பிரோசர்பைன் பாதாள உலகிலிருந்து திரும்பியதுபற்றிய சித்திரம், உலகின் வசந்த பருவ மறுமலர்சியை இனிய கவிதையின் கற்பனைச் செழுமையுடன் எடுத்துரைப்பதாக இருக்கிறது. இருபது ஆண்டுகளுக்குமுன், நான் ஒருமுறை எலியூஸிஸ்ஸிற்கு விஜயம் செய்திருந்தேன், அங்கு நான் சிரஸ் தெய்வத்தைத் தொழுதெழவில்லை; கலையின் மாண்புக்கே வணக்கம் செலுத்தினேன்- எழிலின் பெருமைக்கே தலைவணங்கினேன். இந்தியாவிலுள்ள, அஜாந்தா, எல்லோரா குகைகளை தரிசித்தபோதும், இதேமுறையில் தான் பரவசமடைந்தேன். நவநீத கிருஷ்ணனின் நெஞ்சை அள்ளும் அழகையும் போதி மரத்தடியில் அமர்ந்துள்ள சித்தார்த்தனின் தவக்கோலத்தையும் கலைக்கண் கொண்டு ரசிப்பதற்கு பௌத்தனாகவோ, பிராமணனாகவோ, இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

அயல் நாட்டினரைக் கவர்ந்த கலை

அன்னிபெஸன்ட்

பண்டைய கிரேக்க நாட்டையும் பண்டைய இந்தியாவையும் அல்லது சீனத்தையும் எதிரும் புதிருமாக வைத்து பார்ப்பது அர்த்தமற்றது. இவற்றிற்கு இடையிலுள்ள ஒருமைப் பாட்டைப்பற்றி சிந்திப்பதே விவேகம். கிறிஸ்தவ சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளிலே, வடமேற்கு இந்தியாவில் ''கிரேக்க-பௌத்த கலை'' வளர்ந்தோங்கியது. இதைக் குறிப்பிடாத கலை வரலாறு நூலையே காண முடியாது. இதிலிருந்து முடிவு கட்டிவிடாமல், மேலும் ஆழமாக ஆராய்ந்து பார்ப்பது அவசியம். எழில்மிகு மத்ரா சிற்பங்களையும், 'இந்தியாவின் பொற்காலம்' என்று கூறப்படும் குப்த சகாப்தத்தின் சின்னங்களையும் பார்க்கும்போது, இவையாவும் கிரேக்க நாட்டுக்கலையின் மிகச் சிறந்த படைப்புகளை நினைவூட்டுகின்றன. இவ்விரண்டிற்குமிடையில் ஒருமைப் பாட்டைக் காண முடிகிறது. அந்த நாட்களிலே இந்தியர்கள் பலர் கிரேக்க நாட்டிற்கும் கிரேக்கர்கள் பலர் இந்திய நாட்டிற்கு பயணம் செய்திருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்தியர்களின் கலையில் கிரேக்க நாட்டின் செல்வாக்கு படிந்திருப்பதாகப் பேசுவதைவிட, இவ்விரு நாடுகளுமே ஒன்றன்மீது ஒன்று பரஸ்பரம் தத்தம் முத்திரையைப் பதித்து, ஒட்டுறவுடன் விளங்குகின்றன என்று கூறுவதுதான் நியாயம். கி. மு. 5-ம் நூற்றாண்டில், அதாவது கிரேக்க கலாச்சாரம் உச்ச கட்டத்தில் இருந்த காலத்தில் வாழ்ந்துவந்த கிரேக்க வைத்தியரும் சரித்திர ஆசிரியருமான தெஸியாஸ் என்பவர் இந்திய கலாச்சாரத்தைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்து எழுதியிருக்கிறார். வெகு நாட்களுக்கு முன்பு நான் இதைப் படித்திருக்கிறேன். பண்டைய இந்தியாவின் தத்துவ விசாரம் பிளாட்டோ, பித்தாகரஸ், ஸாக்ரடீஸ் ஆகியோரது சிந்தையையும் கவர்ந்தது என்பதை நாம் அறிவோம். அந்நாட்களிலே எண்ணிலடங்காத தெய்வங்கள் ஆட்சி புரிந்தபோதிலும், விமானங்களும் விமானப்பணி மங்கையரும் இல்லாதிருந்த போதிலும், கலாச்சாரக் கண்ணோட்டத்துடன் பார்க்கும்போது, நமது கல்லூரி ஆசிரியர்களும் பேரவை அறிஞர்களும் கருதுவதற்கு நேர்மாறாக, பண்டைய உலகம் ஒருமித்ததோர் கட்டுக்கோப்பாகவே இருந்தது என்பதில் ஐயமில்லை.

பண்டைய இந்தியாவிற்கும் சீனத்திற்கும் இடையில் மும்முரமான வர்த்தகம் நடைபெற்றதுண்டு என்பதை நாம் அறிவோம். மாமலைகளையும் திரை கடல்களையும் தாண்டிக் கொண்டு, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியான பொருள்கள், பட்டும், சாயமும் மாத்திரமல்ல; தத்துவார்த்தக் கருத்துக்கள், அறநெறி இலட்சியங்கள், கலையின்பக் கருவூலங்கள்—இவையும்கூட ஒரு நாட்டிலிருந்து பிறிதொரு நாட்டிற்கு ஊடுருவின எனலாம். சீனாவிலே, மிகவும் அற்புதமான புராதன சிற்பம் ஒன்று இன்னமும் இருந்து வருகிறது. சூ-யுங்-குவான் சிலை எனப்படும் இது இந்திய, கிரேக்க

கலைகளுடன் ஒட்டுறவுடையதாக அமைந்திருக்கிறது. இந்த ஒட்டுறவு ஒருதலைப்பட்சமானதல்ல. மிகவும் உயர்ந்த கலைப்படைப்புகளுக்குரிய அந்த எளிய முறையில், உலகையும் மனிதனையும் சித்தரிப்பதற்கு கலைஞர்கள் யாவரும் மேற்கொள்ளும் பொது முயற்சியின் விளைவே இது. பல்வேறு தேசங்களும் அவையவற்றின் ஆன்மீக சக்திகளைக் கொண்டு ஒன்றை ஒன்று செழுமைப் படுத்தின.

இந்தக் கருத்துக் கோவையை, சிந்தனை நாடாவை நீட்டிக் கொண்டே போனால், நம்முன் மற்றொரு உதாரணம் தென்படுகிறது. அமெரிக்காவின் வரலாற்று நூல்கள் யாவுமே, ஜனசஞ்சாரமில்லாத ''புதிய உல''கின் கடற்கரைகளில் நிறுத்தப் பட்டுள்ள ஸ்பானிஷ் கப்பல்களைப் பற்றிய வர்ணனையுடன் தான் ஆரம்பமாகின்றன. ஆனால் அமெரிக்காக் கண்டம் கண்டுபிடிக்கப் பட்டதற்குப் பிறகு உருவான அழகிய சிற்பங்களைக் காணவேண்டும் என்ற ஆவலுடன் அமெரிக்காவின் அருமையான பொருட்காட்சி சாலைகளிலே அலைந்தால், நாம் ஏமாற்றமே அடைகிறோம். அஜ்டெக்குகள், மாயா மக்கள், இதர பூர்வீகக் குடிகளின் எழில் மிகு சிற்பங்களையே அங்கு நாம் காண்கிறோம். அமெரிக்காவிற்குப் 'புதிய உலகம்' என்று தவறாகப் பெயரிடப் பட்டிருந்தபோதிலும், இப்பூர்விகக் குடிகள்தாம் அதன் வளமான கலாச்சாரத்தின் படைப்பாளர்கள். ஒரு சில ஆண்டுகளுக்குமுன், மெக்ஸிகோவின் புராதனக் கலைப்பொருள் கண்காட்சி ஒன்றைக் கண்டேன் அங்கிருந்த ஒரு சிற்பம், இந்திய, சீன, கிரேக்க சிற்பக் கலைகளுடன் ஒட்டுறவுடையதாக இருந்தது. இதைக் கண்டு நான் ஆச்சர்யப் பட்டேன்.

பல்வேறு நாடுகளின் பண்டைக் கலைகள் யாவற்றிற்கும் ஒருபொது அடிப்படை இருந்தது என்பதை நிரூபிக்க முற்படுவது அர்த்தமற்றதாகத் தோன்றலாம்.



ஸாக்ரடீஸ்

எல்லோரா குகையிலுள்ள நடனமாடும் சிவனும் கிரேக்க டியோனிசுஸ்சும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன என்று கேட்கலாம், உண்மையில் இது அர்த்தமற்ற சர்ச்சை அல்ல. மனித கலாச்சாரத்தின் வம்சாவளி வரலாறு தவறாகக் குறிக்கப்பட்டிருக்கிறது என்பது மென்மேலும் தெளிவாகி வருகிறது. அனுபவமில்லாத ஆசிரியர்களால் எழுதப் பெற்ற இந்த வரலாற்றிலே, அனுபவம் மிகுந்த சரித்திரப் புரட்டர்களின் முத்திரையைக் காணலாம். புராதன நாகரீகத்தின் பிறப்பிடம் பண்டை கிரேக்க நாடான பெலோபெனிசும், அதை அடுத்த சில நாடுகளும் மாத்திரமல்ல. இதில் இந்தியாவிற்கும் சீனத்திற்கும் இடமுண்டு.

தொன்நெடுங்கால ரஷ்யாவின் பீங்கான் பண்டங்களைக் கவனித்தால், ரோமானியர்களின் சாயலையும், வண்ணக் கலையில் பூரணத்துவம் பெற்றிருந்த கிழக்குலகின் சாயலையும் அவற்றிலே காணலாம். உண்மையை நிலைநாட்டி, பல்வேறு மக்களின் அறிவையும் பண்பையும் தன்னகத்தே கொண்டு வளர்ந்ததுதான் பண்டைய கலாச்சாரம் என்பதை ஏற்றுக் கொள்

வோமானால், ரஷ்ய கலாச்சாரத்தின் தோற்றுவாய்கள் ஆசிய நாடுகளுடன் ஒட்டுறவுடைய பொதுவான அடிப்படையைக் கொண்டவையாகும் என்பது தெளிவாகும். ஸ்லாவ் மறுமலர்ச்சிக்குப்பணியாற்றிய மேதைகளைப் போலவும், ஒச்ரிடா, தெற்கு செர்பியா, பயானா— இவற்றின் ஓவிய மேதைகளைப் போலவும், ஆந்திரே ரூப்லியோவும், கிரேக்கக் கலைகளை நன்கு அறிந்திருந்தார் என்று நிச்சயம் கூற முடியும். ஒரு மேஜையைச் சுற்றி மூன்று வாலிபர்கள் அமர்ந்திருப்பதைச் சித்தரிக்கும் ஓவியம் ஒன்றை இந்த மாபெரும் ரஷ்யக் கலைஞர் தீட்டியிருக்கிறார். பொருளடக்கத்தில் வேறு பட்டிருந்த போதிலும், அஜந்தா சுவர் சித்திரங்களுக்கும் இதற்கும் ஒருமைப்பாடுகள் உள்ளன. இதைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டேன்.

நாகரீகத்தின் பிறப்பிடம்

நெடுந்தூரத்துக்கப்பால் பல்வேறு இடங்களில் தோன்றி, இடை இடையே உபநதிகளால் செழுமையுற்று, பெருக்கெடுத்து ஓடி, பல கிளைகளாகப் பிரிந்து, கடலில் கலப்பவையே பெரு நதிகள். இத்தகைய நதிகளுக்கு ஒப்பானது உலக கலாச்சாரம். கிரேக்க நாடு உலக நாகரிகத்திற்கு ஒரு பிறப்பிடம் என்பது உண்மைதான். இதே போல் இந்தியாவும் சீனாவும் உலக நாகரீகத்தின் பிறப்பிடங்கள் என்பதையும் நாம் மறக்கக் கூடாது. இதை நாம் உணர்ந்தால், நமது பள்ளிகளின் பாடத் திட்டம் வளமுறும் என்பது மட்டுமல்ல. நிறத் திமிரையும், காலனி ஆதிக்க அமைப்பையும் தகர்ப்பதற்கும் இது உதவியாக விளங்கும். மேலும் மனித கலாசாரத்தை தனித்தனி பூகோள மண்டலங்களாகப் பிரிக்க முயலுவது எவ்வளவு மடைமை என்பதும் இதனால் அம்பலமாகும்.

இந்தியாவைப் போல் பெரும் அநீதிக்கு உட்படுத்தப்பட்டு அல்லலுற்ற நாடு வேறெதுவுமே இல்லை என்று சொல்லலாம். இரு நூறு ஆண்டுகள் வரை அந்நாட்டைச் சுரண்டிக் கொழுத்தார்கள் ஆங்கிலேயர்கள். அதன் செல்வமெல்லாம் கொள்ளைகொண்டு வாழ்ந்தார்கள். ஆயினும் அந்நாட்டை வறுமையும் தொத்து நோய்களும் மலிந்த துர்நாற்றம் வீசும் நாடு என்று இழிவாகப் பேசி வந்தார்கள். இந்திய மக்களை ஆயுத பலத்தால் அடக்கி ஆண்டார்கள். சிறையில் தள்ளியும் தூக்கிலேற்றியும் கொடுங்கோல் ஆட்சி நடத்தினார்கள். ஆயினும், எதற்கெடுத்தாலும் 'விதியின் வினை' என்று தலையிலடித்துக் கொள்ளும் அப்பாவி மக்கள் என்றும், 'செயலற்றுக் கிடக்கும் சிந்தையினர்' என்றும் இந்திய மக்களை இழித்தும் பழித்தும் பேசி, போலிப் பச்சாதாபம் பாராட்டினர்.

இந்தியா ஒரு ''விசித்திரமான நாடு'' என்று வருணிக்கப்பட்டது. மேம்போக்காகப் பார்த்தால் இவ்வாறு கூறுவதில் குற்றம் எதுவும் இருப்பதாகத் தோன்றாமலும் இருக்கலாம். ஏனெனில் இந்தியா ஒரு மிகப் பெரிய நாடு; பல்வேறு வகைப் பாகுபாடுகளையுடையது; தொன்மை மிகுந்த வரலாறும் பல்வகைப்பட்ட கலாச்சாரங்களும் விநோத பழக்க வழக்கங்களும் பெற்றிருப்பது. ஆனால் ஐரோப்பியர்கள் பலர் இந்தியாவைத் தெரிந்து கொள்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் விரும்பவில்லை. இது விஷயத்தில் 'விசித்திர நாடு' என்பது அவர்களுக்கு ஒரு சால்ஜாப்பாகப் பயன்பட்டது. இந்தியர்கள் உலகத்தாரோடு கலக்காமலும், முன்னேற்றப் பாதையில் மற்றவர்களுடன் ஒன்று சேராமல் ஒதுங்கியும் வாழ்ந்து வருவதாக மேலைய நாடுகளிலே எழுதப்பட்டு வந்தது. ஆனால் ஐரோப்பியர்கள் இந்தியர்களுக்கும் தமக்கும் இடையில் ஒரு பெரும் சுவரை எழுப்பிக் கொண்டு, இந்தியர்களைப் பற்றிய தவறான எண்ணங்களுடனும் மேம்போக்கான கருத்துக்களுடனும் வாழ்ந்து வந்ததைப்பற்றி ஒன்றும் எழுதியதில்லை. ஆயினும், இந்தியாவின்பால் அன்பும் நேசமும் பாராட்டிய உண்மையான ஐரோப்பியர்கள் இல்லாமல் போகவில்லை. இந்தியாவின் கலாச்சாரத்தைப்

படித்தறிவதிலே தமது வாழ்நாள் பூராவையும் அர்ப்பணித்த அறிஞர்கள் பலரை நாம் குறிப்பிட முடியும். பிரெஞ்சு அறிஞர் கலேவியும், ஆங்கில அறிஞர் ஹேவெல்லும், ரஷ்ய அறிஞர் செச்செர் பெட்ஸ்கியும் மற்றும் பலரும் இதற்கு உதாரணமாவர். உலகெங்குமிருந்த மொழிவல்லுநர்கள் யாவரும் சமஸ்கிருதம் பயின்றார்கள் என்பதையும் நாம் அறிவோம். "சாகுந்தலம்" 18-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே பல்வேறு ஐரோப்பிய மொழிகளில் பெயர்க்கப்பட்டது. மகாபாரதத்தில் ஒரு பகுதியான "பகவத்கீதை"யின் ரஷ்ய மொழி பெயர்ப்பு முதன் முதலில் 1788-ல் வெளியாயிற்று. இந்தியாவின் புராதனக் கலைகளைப் பற்றி பிரமாதமான ஆராய்ச்சிகள் பல வெளியாயின. பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலை இந்திய சிற்பங்கள் பலவற்றைப் பெற்றிருந்தது. இது குறித்து அதன் பொறுப்பாளர்கள் நியாயமான பெருமிதம் கொண்டனர். ஆயினும் மிகப் பெரும்பான்மையான மேற்கு ஐரோப்பிய அறிஞர்களுக்கும் அமெரிக்க அறிஞர்களுக்கும் இந்தியா புரியாத புதிராகவே இருந்து வந்தது. விஷயம் தெரியாமல் இருந்தால், அதை மன்னித்து விடலாம். ஆனால் இந்தியாவைப்பற்றி ஒன்றுமே அறிந்திராதவர்கள் பலரும், தமக்கு எல்லாம் தெரியும் என்று நம்பிக்கொண்டிருந்தது தான் படுமோசமானது. அவர்கள் இந்தியாவைப்பற்றி பல தவறான கருத்துக்களைக் கொண்டிருந்தனர்.

அறு சுவை உணவு

குழம்பும் கறியும் சேர்ந்த காரசாரமான உணவுதான் இந்தியர்களுக்கு மிகவும் பிடித்தமானது. மிளகும், மஞ்சளும், ஏலக்காயும், இதர மசாலா சாமான்களும் இல்லாமல் அவர்கள் சமையல் செய்யமாட்டார்கள். ஆங்கிலேயர்களின் உணவு 'சப்' பென்றிருக்கும். பரம்பரையாக "பாரிட்" ஜும், "புட்டிங்"கும் சாப்பிட்டு வருபவர்கள் எப்பொழுதாவது ஒரு நாள் காரசாரமான அறுசுவை உணவு அருந்தினால், அது ருசியாகத்தான் இருக்கும். பல ஐரோப்பியர்களுக்கு இந்திய நாடு இத்தகைய அறுசுவை உணவாகவே இருந்தது. வழக்கமான வரவு செலவுத் திட்டங்களையும் வாடகைகளையும் பள்ளிக்கூட நீதிநெறிப் பாடங்களையும் வர்த்தகப் புள்ளி விபரங்களையும் பார்த்துப் பார்த்து அலுத்துப்போனவர்களுக்கு இது புது தெம்பும் ஊக்கமும் அளித்தது.

ஆங்கிலேய வர்த்தகர்கள் இந்தியாவிலிருந்து தேயிலையும், அரக்கும், சணலும், பருத்தியும் ஏற்றிக் கொண்டு சென்றனர். இந்திய நாடு கிப்ளிங்கின் கவிதைத் திறனைச் சிறகடித்துப் பறக்க வைத்து, குடும்பத் தொல்லைகளையும் பாங்கி மோசடிகளையும் திரும்பத் திரும்ப எதிர் நோக்கி மனம் சலித்துப்போன ஐரோப்பியர்கள் பலர், கிப்ளிங்கின் இதமான கவிதையை மனமார வரவேற்றனர். மனிதன் செல்லமுடியாத பயங்கரக் காடாக சித்தரிக்கப்பட்டது, இந்தியா. துணிச்சல் மிகுந்த தீரர்கள் இருள் சூழ்ந்த இக்காட்டில் புகுந்து வெற்றி காண்பதாகவும் வருணிக்கப் பட்டது. பலரும் இச்சித்திரத்தை உண்மை என்றே நம்பினர். போர்ப்படைகளின் நெருப்புக் கோளங்களாலும், வெற்றியார்களின் சொக்கப்பானைகளாலும் இருள் நீக்கப்படுவது போல் தோன்றியது.

மேலைய நாடுகளிலே, முக்கியமாக தென்னிந்தியாவின் கோயில்களிலிருந்துதான், புராதன இந்தியாவின் கலையைப்பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் எனலாம். பதினேழாம் நூற்றாண்டிலே கட்டப்பெற்ற கோயில்கள் அலாதியான உருவ அமைப்புடன் விளங்குகின்றன. இக்கோயில்களிலே ஆயிரக்கணக்கான யானைகளும், குதிரை வீரர்களும், தெய்வங்களும், நாட்டிய நங்கைகளும் ஒரே கதம்பமாக, சிலை வடிவிலும் சித்திர வடிவிலும் காட்சி அளிப்பதைக் காணலாம். அப்பதினேழாம் நூற்றாண்டின் கலைக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும்,

நான்கு புஜமுடைய நடனமாடும் சிவனின் வெண்கலச்சிலையையோ அல்லது கவர்ச்சியூட்டும் கோணங்களிலே ஒய்யாரமாக நிற்கும் தேவதாசியின் சிலையையோ பெற்றில்லாத பொருட்காட்சி சாலையையே ஐரோப்பாவில் எங்கும் கண்டிருக்க முடியாது. 18ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றிய விசித்திரக் கலைப்பணிக்கு ஒப்பானது இது. நுண்ணிய விபரங்களை அளவுகடந்து சித்தரித்த இந்தக் கலையில் உணர்ச்சி பாவத்தையோ, அமரத்துவத்தையோ, உத்வேகத்தையோ காண முடியாது. அழகானதாயினும் ஜீவனற்றதாகவுள்ள இவற்றை, மேலைய நாடுகளின் சரித்திர ஆசிரியர்களும் கலை ரசிகர்களும் பெரிதும் விரும்புவானேன்? அவர்களைப் பொறுத்தவரையில் ''விசித்திர இந்தியா''வின் தனிச் சிறப்பிற்கு தேவதாசியின் வெண்கலச் சிலையே எடுத்துக்காட்டாகத் தோன்றுகிறது எனலாம். நாட்டிய ஜிட்டனாசும், காஸ்டனெட் தாளமும், விசித்திர மேலாடைகளும் போன்று ஸ்பானிஷ் நாட்டின் பண்பிற்குப் புறம்பாகவுள்ள வெறும் பகட்டுப் பொருள்களிடத்தில் அன்னியர்கள் கொண்டுள்ள வெறிக்கு, ஸ்பானிஷ்மக்கள் ''எஸ்பக்னோலாதா'' என்று பெயர் வைத்துள்ளனர். இதேபோல் இந்தியாவின் உண்மைச் சிறப்பைக் கவனியாது, புறப்பாற்பட்ட இரண்டொரு வினோத அம்சங்களையே பெரிதாகக் கருதும் போக்கை, ''இந்தியதா'' என்று கூறலாம். மேற்கத்தியர் சிலரின் ''இந்திய அபிமானம்'' இவ்வகைப்பட்டதே. மகோன்னதமான எல்லோரா, அஜாந்தா, எலிபென்டா சின்னங்கள் சரித்திரப் புகழ் ஜ்வலிக்கும் மாணிக்கங்களாகத் திகழ்ந்தன என்றபோதிலும், அவற்றை மேற்கத்தியர்கள் யாரும் கவனிக்கவில்லை. நமது சகாப்தத்தின் மாபெரும் கணித மேதைகளில் ஒருவரான ராமானுஜம் நீள்வட்ட இன்டிக்ரல்களை கண்டுபிடித்தார். இத்தகைய பெரியார் மிகவும் துயரமான சூழ்நிலையிலே மடிந்துகொண்டிருந்தார்: சொல்லொணா கஷ்டங்களுக்கிடையே பணி ஆற்றிவந்தனர். பௌதிக விஞ்ஞான மேதைகள் போஸும், ராமனுஜமும் ஆனால் அன்று, மேலைய நாடுகளின் விஞ்ஞானிகள், தமது ஆராய்ச்சி வேலைகளை இந்தியாவின் அறிஞர்களுடனோ அன்றி அவர்களுக்கு ஏற்பட்ட சோக நிலையுடனோ உறவுடையதாகக் கருதியதில்லை. மக்களின் போராட்டங்களையும், எழுச்சிகளையும் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் அனேகமாக இருட்டடிப்பு செய்யப்பட்டன. இந்திய மக்களின் வாழ்க்கையையும் எதிர்காலத்தையும்விட, பிரான்சில் ஏற்படும் ஏதோவொரு மந்திரிசபை நெருக்கடியே மேலைய வட்டாரத்தினருக்கு முக்கியமாகத் தோன்றி வந்தது.

மேலைய நாட்டவர் எல்லோருமே இவ்வாறு இல்லை. இதற்கு விதிவிலக்குகள் இருந்தன என்பதை நான் அறிவேன். ரவீந்திரநாத் தாகூரின் கவிதைத் திறனையும் மேதா விலாசத்தையும் அவர் உயர்த்திப்பிடித்த இலட்சியங்களையும் கண்டு, மேலைய நாடுகள் சிறிதுநேரம் திகைத்துப்போயின என்பது உண்மை. மஹாத்மா காந்தி முதன்முதலில் தொடங்கிய உண்ணாவிரதப் போராட்டங்களைப் பற்றிய செய்திகள் உலக செய்திப் பத்திரிகைகள் யாவற்றிலும் வெளியிடப்பட்டன என்பதும் வாஸ்தவம். ஆனால் இது கிழக்குலகிலிருந்து கிடைக்கும் ''பலே செய்தி''யாகவே—கீழ்நாடுகளில் காணப்படும் விசித்திரங்களில் ஒன்றாகவே—கருதப்பட்டது. இந்தியாவின் எதிர்காலத்தில் அவர்கள் கொண்டிருந்த உண்மையான ஆழ்ந்த அக்கறையாக இதைக் கூற முடியாது என்பதில் ஐயமில்லை.

சன்மார்க்கத்தில் நம்பிக்கை

இந்தியாவின் அதிசயங்களைப் பற்றி திருமதி பிளவாட்ஸ்கி எழுதியுள்ள புத்தகத்தை சிறு பையனாக இருந்த சமயத்தில் படித்திருக்கிறேன். இந்த ரஷ்ய அம்மையாரின் உருவச்சிலை சென்னை தியசாபிகல் கழகத்திலே வைக்கப்பட்டிருப்பதை நான் பார்த்தேன். இவர் தேவதாசிகளைப் பற்றி அக்கறை

செலுத்தவில்லை; பல்வேறு மத நம்பிக்கைகள், பழைய ஐதீகங்கள், மத வழிபாட்டுச் சடங்குகள், மத வேறுபாடுகள், துறவறம், சன்னியாசிகள் முதலிய விஷயங்களிலேயே கருத்து செலுத்தினர். பெஸண்ட் அம்மையாரைப் போல் இவ்வம்மையாரும் தியாசாபியின் ஸ்தாபகர்களில் ஒருவராக மதித்துப் போற்றப்படுகிறார். சகோதர வாஞ்சையையும் பரஸ்பர உதவியையும் வலியுறுத்திய பழங்கால பிரீமஸான்களின் கருத்துக்களில் ஏராளமானவை தியசாபியில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், இந்தியாவின் கீர்த்தி நிழலில் அது நிற்பதனால் அதற்கு ஒருவிதமான பெருமையும் ஏற்பட்டுள்ளது. இதனால் ஹாம்ஸ்டெட் அல்லது சார்லோடென்பெர்க்கி மந்தமான சொகுசுடன் அறிவுபூர்வமானதெய்வீக மறை உண்மையும் சேர்ந்து வளமடைந்துள்ளது போல் தோன்றுகிறது. இதில் சிலர் விஷயத்தில் ஏமாற்றுவித்தையே ஆன்மீகத்துக்குப் பதிலாக பயன்பட்டு வருகிறது. தியசாபிஸ்டுகளின் புண்ணிய பூமியாக இந்தியா கருதப்பட்டது. அவர்கள் பலமுறை சுற்றி அலைந்ததினால் நன்கு அறிந்திருந்த ஐரோப்பாவில் காண முடியாதவற்றையெல்லாம், இந்தியாவின் புராதன நூல்களிலும் பழங்கால ஐதீகச் சடங்குகளிலும் கண்டார்கள். இந்திய மக்களின் விடுதலைப் போராட்டத்தின் போது, பெஸண்ட் அம்மையாரும் மற்றும் சில தியசாபிஸ்டுகளும் ஒடுக்கப்பட்ட மக்களிடத்திலேயே அனுதாபம் காட்டினர் என்பது உண்மையே. ஆயினும் இதனால் பொதுவான சித்திரத்தின் தன்மை மாறிவிடவில்லை, பல ஐரோப்பியர்களும், அமெரிக்கரும் தியசாபிஸ்டுகளின் கண்கொண்டே முதன்முதலில் இந்தியாவை நோக்கினர். இதனால்தான் உண்மையான இந்தியாவைக் காண்பதற்குப் பதிலாக திருமதி பிளாவட்ஸ்கிக்கு வியப்பளித்த பல்வேறு விசித்திரங்களைத்தான் அவர்கள் பார்த்தனர்.

''யோகம்'' என்ற வார்த்தையை அறியாத ஐரோப்பியரையோ, அமெரிக்கரையோ பார்க்க முடியாது. பண்டைய இந்தியாவின் மதச்சார்புடைய தத்துவார்த்தக் கருத்துக்கள் கொச்சை யடைந்தும் சிதைக்கப்பட்டும் மேலைய நாடுகளுக்கு எட்டுவதுண்டு. அவ்வாறு மேற்கு நாடுகளில் பிரபல்யம் அடைந்தவற்றில் ஒன்றே ''யோகம்.'' பங்கு மார்க்கெட்காரர்களும் ''நவ நாகரீக'' நாரீமணிகளும், எழுத்தாளர்களும், சூதாடிகளும், மூக்கைப் பிடித்துக் கொண்டும், மூச்சை அடக்கிக் கொண்டும் என்னென்னமோ விதமான கவாத்துகள் எடுக்க ஆரம்பித்தனர். இறைவனுடன் ஞானமொழி பேசுவதற்குக் கனவு கண்டனர் சிலர். சிலர் நிர்வாண நிலையெய்தி, கற்பனை மோட்சபுரியில் இன்பம் துய்க்க ஆசை கொண்டனர். சிலர் ''எங்கும் நிறை நாத பிரம்மமாக'' மாறிவிட முடியும் என்று கோட்டை கட்டினர். யோகங்களைப் பற்றி சுவையான சிறு பிரசுரங்களும், எண்ணிலடங்கா நாவல்களும், கவிதைகளும் எழுதப்பட்டன.

19-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த இந்து மத தத்துவ ஞானியான விவேகானந்தருடைய சீடர்கள், புதுவை நகரில் தமக்கென ஒரு பெரிய ஆசிரமத்தை நிறுவிக் கொண்டுள்ளனர். வங்கம் ஈந்த இப்பெரியாரின் ஆழ்ந்த மனிதாபிமானத்தால் கவர்ச்சிக்கப் பெற்ற ரோமன் ரோலண்டு, அன்னாரைப் பற்றி ஒரு புத்தகம் எழுதினர். விவேகானந்தர் இந்து மதத்தில் பூரண நம்பிக்கையுடையவராயினும், சமுதாய முன்னேற்றத்தை ஆர்வமுடன் ஆதரித்தார்; இந்திய மக்களை ஒடுக்கிய அயலாரைக் கண்டித்தார்; காலத்திற்கொவ்வாத ஐதீகச் சடங்குகளை எதிர்த்தார். அவருடைய பெயர் மேலை நாடுகளில் தெரியலாயிற்று. ஆனால் அவரது போதனைகளின் மனிதாபிமான அம்சமும் முற்போக்கு அம்சமும் அவர்களால் கவனிக்கப்படவில்லை. மூடப்பழக்கங்களுக்கும், ஜாதித் திமிருக்கும் எதிராக அவர் எழுப்பிய குரலையும், அஞ்சா நெஞ்சத்துடன் ஒன்றுதிரண்டு நாட்டை விடுவிக்க முன்வரவேண்டும் என்று

அவர் தனது தேசத்தவருக்கு விடுத்த அறைகூவல்களையும், மேற்கத்தியர்கள் கவனிக்கவில்லை. விவேகானந்தர் மேற்கத்தியர்களைப் பொறுத்தமட்டில், புரியாப் பொருளான வேதாந்தத்தைப் பற்றிப் பேசும் மதவெறி பிடித்த இந்துவாகவே தோன்றினர். இப்பொழுது புதுவையிலுள்ள ஆசிரமம், மூக்கியமாக அமெரிக்காவிலும் மேலைய ஐரோப்பாவிலுமுள்ளவர்கள் அளிக்கும் நிதிகளைக் கொண்டே நடத்தப்பட்டு வருகிறது. லட்சக்கணக்கான வங்காளிகள் பட்டினி கிடந்து கொண்டிருந்தார்கள் என்பது விவேகானந்தரின் அயல்நாட்டுச் சீடர்களுக்குத் தெரிந்துதான் இருந்தது. பண்டைப் பெரும் வேத நூல்களைப் படிப்பதன் மூலமும், விவேகானந்தரின் போதனைகளைத் தியானிப்பதின் மூலமும், உபநிஷத்துக்களில் கூறப்படும் அகவொளியை—பேரின்பத்தை—அடைய முடியும் என்று அவர்கள் எண்ணினர்கள்.

யோக நித்திரையில் ஆழ்ந்துள்ள ரிஷியைக் கண்டால் ஏற்படும் அச்சத்துடனும் அல்லது அருவருப்புடனும்தான் மேலைய நாட்டவர்கள் இந்தியாவைப்பற்றிப் பேசினர்கள். பிரபுத்துவ காலப் பழக்கங்கள் பலவும் இன்னமும் இந்தியாவில் நீடித்திருக்கிறது என்றும் அறிஞர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் இஷ்ட தெய்வமாக விளங்கும் யானை முகமுடைய கணபதிக் கடவுளை இந்தியர்கள் தொழுது வருவருகின்றனர் என்றும் சிலர் ஆனந்தப் பள்ளு பாடியதையும் நாம் கண்டிருக்கிறோம். வேறு சிலர் இந்தியாவின் ''பிற்போக்கை''க்கண்டு, ஆத்திரமடைகின்றனர். மேலும் லிவர்பூல் பெருமுதலாளிகள் அல்லது அமெரிக்க வணிகர்கள் பழக்க வழக்கங்களையும் ஒழுக்க விதிகளையும் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றுவதற்கு இந்தியர்கள் மறுக்கிறார்களே என்று சினம் கொள்கின்றனர்.

வீண் பயம்

இந்தியாவைப்பற்றி அவர்கள் திரித்துள்ள சரடுகளும் கட்டுக்கதைகளும் கணக்கிலடங்கா! மூன்னூறு மொழிகள் இருப்பதாகவும், எனவே சுயேச்சை வாழ்க்கை சாத்தியமில்லை என்றும் அவர்கள் வாதாடவில்லையா? ஆனல் பிரிட்டிஷ் சர்க்கார் அளித்த புள்ளி விபரங்களின்படியே ''நோரா'' என்ற மொழி பேசும் மக்களின் எண்ணிக்கை எண்ணி இரண்டே இரண்டுதான் என்பதைப்பற்றி அவர்கள் ஒன்றும் கூறியதில்லை. இந்தியர்கள் மதவெறி பிடித்தவர்கள் என்றும், பிரிட்டிஷ் இராணுவம் வெளியேறினல் உடனே இந்திய மக்கள் ஒருவரை கடித்துத் தின்றுவிடுவார்கள் என்றும் சாதிக்கப்பட்டது.

இந்தியர்களின் வறுமைக்கு இந்தியர்களேதான் காரணம் என்று பழிகூறினர்கள், மேலைய நாடுகளின் ''கொடை வள்ளல்கள்''. ஆனல் இந்தியாவிலிருந்து, மேலைய நாடுகள் அடித்த அளவிலாக் கொள்ளையைப்பற்றி, அவர்கள் ஒன்றுமே கூறியதில்லை. ''ஜனப்பெருக்கம்'' ஏற்பட்டிருப்பதாகக் கயிறு திரித்து, இதுவே இந்திய மக்களின் வறுமைக்குக் காரணம் என்று பகர்ந்தார்கள். ''இந்திய நாட்டை ஏன் நாசப்படுத்துகிறீர்?'' என்று காலனி அதிபர்களை அதட்டிக் கேட்பதற்குப் பதில், ''பிள்ளைகளைப் பெற்றுக் கொஞ்சுவதற்கு என்ன துணிச்சல் உங்களுக்கு?'' என்று இந்தியப் பெண்களைப் பார்த்து ஏசினர்கள்! ஆனல் புள்ளி விபரங்கள் இவர்களது புரட்டை அம்பலப்படுத்தி விட்டது. இந்தியாவின் ஜனப்பெருக்க விகிதத்தை விட இரண்டு மடங்கு அதிகம் ஐரோப்பாவின் ஜனப்பெருக்க உலக வறுமைக்கும் இன்னல்களுக்கும் காரணம் என்ற தத்துவத்தை உருவாக்கிய மால்தஸின் ஆர்வமிக்க சீடர்களில் ஒருவரான வோக்ட் என்பவர், ''இந்தியாவில் ஆண்-பெண் உறவுகள் தேசியக் களியாட்டமாக விளங்குகின்றன'' என்றும், இதுவே அவர்கள் பட்டினியால் அவதியுறுவதற்குக் காரணம் என்றும் கூறியுள்ளதை ஜே. டி. காஸ்ட்ரோ சுட்டிக்காட்டியுள்ளார்.

சிட்வெல் குறைகூறும் சிற்பம்

வேறு காரணங்களுக்காக இல்லாவிட்டாலும்கூட, தியசாபிஸ்டுகளின் காரணமாயும், யோகங்களின் காரணமாயும் இந்தியாவைப் போற்றிப் புகழ்ந்த பைத்தியக்காரர்கள் பலர் மேலைய நாடுகளில் இருந்திருக்கலாம்; ஆனால் இந்தியாவை இழித்தும் பழித்தும் பேசியவர்களின் எண்ணிக்கைதான் அதிகம். இந்தியர்களிடம் மனிதப் பண்பு கிடையாது என்றும் அவர்களை சாதாரணமாகவே சின்ன விஷயங்களில்கூட நம்ப முடியாது என்றும், அப்படியிருக்க பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ''மணி மகுடமாக'' விளங்கிய இந்தியாவை அவர்களிடம் நம்பி விட்டு வைப்பது கூடாது என்றும் சில ஆங்கில ''ஒழுக்கசீலர்கள்'' எழுதினார்கள். பண்டைப் பெரும் இந்திய இலக்கியங்கள் மனிதனின் சித்தத்தையும் உயிர் சக்தியையும் நசிக்கச் செய்திடும் தன்மையன என்றும் கூட சில மேலைய நாட்டு ''அறிஞர்கள்'' திருவாய் மலர்ந்தருளினர். இருபதாம் நூற்றாண்டிலே ஜாதிப் பிரிவினைகள் இருந்து வருவது ஒன்றே போதும், ஆதிகால இதிகாச நூல்களான ராமாயணத்தையும், மகாபாரதத்தையும் கழுவில் ஏற்றுவதற்கு, என்று இப்பிரகஸ்பதிகள் பேசினார்கள். இவ்வாறு பண்டைப் பெரும் இந்தியக் கலைகளின் முகத்தில் கரியைப் பூசி, அவற்றைக் கேவலப்படுத்தினர். இந்தியக் கலைப் படைப்புகளின் எழில், பெரும்பாலும் அருவருக்கத்தக்க ஆபாசத்தினால் களங்கப்படுத்தப்பட்டுள்ளன என்று, இங்கிலாந்தில் ஓரளவு செல்வாக்குப் படைத்துள்ள சிட்வல் துரை செப்பியுள்ளதை ஜவாஹர்லால் நேரு அவர்கள், ''இந்தியாவைக் கண்டறிந்தேன்'' என்ற தனது நூலில் சுட்டிக்காட்டிக் கண்டித்திருக்கிறார்.

''இந்தியர்களின் முகம் மந்தமான, கீழ்த்தர புத்தியுடையவர்களை நினைப்பூட்டுகிறது. பொய் சாட்சி சொல்லும் மோசடிக்காரர்களின் முகத்திற்கும் இவர்களின் முகத்திற்கும் வித்தியாசம் இல்லை. அவர்களும் சரி, அவர்களது வீடுகளும் சரி, விகாரமாக உள்ளன.'' சிட்வலைப் போலவே மிச்சச் என்பவர் இந்தியக் கலைகளும், காளிதாசனின் படைப்புகளும் ஆபாசமானவை என்று குற்றம் சாட்டுகிறார். மிச்சத் தனது புத்தகத்திற்கு ''ஆசியாவில் ஒரு காட்டுமிராண்டி'' என்று கேலிப் பாணியில் பெயர் சூட்டியிருக்கிறார். இந்தக் காட்டுமிராண்டி பத்துப் பன்னிரெண்டு புத்தகங்களின் ஆசிரியன் என்றபோதிலும், விழுமிய இந்திய கலாச்சாரத்தின் முதல் பாடத்தைக்கூட கற்றறிய முடியாத கபோதியாக விளங்குகிறான்.

மனோபாவம் மாறிவிட்டது!

பத்து வருடங்களுக்கு முன்னால், ஜவாஹர்லால் நேரு, அகமத்நகர் கோட்டையிலே கைதியாக வைக்கப்பட்டிருந்தார். இன்று ஈடனும் டல்லஸும் அவரது ஆதரவைக் கோரி நிற்கின்றனர்; உலகம் பெரிதும் மாறி விட்டது! ★

ஹாஸ்ய சம்பவம்

ஹாஸ்ய சம்பவம் எவ்வளவோ உங்கள் வாழ்க்கையில் ஏற்படடிருக்கும் அவைகளைப்பற்றி 100 வார்த்தைகளுக்குள் எழுதப்படவேண்டும். பிரசுரிக்கப்படும் எல்லாவற்றிற்கும் சன்மானம் வழங்கபபடும்.

ஆசிரியர்: 'திங்கள்' 17. ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு. சென்னை–2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

"ஆள் எடுக்கிறார்கள்"

நான் பி. காம் பரீக்ஷை எழுதியவுடன் வேலைக்காக என் மாமா வீட்டிற்கு வந்தேன். நாலைந்து மாதமாக மதராஸில் வேலை தேடி வருகிறேன். சென்றவாரம் என் மாமாவிற்கு தெரிந்த ஒருவர் வந்திருந்தார். அவரிடம் நான் தங்களுக்கு தெரிந்த இடங்களில் ஏதாவது வேலை காலி இருக்குமா என்று வழக்கம்போல் கேட்டேன். அவர் அதற்கு "மவுண்ட் ரோடு அருகில் உள்ள ஒரு பெரிய மோட்டார் தொழிற்சாலையில் ஆள் எடுக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். போய்உடனே பார்" என்றார். விலாசமும் தந்தார். 'கஞ்சிவரதப்பா என்றால் எங்கே வரதப்பா?' என்ற மனோநிலையில் உள்ள நான், உடனே விண்ணப்பத்துடனும் நற்சாக்ஷி பத்திரங்களுடனும் அவர் சொன்ன இடத்திற்கு விரைந்தேன். மானேஜரைப் பார்த்தேன். அவர் என் நிலைமையைக் கேட்டுவிட்டு, "அப்பா, நாங்கள் ஆள் எடுக்கிறோம் என்பதைத் தவறுதலாகப் புரிந்துகொண்டு, அப்பெரியவர் சொல்லியிருக்கிறார். உண்மையில் நாங்கள் "ஆட்களை வேலையிலிருந்து எடுக்கிறோம்" என்றார் வருத்தமாக. எனக்கு இந்த ஏமாற்றம் வருத்தத்தை அளித்தபோதிலும், இந்த ஹாஸ்ய சம்பவம் என்னை அச்சமயம் சிரிக்க வைத்தது.

பானு,
மதராஸ்-2.

ஏமாற்றுபவன் ஏமாறுகிறான்

ஒரு வருடத்திற்குமுன் நான் பெரம்பூரிலிருந்தேன். அப்போது என்னிடம் ஒரு செல்லாத எட்டணா கிடைத்தது. இதை மாற்றுவதற்கு என்ன முயன்றும் முடியவில்லை. ஒரு நாள் எனக்கு ஒரு யுக்தி தோன்றியது. அதன்படி ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிராக உள்ள ஒரு ஓட்டலில் எட்டணாவுக்கு டிபன் சாப்பிட்டுவிட்டு, கல்லாவிலே அவசரமாகச் செல்லாத துட்டைப் போட்டுவிட்டு வந்துவிட்டேன்.

மறுநாள் மவுண்ட் ரோடிலிருந்து பெரம்பூருக்கு நானும் ஒரு நண்பனும் போய்க் கொண்டிருந்தோம். கண்டக்டரிடம் சில்லறை இல்லையாதலால், பெரம்பூர் ஸ்டேஷனில் நான் கொடுத்த ஒரு ரூபாயை மாற்றி பாக்கி எட்டணாவைத் தருவதாகச் சொன்னான்.

ஸ்டேஷன் வந்ததும், கண்டக்டர் இறங்கி, பழைய ஹோட்டலிலேயே சில்லறைமாற்றி என்னிடம் எட்டணாவைத் தந்தான். நான் பஸ்ஸைவிட்டுக் கீழே இறங்கினேன். உடனே முந்தைய நாள் சம்பவம் ஞாபகத்திற்குவரவே, திடீரென்று எட்டணாவை எடுத்துப் பார்த்தேன். அந்தப்பழைய செல்லாத எட்டணா என்னைப் பார்த்துச் சிரித்தது.

எஸ். ஹரிஹரசுப்ரமண்யம்.
மதராஸ்-31.

உயிருடன் புதைத்தல்

நான் படித்த கல்லூரியில், நூல் நிலையத்திலிருந்து புத்தகங்கள் வாங்கிப் படித்துவிட்டு அவற்றை திரும்பக் கொடுக்கும்போது, அந்தப் புத்தகத்தை வாங்கிய மாணவனின் பெயர், புத்தகத்தின் பெயர், அதை திரும்பக் கொடுக்கும் தேதி இவ்விவரங்கள் அடங்கிய சீட்டு ஒன்றையும் எழுதி உடன் கொடுத்து, அதில் நூல் நிலைய அதிகாரியின் கையெழுத்தைப் பெற்று, திரும்ப வாங்கிக் கொள்ள வேண்டும் என்ருெரு விதி இருந்தது. இந்த விதியைப் பின்பற்றி, ஒரு முறை நான் ஆர்னல்ட் பென்னெட் என்னும் ஆங்கில நாவலாசிரியர் எழுதிய 'பரீட் எலைவ்' (உயிருடன் புதைக்கப் பட்டான்) என்ற புத்தகத்தை வாங்கிப் படித்துவிட்டு அதை திரும்பக் கொடுக்கும்போது, உடன் வைத்திருந்த சீட்டைப் பார்த்ததும், சுபாவத்தில் பெரிய முசுடான அந்த நூல்நிலைய அதிகாரிக்கு கூட அடகக முடியாமல் சிரிப்பு வந்துவிட்டது. ஏனென்ருல் நான் எழுதிவைத்த சீட்டு இதுதான்,

'உயிருடன் புதைக்கப்பட்டான்'

பி. ஸி. நடராஜன்,
20-5-56

பி. ஸி. நடராஜன்.
ஆல்வாய்.

அரண்டவன் கண்ணுக்கு...

நான் வைத்தியக்கல்லூரி மாணவன். என் அறையில் ஒரு மண்டையோடு என்மேஜைமீது வைத்திருக்கிறேன். ஒருநாள் இரவு என் நண்பர் ஒருவர் இரவு சினிமா பார்த்துவிட்டு என் அறையில் தங்கினர். அவர் இதற்குமுன் என் அறைக்கு வந்ததில்லை.

இரவு பன்னிரண்டு மணிக்கு மேலிருக்கும், திடீரென்று என் நண்பர் ''ஐயோ! ஐயோ! அங்கே பாரேன்?'' என்று என்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பினர். நானும் மிரண்டு எழுந்தேன். என் மேஜை மீதிருந்த மண்டை ஓட்டைச் சுட்டிக்காட்டினர் நண்பர். அது மேஜைமீது நகர்ந்து கொண்டிருந்தது.

''ஐயோ! நான் இங்கு இருக்க மாட்டேன்...'' என்று பயத்தில் பிதற்றியபடி எழுந்து ஓட முற்பட்டார் அவர்.

நானும் சற்றுத் திகைத்தபடியே அறை விளக்கைப் பொருத்தினேன். பளிச்சென்ற ஒளிபரவவே மண்டை ஓடு நகர்வது நின்றது. உற்று கவனித்தேன். மண்டையோட்டிலிருந்த கண்துவாரத்தின்வழியே ஒரு சுண்டெலி தாவிக்குதித்து ஓடுவதை நான் கண்டவுடன் நண்பரையும், அழைத்தேன். ஆனல் அவர் பய மிகுதியால் உள்ளேவர மறுத்து விட்டார். என்ன தைரியம் கூறியும் அவர் பயம் அவரை விட வில்லை. அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் தானே?

சுந்தரராமன், கிண்டி.

வாசகர்களுக்கு

'ஹாஸ்ய சம்பவம்' பகுதிக்கு அனுப்பப்படும் விஷயதானங்கள் சுருக்கமாகவும், உண்மை நிகழ்ச்சியாகவும், ஹாஸ்யச் சுவையுடனும் இருக்கவேண்டும். பிரசுரிக்கத் தகுதியற்றவற்றைத் திருப்பியனுப்ப இயலாதென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இது சம்பந்தமாகக் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ள இயலாது.

—ஆசிரியர்.

காப்பகம் ... 600 008

சிறந்த பொழுது போக்குப் புத்தகங்கள்

சிரஞ்சீவி எழுதிய பயங்கர நாவல்கள்

மர்மம் நிறைந்த மாயவில்லா	1	0	0
சூனியக்காரி	1	0	0
பேய் வீடு	1	8	0
சூறைக்காற்று	1	8	0
மரணயாத்திரை	1	8	0
நீதிமயக்கம்	1	0	0
காதலன் கொலை வழக்கு	1	4	0
மர்மத்தீவு	1	4	0
கல்நெஞ்சன்	1	8	0
மர்மக்கொலை	1	0	0
ரத்தப் பசி	1	4	0
பயங்கர மனிதன்	2	0	0
பறக்கும் தட்டு	2	0	0
சவப்பெட்டி	1	8	0
ஆகாசக்கோட்டை	2	0	0

மேதாவி எழுதிய துப்பறியும் நாவல்கள்

துப்பறியும் ராஜு	1	0	0
ரகசிய அறை	1	4	0
பச்சை மாளிகை மர்மம்	1	4	0
மாய மனிதர்கள்	1	4	0
சூரக்கோட்டை மர்மம்	1	8	0
மலையாளச்சிட்டு மர்மம்	1	8	0

இளவேனில் எழுதியது

புதுமணத் தம்பதிகளுக்கு	2	4	0

அரு. ராமநாதன் எழுதிய புத்தகங்கள்

கோழிப் பந்தயம்	1	4	0
பழையனூர் நீலி	1	4	0
வேதாளம் சொன்ன கதைகள்	1	4	0

வியாபாரிகளுக்கு 25% கமிஷன் உண்டு. தேவையான பிரதிகளுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும். வி. பி. யில் அனுப்ப இயலாது.

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்,

17, ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு. சென்னை-2.

Regd No. M. 6739 THINGAL October 1956